Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 133 • 04.03.2018



## அம்பாறை இனவன்முறை



பண்ணைவீடு... பதினாறு வயது மனைவி
அல்ஹைதா தலைவர்!

# தமிழரசுக்கட்சியின் ரிமோட் கொன்ரோல் கனடாவில்!

2019... விக்னேஸ்வரன் ஸ்கெட்ச் போடும் இந்தியா!



# ஆனந்தபுரம் BOX இல் சிக்கிய புலிகள்






# ஆன்மிக கேள்வி - பதில்

**கோயிலுக்குச் செல்லும்போது முதலில் கோபுர வாயிலின் படியைத் தொட்டு வணங்கிவிட்டு உள்ளே செல்வது எனது வழக்கம்; முன்னோரைப் பார்த்துப் பழகியது. இப்போது, இதற்குக் காரணம் கேட்கிறாள் என் பேத்தி. எனக்குச் சொல்லத் தெரியவில்லை. அதற்கு விளக்கம் என்ன?**

துயில் எழுந்ததும் பூமித் தாயைக் காலால் மிதிக்கிறோம். தாயைக் காலால் மிதிப்பது தவறு என்பது நமது எண்ணம். ஆகையால் எழுந்தவுடன் பூமிக்கு வணக்கம் செலுத்துவது வழக்கம். 'பூமித் தாயே! மன்னித்துவிடு. நான் பல அலுவல்களில் ஈடுபட வேண்டியிருப்பதால் உன்னை மிதிக்காமல் செயல்பட இயலாது. எனது பாத ஸ்பரிசத்தைப் பொறுத்துக்கொள்!' என்று பூமித் தாய்க்கு முதல் வணக்கம் அளிப்பது நமது மரபு.

கோயில் வாசலில் படியைத் தாண்டிப் போக வேண்டும். சிலர், படியில் கால் வைத்துப் போக நேரிடும். கால் வைப்பதும், தாண்டுவதும் மனதுக்கு நெருடலை உண்டுபண்ணும்.

கோயிலில் வீற்றிருக்கும் தெய்வத்தின் உடலாகக் கோயிலை நினைக்கிறோம். அப்போது அதன் வாசலில் இருக்கும் படியை மிதிக்கும்போது அபசாரமென்று மனம் எண்ணுவதுண்டு. அதைப் பொறுத்துக் கொள்ளும்படி வேண்டுவதற்கு படியைத் தொட்டு வணங்குகிறோம். அது மனதில் ஏற்பட்ட நெருடலால் வந்த செயல்.

**வீட்டில் விளக்கில் ஊற்றும் எண்ணெய் மீதமாகி விட்டால், அதை மீண்டும் விளக்கேற்றுவதற்குப் பயன் படுத்தலாமா?**

இயற்கை அளித்த பொருள்களை வீணாக்குவது தவறு. அவற்றை உரிய முறையில் பயன்படுத்துவதே சரி. எண்ணெய்க்கு 'பர்யுஷாதம்' (பயன்படுத்திய மாசு) கிடையாது. எனவே, அதைத் திரும்பவும் பயன்படுத்தலாம். முதல் நாள் எண்ணெயில் பொரித்த வறுவல்களை மறுநாள் பயன்படுத்துவது உண்டு. அதேநேரம், எண்ணெயில் கசடு மண்டி, தூய்மை இழந்திருந்தால் மாற்றிவிட வேண்டும்.

**வீட்டில் சுந்தர காண்டம் படிக்க விரும்புகிறேன். அதற்கான நியதிகள் வழிமுறைகள் என்னென்ன?**

வாழ்நாள் முழுவதும் நித்ய பாராயணமாக சுந்தர காண்டத்தைப் பயன்படுத்தலாம். ராமா யணத்தின் சிறப்பு திருப்புமுனையை அறிமுகம் செய்தவர் ஆஞ்சநேயர். ராமனின் நாமம் ஒலிக்கும் இடத்தில் எல்லாம் ஆஞ்சநேயரும் இருப்பார். ராமாயணச் சொற்பொழிவில் அவருக்காக ஓர் இருக்கையை ஏற்படுத்தி இருப்பார்கள் (யத்ரயத்ர ரகுநாத கீர்த்தனம் தத்ரதத்ர க்ருதமஸ்தகாஞ் சலிம். பாஷ்பவாரி பரிபூர்ண லோசனம் மாருதிம் நம த ராஷஸாந்தகம்).

கண்ணைக்கட்டிக்காட்டில்விட்டது போல்தவிக்கும்மனிதஇனத்துக்குசுந்தர காண்டப் பாராயணம் வழிகாட்டும். திக்குத் தெரியாமல் தவிக்கும் பக்தன், சரியான திசையில் செல்வதற்கு சுந்தர காண்டப் பாராயணம் உதவும். தற்காலச் சூழலுக்கு உகந்த பாராயணம் அது.

நாள் ஒன்றுக்கு ஏழு சர்க்கங்களாக பாகுபடுத்திப் பாராயணம் செய்யலாம் 'ஸப்தஸர்க்க பாராயணம்' என்று சிறப்பாகக் கூறுவார்கள். பல அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் இன்றைய தலைமுறையினருக்குக் கால அவகாசம் கிடைப்பது அரிது. ஆகையால் விருப்பப்படி கால அவகாசத்தை ஏற்படுத்திக் கொண்டு சிறிய சிறிய பகுதியாகவும் பாராயணம் செய்யலாம்.

பித்ரு தினமாகிய அமாவாசை யன்று, வழக்கம்போல் இறை வழிபாடு களை முடித்துவிட்டு முன்னோர் ஆராதனையில் ஈடுபடலாமா?

**வழிபடும்போது, கவலைகளைக் கடவுளிடம் சமர்ப்பிக்கிறேன்' என்று சில தருணங்களில் அழுதே விடுகிறார் என் அம்மா. இது சரியா?**

**தாங்கள்தான் வழிகாட்ட வேண்டும்.**

அமாவாசை அன்று முன்னோர் ஆராதனை முடிந்த பிறகு, வழக்கமான இறைவழிபாடுகளைச் செய்யலாம். தேவர்கள் மற்றும் பித்ருக்கள் ஆகியோருக்கான வழிபாடுகளை ஒரே நேரத்தில் செய்ய வேண்டி வந்தால், முதலில் முன்னோர் களையே வழிபட வேண்டும். பிறகு தேவர்களை வணங்கலாம் என்கிறது தர்ம சாஸ்திரம்.

முன்னோர்களுக்கு முன்னுரிமை தர வேண்டும் என்பது சாஸ்திரத்தின் கருத்து. அதே நேரம், தினம் தினம் செய்யும் கடமைகளையும் நிறுத்தக் கூடாது. கவலையில் ஆழ்ந்திருக்கும் போது எந்தச் செயலையும் சிறப்புற செய்ய முடியாது. அழுது கொண்டே பூஜிக்கும்போது, மனம் பூஜையில் லயிக்காது. பிரச்னைகள் இல்லாமல் வாழ்பவர் யார்? சொல்லப் போனால், வாழ்க்கையின் சுவாரஸ்யமே பிரச்னைகள்தான்!

சீடன் ஒருவன் தன் குருவை அணுகி, "தங்கள் அருளால் ஜோதிடத்தில் தேர்ச்சி பெற்றிருப்பினும், ஒன்று மட்டும் எனக்குப் புரிபடவே இல்லை. அதாவது, வாழ்க்கையில் பிரச்னைகள் வந்து கொண்டே இருக்கின்றன; அலைகழிக்கின்றன. அவற்றிலிருந்து மீள வழி தெரியவில்லை" என்றான். இதைக் கேட்ட குரு, நாம் பிறக்கும் போதே பிரச்னைகளும் நம்முடன் பிறந்து விடுகின்றன. சிறு வயதில் உனது பிரச்னையைப் பெற்றோர் பார்த்துக்கொள்வார்கள்.

பருவ வயதில், பிரச்னைகளை நாமே எதிர் கொண்டு வெல்வோம். ஆனால், ஒரு பிரச்னையின் முடிவு மற்றொரு பிரச்னையின் துவக்கம்! பிரச்னைகளைக் களைய களைய ஒன்றன் பின் ஒன்றாய்... புதிது

தொடர்ச்சி 20-ம் பக்கம்...





coustomer is king




# புலிகளின் நூறு ரூபா கட்டு... மொட்டை மாடியிலிருந்து வீசிய சிறுவன்!

கே.ராகோத்தமன்


ராஜிவ்காந்தி குடும்பத்திற்கு நெருக்கமாக இருந்த மரகதம் சந்திரசேகரின் மூலமாக , ராஜிவ்வை நெருக்கும் திட்டத்தை புலிகள் வகுத்தார்கள். அதற்கான ஏற்பாடுகளை மரகதம் சந்திரசேகரின் மகன் மூலமாகவே, சிவராசன் குழுவினர் பக்காவாக செய்திருந்தனர் என்பதை கடந்தவாரம் குறிப்பிட்டிருந்தோம்.

அதுநாள் வரை சந்தோஷத்தையோ, கஷ்டத்தையோ, கோபத்தையோ, வேறு எந்தவிதமான உணர்ச்சியையோ தவறியும் வெளிப்படையாகக் காட்டியிராத சிவராசன், அந்த மே 18ம் திகதி மரகதம் சந்திரசேகரின் மகன் மற்றும் மகளின் மூலம் தான் நினைத்த காரியம் நல்லபடியாக நடக்கப்போகிறது என்பது உறுதியானதும் தன்னை மறந்த பரவச நிலைக்கு உள்ளானார்.

கொடுங்கையூர் முத்தமிழ் நகரில் காவல் நிலையத்துக்குச் சற்றுத் தள்ளி இருந்த ஜெயக்குமார் என்பவரின் வீட்டில்தான் சிவராசன் அப்போது தங்கியிருந்தார்.

சுபா, தணு இருவரையும் இலங்கையிலிருந்து தமிழகம் அழைத்து வந்தபோது, அந்தவீட்டுக்கு அருகேதான் இன்னொரு வீடெடுத்து அவர்களை முதலில் தங்க வைத்திருந்தார். (பாஸ்கரன், விஜயன் என்ற இருவர் இதற்கு உதவியவர்கள்.)

. ஸ்ரீபெரும்புதூரில் திட்டத்துக்கான ஏற்பாடுகளை நல்லபடியாகச் செய்து முடித்த மகிழ்ச்சியுடன் கொடுங்கையூர் திரும்பிய சிவராசன், வந்ததுமே ஜெயக்குமாரின் மனைவியை



அழைத்து, தன் பாக்கெட்டிலிருந்து ஒரு கட்டு நூறு ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்தார். 'போய் மாட்டுக்கறி வாங்கி வா. சமையல் அமர்க்களமாக இருக்கவேண்டும் இன்றைக்கு' என்று சந்தோஷத்துடன் சொன்னார். கையோடு சுபா, தணு அனைவருக்கும் தகவல் சொல்லி சாப்பிட வரச் சொன்னார்.

ஜெயக்குமாரின் மனைவி தேவையான பணத்தை மட்டும் எடுத்துக் கொண்டு மிச்சத்தை வைத்துவிட்டு வெளியே போக, அவர்களது மகன் பார்த்திபன் அந்த நூறு ரூபாய் கட்டைப் பார்த்தான்.

சிறுவன். விளையாட்டாக அதை எடுத்துக்கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றவன், அங்கே நின்றபடி ஒவ்வொரு தாளாக உருவிப் பறக்கவிட ஆரம்பித்தான்.

சில நிமிடங்களில் அக்கம்பக்கத்து வீடுகளிலெல்லாம் நூறு ரூபாய் நோட்டுகள் பறந்து வந்து விழ ஆரம்பிக்க, பலபேர் என்னவென்று புரியாமல் வியப்புடன் வீதிக்கு வந்தார்கள். மொட்டை மாடியில் நின்றுகொண்டிருந்த சிறுவனோ, எது பற்றியும் கவலைப் படாமல் தொடர்ந்து பணத்தைப் பறக்கவிட்டுக்கொண்டே இருந்தான்.

'என்னங்க, உங்க பையன் இப்படி பணத்தைப் பறக்கவிடுறானே, என்ன விஷயம்?' என்று ஜெயக்குமாரை அவர்கள் கூப்பிட்டுக் கேட்க, அப்போது தான் அவர்களுக்கு விபரீதம் புரிந்திருக்கிறது.

'ஒன்றுமில்லை. என் மாமாவுக்குக் கல்யாணம் நிச்சயம் ஆகியிருக்கிறது. வீட்டில் அந்த சந்தோஷத்தைப் பகிர்ந்து கொண்டு இருந்தோம். எங்களுக்குத் தெரியாமல் பையன் பணத்தை எடுத்துக்கொண்டு மேலே போய்விட்டான்.

அப்பா, அம்மா சந்தோஷமாக இருக்கிறார்களே என்று அவனும் கிடைத்ததைப் பறக்கவிட ஆரம்பித்து விட்டான்' என்று சொல்லி சமாளித்தார்கள். அத்தனை நாள் கொடுங்கையூர் வீட்டில் இருந்தாலும் அன்றைக்குத் தான் சிவராசன் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுக்கு நன்கு தெரிந்தவரானார்.

ஜெயக்குமாரின் மாமா என்பதாக. அன்றைக்குதிட்டத்தில்சம்பந்தப்பட்ட பலபேர் கொடுங்கையூர் வீட்டுக்கு வந்தார்கள். மாட்டுக்கறி விருந்து சாப்பிடுவதற்கு என்று வைத்துக் கொள்ளலாம். சின்ன சாந்தனும் இருந்தார். அவர்தான் இந்த விவரங்களை சி.பி.ஐயிடம் தெரிவித்தது.

அன்றைக்கு வந்தவர்களுள் வெள்ளை பேண்ட், வெள்ளை சட்டை அணிந்த மனிதரும் ஒருவர். மதியத்துக்குமேல் கொடுங்கையூர் ஜெயக்குமார் வீட்டுக்கு வந்த அந்த நபரை சிவராசன் தனியே மாடிக்கு அழைத்துச் சென்று ஒரு மணி நேரத்துக்கும் மேலாகப் பேசியிருக்கிறார்.

பேசிவிட்டுக் கீழே இறங்கி வரும்போது அந்த வெள்ளை பேண்ட், வெள்ளைச் சட்டை நபர் மகிழ்ச்சியுடன் சிவராசன் கைகளைப் பிடித்துக்கொண்டு, 'இந்தக் காரியத்தை முதலில் நல்லபடியாக முடியுங்கள்.

அடுத்த இலக்கு வைகோவை சி.எம் ஆக்குவதுதான்' என்று சொல்ல, சிவராசனும் புன்னகையுடன் தலையசைத்தார். இச்சம்பவத்தை சி.பி.ஐயிடம் விவரித்தது சின்ன சாந்தன் மட்டுமே.

வழக்கில் கைதான நளினியோ, முருகனோ, வேறு யாருமோ எத்தருணத்திலும் இப்படியொரு சம்பவம் கொடுங்கையூர் வீட்டில் நடந்ததாகக் குறிப்பிடவில்லை.

சின்ன சாந்தன் பேசும்போது, குறிப்பிட்ட அந்த வெள்ளை பேண்ட், வெள்ளைச் சட்டை நபரின் பெயர் சீனிவாசய்யா என்று குறிப்பிட்டார். 'ஐயா' என்பது மரியாதை கருதிச் சேர்த்ததாக இருக்கலாம்.

ஆனால் நாங்கள் இத்தகவல் கிடைத்ததும் விசாரிக்கத் தொடங்கியதில் அன்றைக்குக் கொடுங்கையூரில் சிவராசனைச் சந்தித்துப் பேசிய நபர் வைகோவின் சகோதரர் ரவிச்சந்திரனாக இருக்கலாம் என்று கேள்விப்பட்டோம்.

ஆனால், இதற்கு ஆதாரம் எதுவுமில்லை.

இந்த சம்பவத்தைக் கேள்விப்பட்ட பிறகுதான் தமிழக உளவுத்துறை அதிகாரிகள், இதற்குக் கண், காது, மூக்கு வைத்துக் கருணாநிதியிடம் ஏராளமாக அச்சத்தை விதைத்து, தி.மு.க. விலிருந்து வைகோவை நீக்க வழி செய்தார்கள் என்பது பின்னால் நடந்த சரித்திரம்.

வைகோவுக்கு விடுதலைப் புலிகளுடன் இருந்த தொடர்பு என்பது ஊரறிந்த விஷயம்.

இதனை ஒரு வழக்காகக் கணக்கில் எடுத்து, வைகோவின் சகோதரர் ரவிச்சந்திரனையும், தொடர்புள்ள மற்றவர்களையும் விசாரிக்க நாங்கள் விரும்பினோம்.

சின்ன சாந்தன் 'சீனிவாசய்யா' என்று பெயர் குறிப்பிட்டிருந்தாலும், அவர் விவரித்த தோற்றம், உயரம், நடை, உடை, பாவனைகள் பற்றி எல்லாம் வேறு சிலரும் விவரித்த விதம் அனைத்தும் எங்களுக்கு அது ரவிச்சந்திரனாகத்தான் இருக்க வேண்டும் என்கிற ஆழமான சந்தேகத்தை எழுப்பியது.

ஆனால் மேற்கொண்டு எந்த விசாரணையும் செய்யாமல், அவரை பத்மநாபா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் என்று கூறி, கைது செய்யும்படி உத்தரவிடப்பட்டதாகப் பின்னர் தெரியவந்தது.

(தொடரும்)



முருகன்



சாந்தன்




பேரறிவாளன்

# நியூஸ் பிட்ஸ்




விளம்பரமா, ஹர்சி ஆயிஷாவை கூப்பிடுங்கள் என்கிறது சிங்கள மொடல் உலகம். தென்னிலங்கையில் வேகமாக வளரும் மொடலாக அம்மணிதான் இன்றைய திகதியில் இருக்கிறார். அம்மணிக்கு அளவுக்கடங்காத வெறியர்கள்ஞ் மன்னிக்கவும், ரசிகர்கள் பெருகி செல்கிறார்கள். சமூக வலைத்தளங்களில் அவருக்கு கோயில் கட்டாத குறையாக அவர்கள், அட்ராசிட்டி பண்ண, அம்மணியின் காட்டில் அடைமழைதான்!



இந்தியாவின் புதிய சகலதுறை நட்சத்திரமாக வளர்ந்து வரும் ஹர்த்திக் பாண்டியா கிளீன் போல்ட்டாகி விட்டார் என்று முன்னர் அரசல்புரசலாக ஒரு செய்தி வெளியானது. இந்தி நடிகை எல்லி எவ்ராம்தான் யோக்கர் வீசியவராம். அப்போது அதை அவ்வளவாக யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் சமீபத்தில் அதை உறுதிசெய்யும் சம்பவமொன்று நடந்துள்ளது. ஹர்த்திக் பாண்டியாவின் சகோதரர் குருணல் பாண்டியாவின் திருமணத்தில், பாண்டியாவின் குடுபத்தினருடன் சேர்ந்து திருமண ஏற்பாடுகளையெல்லாம் விழுந்துவிழுந்து கவனித்துள்ளார் எல்லி. இனி மறைப்பதற்கு ஒன்றுமில்லையென கிசுகிசுக்கிறார்கள் மும்பை வாலாக்கள்!

இந்தியாவில் சன்னிலியோன் எப்படி பிரபலமோ, அப்படி பாகிஸ்தானிய ரசிகர்களின் மனதையும் படபடக்க வைக்க ஒருவர் இருக்கிறார். பெயர் தமீனா அஃப்சல். பாகிஸ்தான் வம்சாவளி அமெரிக்க பெண். பல மியூசிக் வீடியோக்களில் நடித்து வேகமாக பிரபலமாகி வருகிறார். நடிப்பென்றால், சன்னி மாதிரித்தான். பாகிஸ்தானியர்கள் அவருக்கு வைத்துள்ள செல்லப்பெயர், மிஸ் மீனா!






பொப் இசையுலகத்தின் முடிசூடா மன்னன் மைக்கல் ஜக்சன். ஜக்சனின் இசை புதுமையென்று நம்பிக்கொண்டிருக்கும் ரசிகர்களிற்கு குண்டை போட்டுள்ளார் குயின்ஸி ஜோன்ஸ். மைக்கல் ஜக்சனின் பல இசை அல்பங்களை தயாரித்தவர் இவர்தான். அண்மைய பேட்டியொன்றில், "ஜக்சனின் புகழ்பெற்ற பல பாடல்கள் திருடப்பட்டவைதான். த்ரில்லர் தொகுப்பில் உள்ள பில்லி ஜீன் பாடல், டிஸ்கோ குயின் டோனா சம்மரின், ஸ்டேட் ஒப் இன்டிபெண்டன்ஸ் உடன் ஒத்துப்போவதை கவனிக்கலாம். இதை பொதுமக்களிடம் கொண்டுவர வெட்கமாகத்தான் உள்ளது" என்றுள்ளார். இரண்டு அல்பங்களையும் அவர்தான் தயாரித்திருக்கிறார்.




உலகின் விலையுயர்ந்த கால்பந்து வீரர்களில் ஒருவரான நெய்மரின் ரசிகர்களிற்கு ஒரு சோக செய்தி. சம்பியன்ஸ்லீக் தொடரில் அடுத்த போட்டி பலமான ரியல் மட்ரிட் அணியுடன், பாரிஸ் செயிண்ட் ஜெர்மைன் அணி மோதவிருந்த சமயத்தில் நெய்மரின் கணுக்கால் எலும்பு உடைந்துள்ளது. இதனால் செயிண்ட் ஜெர்மைன் அணி பெரும் பின்னடைவை சந்தித்துள்ளது. அணியின் வலது கை.. சீ, வலது கால் போனதை போன்ற இழப்பு!

# தமிழரசுக்கட்சியின் ரிமோட் கொன்ரோல் கனடாவில்... திருகோணமலையை விட்டுக்கொடுக்கும் த.தே.ம.மு!


சீன தூதரும் மஹிந்த ராஜபக்சவும்

கருடர்

கருடர் வர கொஞ்சம் தாமதமானது. காத்திருந்தோம். கையில் கொஞ்சம் காகிதங்களுடன் வந்து சேர்ந்தார்.

"தாமதமாகிவிட்டது. வழியில் ஒரு வாசகரை கண்டேன். விமர்சனங்கள் சொன்னார். கேட்டுக்கொண்டிருக்க வேண்டியதாகி விட்டது. இது சுய விமர்சன காலமல்லவா? அதுதான்"

"நீங்கள் அரசியலை குறிப்பிடுகிறீர்கள் போல"

"ம்... அரசியலிலும் இது சுயவிமர்சன காலம்தான். வடக்கு, கிழக்கிலும் தெற்கிலும் கட்சிகளிடையே சுயவிமர்சனத் தேவையை உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் ஏற்படுத்தியுள்ளன. தெற்கில் ஐக்கிய தேசியக்கட்சியும், வடக்கில் தமிழரசுக்கட்சியும் இந்த சுயவிமர்சனத்தை ஆரம்பித்துள்ளன. உள்ளூராட்சி தேர்தலில் ஏற்பட்ட கறுக்கல்களிற்கான காரணத்தை கண்டறிய கட்சிக்குள் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன".

"இதெல்லாம் எவ்வளவு தூரம் பலனளிக்கும்?"

"இதை இப்போது சொல்ல முடியாது. ஏனெனில் இந்த குழுக்கள் எப்படி செயற்படும்? உண்மையான காரணங்களை கண்டறியுமா? கண்டறிந்தாலும் அவற்றை துணிவாக கட்சிக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்களா? இதெல்லாம் பெரிய கேள்விகள். இதற்கு விடை தெரிந்தால்தான், அந்த கேள்விக்கு பதில் சொல்லலாம்.

தமிழரசுக்கட்சியும் ஒரு குழுவை நியமித்துள்ளது. மாவட்ட ரீதியில் குழுக்கள் அமைக்கப்பட்டு, அதை ஒருங்கிணைக்க இன்னொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைப்பு குழுவில் கனடாவை சேர்ந்த குகதாசன், சுமந்திரன் எம்.பி, கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் எம்.பி, நவநாதன் இடம்பெற்றுள்ளனர். இதிலேயே ஒரு சுவாரஸ்யம் உள்ளது.

தமிழரசுக்கட்சியின் விமர்சன குழு

தமிழரசுக்கட்சியின் அண்மைய சறுக்கல்களிற்கு கட்சியின் பிடி, உள்ளூரிலிருந்து வெளிநாட்டுக்கு மாறிவிட்டதென்ற விமர்சனம் தற்போது மெல்லமெல்ல எழுதொடங்கியுள்ளது. கனடா தமிழரசுக்கட்சி கிளையே, கட்சியின் அனைத்து முடிவுகளையும் எடுக்கிறார்கள், நாங்கள் சும்மா பெயருக்கு உட்கார்ந்திருக்கிறோம் என மூத்த தலைவர்கள் பலர் முணுமுணுக்க தொடங்கி விட்டார்கள்.

இப்போது தமிழரசுக்கட்சிக்கு அதிக நிதி வழங்குபவர்கள் கனடா கிளையினர்தான். பணம் வழங்குகிறோம்தானே என, கட்சியின் முக்கிய முடிவுகள் அனைத்தையும் கட்டுப்படுத்த ஆரம்பித்து விட்டனர், கட்சிக்கு சறுக்கலை ஏற்படுத்திய அண்மைய சம்பவங்கள் எல்லாமே கனடா கிளையில் எடுக்கப்பட்ட முடிவுதான் என்கிறார்கள் அவர்கள்.

கட்சியின் சறுக்கலிற்கு காரணம் தேடினால், கனடா கிளையின் முடிவுகளும் அதற்குள் அடங்கும். கனடா கிளையின் முக்கியஸ்தரே சறுக்கலிற்கான காரணத்தை கண்டறியும் குழுவின் முக்கியஸ்தராக இருந்தால், உண்மையான சுயவிமர்சனமாக அது இருக்குமா என்ற கேள்வியும் உள்ளது.

இரண்டாவது, தமிழரசுக்கட்சியின் சறுக்கலிற்கு அண்மையில் மேலெழுந்த இளம்தலைமுறை உறுப்பினர்கள் பலரது செயற்பாடும் முக்கிய காரணம். கட்சிக்குள் இளந்தலைமுறையினருக்கு இடமளிக்க வேண்டும்தான். ஆரம்ப கால தமிழரசுக்கட்சியின் இளம் செயற்பாட்டாளர்கள், அர்ப்பணிப்பான இளம் செயற்பாட்டாளர்களாக இருந்தவர்கள். இன்று அவர்கள் மூத்தவர்களாகி விட்டனர். ஆனால், இன்று கட்சியிலுள்ள இளம்தலைமுறை இப்படியாக அர்ப்பணிப்பானவர்கள் கிடையாது. பலர் வெறும் கட்சி விசுவாசிகளாக, தனிநபர் துதிபாடுபவர்களாகவே உள்ளனர். இப்படியானவர்களால் மக்களை கவர்ந்திழுக்க முடியாது. இவர்களும் விமர்சன குழுவில் உள்ளனர்.

ஆனால் நம்முடன் பேசிய சில மூத்தவர்கள், இவற்றையெல்லாம் பேச முடிவெடுத்துள்ளனர். விமர்சன குழுவிற்கு இந்த காரணங்களை எழுத்துமூலம் கொடுப்பதென்ற முடிவில் உள்ளனர். தொடர்ந்து மௌனம் காப்பது கட்சிக்குத்தான் ஆபத்தை ஏற்படுத்துமென்பதால், பேச வேண்டிய தருணமாக இதை கருதுகிறார்கள்"

"போனவாரம் கட்சிக்கூட்டங்கள் நடந்ததே... அதில் இந்த விமர்சனங்களை யாரும் வைக்கவில்லையா?"

"இல்லை... அங்க மேலோட்டமாகவே பேசினார்கள். தோல்விக்கான காரணத்தை அந்த கூட்டத்தில் கண்டறியவில்லை. மாறாக, சப்பைக்கட்டு காரணங்களைத்தான் பேசினார்கள்.

பங்காளிகளிற்கு குறிப்பாக ரெலோவிற்கு அதிக ஆசனங்களை வழங்கினோம், ஆனால் ரெலோவின் வேட்பாளர்கள் பெரும்பாலானவர்கள் தோல்வியடைந்து விட்டனர் என்ற விமர்சனத்தையே வைத்தனர். உள்ளூராட்சி தேர்தல் ஆசன பங்கீட்டு சிக்கலின்போது, கூட்டமைப்பின் கட்சி தலைவர்கள் கொழும்பில் சந்தித்து ஆசனப் பங்கீட்டு பேச்சு நடத்தினார்கள். இந்த பேச்சினாலும் தமக்கு பின்னடைவென அங்கு பேசினார்கள்"



# கருடன் பக்கம்

"சரி... உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பது தொடர்ந்தும் இழுபறியில் இருக்கிறதே?

ஆனல்ட்டிற்கு ஆதரவில்லை; சிறிலுக்கு ஆதரவுண்டு

"ம்... 'இன்னும் அதற்கு முடிவு கிட்டவில்லை. கடந்தவாரமும் இதைப் பற்றி சொல்லியிருந்தேன். யாழ் மாநகர சபை தவிர்ந்த மற்றைய சபைகளில் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு ஆதரவு வழங்குவதில் ஈ.பி.டி.பிக்கு எந்த சிக்கலுமில்லை. ஆனால், மற்றசபைகளை விட, யாழ் மாநகரசபையில்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பும் குறியாக இருக்கிறது.

கூட்டமைப்பின் மேயர் ஆனல்ட். ஈ.பி.டி.பியின் மேயர் வேட்பாளராக களமிறங்கியவர் ரெமீடியஸ். இருவரும் நெருங்கிய உறவினர்கள். ஆனல்ட் மேயரானால், அந்த பகுதியில் அவரது

தொடர்ச்சி 6-ம் பக்கம்...

## முதலமைச்சரின் காலணி!

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் கடந்தவாரம் ஒரு நூல் வெளியீடு நடந்தது. இந்தியாவில் வாழும் ஒருவரால் எழுதப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு அது. முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்துகொண்டிருந்தார். முதலமைச்சர் பேசுவதற்கு அழைக்கப்பட, ஒலிவாங்கிக்கு முன்பாக வந்தார். ஒலிவாங்கியின் உயரத்திற்கு பொருத்தமாக, பேசுபவரின் காலடியில் குளிர்பான போத்தல் தட்டு (சோடா கேஸ்) ஒன்று போடப்பட்டிருந்தது. அதில் முதலமைச்சர் ஏறியபோது தடுமாறி விட்டார். காரணம் தனது காலணியை உட்கார்ந்திருந்த கதிரையினடியிலேயே கழற்றிவிட்டு வந்திருந்தார். "எங்கே என் காலணி" என முதலமைச்சர் தடுமாற, முதலமைச்சரின் பின்னால் நின்ற உதவியாளர் உடனடியாக காலணியை தனது கையால் எடுத்து, முதலமைச்சரிற்கு பக்கத்தில் வைத்தார்.

இந்த விசயம் இணையத்தளத்தில் சூடான விவாதப்பொருளாக மாறியது. உதவியாளரை செருப்பு காவ வைத்த முதலமைச்சர் என சிலர் பொங்க, வயதான ஒருவருக்கு இன்னொருவர் செய்த உதவியை அரசியல் நோக்கத்துடன் விமர்சிக்கிறார்கள் என பெரும்பாலானவர்கள் பதிலடி கொடுத்தார்கள்!

5-ம் பக்க தொடர்ச்சி...

செல்வாக்கு அதிகமாகிவிடுமென ரெமீடியஸ் பயப்பிடுகிறார். இருவரும் கீரியும் பாம்புமாக அரசியல் செய்து வருகிறார்கள். அதனால், ஆனல்ட் முதல்வராக ஆதரவு வழங்ககூடாதென கட்சி தலைமைக்கு கடுமையான அழுத்தம் கொடுத்துள்ளார். கட்சி தலைமையும் அதற்கு சம்மதித்துள்ளது.

மாநகரசபை மேயராக ஆனல்ட் நியமிக்கப்பட்டால் ஆதரிக்கமாட்டோம், சொலமன் சிறிலை மேயராக்கினால் ஆதரிக்கலாம் என்ற தகவலை ஈ.பி.டி.பி, த.தே.கூ இற்கு அனுப்பிவிட்டது"

"தமிழ் தேசிய மக்கள் முன்னணி என்ன செய்ய போகிறது?"

"உள்ளூராட்சி தேர்தல் வெற்றி முன்னணிக்கு பயங்கர உற்சாகத்தை கொடுத்துள்ளது. தமது கொள்கைக்கு கிடைத்த வெற்றியென நினைப்பதாலோ என்னவோ, தம்மையொத்த கொள்கையுடையவர்களுடன் மட்டுமே கூட்டு என முடிவெடுத்துள்ளனர்.

கடந்தவாரம் கட்சியின் மத்தியகுழு கூட்டம் நள்ளிரவு வரை நடந்துள்ளது. ஆட்சியமைப்பதற்கு எந்த கட்சியின் ஆதரவையும் பெறுவதில்லையென முடிவெடுத்துள்ளனர். ஆனால் நல்லூர் மட்டும் விதிவிலக்கு. நல்லூரில், முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசனின் ஆதரவுடனான சுயேச்சைக்குழுவின் ஆதரவை மட்டும் பெறுவதென முடிவெடுத்துள்ளனர்"

ஐ.தே.க தலைமை சஜித்திற்கு?

"தெற்கு நிலவரங்கள் எப்படியிருக்கிறது?"

"ஐக்கிய தேசியக்கட்சியும் தன்னை சுயவிமர்சனத்திற்கு உட்படுத்த ஆரம்பித்துள்ளது. ஆனால், ஐ.தே.க சுயவிமர்சனம் செய்வது இதுதான் முதற்தடவையல்ல. 1994 இல் ரணில் விக்கிரமசிங்க தலைவரான பின்னர் ஏற்கனவே இப்படியான சுயவிமர்சனத்திற்கு உட்பட்டனர். ஆனால் சுயவிமர்சன குழுக்களின் அறிக்கைகள் எதையும் இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை. இம்முறை எப்படியிருக்குமென தெரியவில்லை. ஆனால், கடந்த காலங்களை போல, இம்முறை இலகுவில் ரணில் விக்கிரமசிங்க தப்பிக்க முடியுமென தோன்றவில்லை.

தேர்தல் தோல்வியின் பின்னர், ரணிலுக்கு பிரதமர் பதவி மட்டுமல்ல, கட்சி தலைவர் பதவியும் சிக்கலானது. பிரதமர் பதவிக்கு சட்டஏற்பாடுகள் துணையாக இருந்தன. ஐ.தே.கவின் பிரதமர் பதவியை சு.க தீர்மானிக்க முடியாதென்ற அனுதாபத்தை பாவித்து, கட்சி தலைவர் பதவியையும் தக்கவைத்து விட்டார். ஆனால், பிரதமர் பதவியைபோல, கட்சி தலைவர் பதவியை நீண்டகாலம் தக்கவைக்க முடியாது. ஒரு மாதத்தில் கட்சிக்குள் மாற்றங்க்ள் செய்வேன் என்ற ரணிலின் உறுதிமொழியை ஏற்றுத்தான் அதிருப்தியாளர்கள் அமைதியாகியுள்ளனர்.

ரணில் கட்சித்தலைமையிலிருந்து ஒதுங்க வேண்டுமென சுமார் 50 அமைப்பாளர்கள் விரும்புகிறார்கள். ஒரு மாத அவகாசத்தை கடந்தும், ரணில் தலைமை பதவியில் நீடித்தால், அவர்கள் கட்சியிலிருந்து ஒதுங்கலாம்"

"ஐ.தே.கவில் தலைமை மாற்றத்திற்கு உண்மையில் வாய்ப்பிருக்கிறதா?"

"தலைமை மாற்றம் நடக்குமா என்பது தெரியாது. ஆனால் ஒரு மாதத்தில் மீண்டும்இதே பிரச்சனை வரும். அப்போது ரணில் எப்படி கையாள்வார் என்பது தெரியவில்லை. ஆனால், இந்தமுறை உண்மையிலேயே அவர் விட்டுக்கொடுக்கும் மனநிலைக்கு வந்துவிட்டதாக சொல்கிறார்கள். சஜித் பிரேமதாசா அல்லது கரு ஜயசூரியாவிடம் தலைமை செல்லும் போல தெரிகிறது. மூத்த தலைவர் என்ற புதிய பதவியொன்றை உருவாக்கி, அதில் உட்கார ரணில் முயல்வதாகவும் ஒரு தகவலுண்டு"

"சட்டம் ஒழுங்கு அமைச்சர் விவகாரம் சிக்கலில் உள்ளதே?"

மஹிந்தவின் திட்டத்தை குழுப்பு வாரா பொன்சேகா?

"சட்டம் ஒழுங்கு அமைச்சர் விசயத்தை கடந்த வாரமும் குறிப்பிட்டிருந்தேன். சரத் பொன்சேகாவிடம் சட்டம், ஒழுங்கு அமைச்சு போகக் கூடாதென்பதில் ராஜபக்ச அணி கடுமையான கரிசனை காட்டியது. பொன்சேகாவின் கட்டுப்பாட்டில் பொலிஸ் சென்றால், தங்களை தலைநிமிர விடமாட்டார் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

அரசாங்கத்திற்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்த கூட்டு எதிரணி இப்பொழுது திட்டமிட்டு கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் பொன்சேகா, பொலிஸை கட்டுப்பாட்டில் வைத்திருந்தால், போராட்டத்தை கடுமையான பலப்பிரயோகத்துடன் அடக்கிவிடுவார், தமது பக்கத்தில் சேதாரம் பலமாக இருக்குமென கூட்டு எதிரணி பயப்பிடுகிறது.

அதனால்தான், பிரதமர் ரணிலை தொலைபேசியில் தொடர்புகொண்ட மஹிந்த ராஜபக்ச, பொன்சேகாவிடம் சட்டம், ஒழுங்கை கொடுக்க வேண்டாமென கேட்டு கொண்டார். ஆனால், ரணில் வேறுவிதமாக யோசிக்கிறார். எஞ்சியுள்ள இரண்டு வருடத்தில் ஆட்சியைப்பற்றி நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதெனில், அதற்கு பொன்சேகாவின் அதிரடியும் அவசியமென கருதுகிறார்.

ரணிலின் மனநிலையை தெரிந்த பின்னரே, மைத்திரிபால சிறிசேனவுடன் பேச்சு நடத்தினார்கள் மஹிந்த அணியினர். பொன்சேகாவிற்கு சட்டம், ஒழுங்கு அமைச்சு கொடுக்கப்படமாட்டாதென அப்போது மைத்திரி உறுதியளித்திருக்கிறார். கூட்டு எதிரணியை பகைக்க முடியாத அரசியல் இக்கட்டிற்கு மைத்திரி வந்துவிட்டார் போல தெரிகிறது. அதுதான் இழுபறியில் இருக்கிறது. ஆனால் அடுத்த வாரம் உறுதியான முடிவு தெரிந்துவிடும்.

இந்தோனேசியாவிற்கு தனிப்பட்ட பயணமாக சென்றிருந்த பொன்சேகா, 25ம் திகதி நாடு திரும்பியிருந்தார். 26ம் திகதி மாலையில் அலரி மாளிகையில் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து பேசினார். அப்போது ஒரு நிபந்தனை விதித்துள்ளார். "சட்டம், ஒழுங்கு அமைச்சை பொறுப்பேற்றால் நாட்டின் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவேன், ஊழலை இல்லாமல் செய்வேன். ஆனால் ஜனாதிபதி, பிரதமரின் தலையீடு அதற்குள் இருக்ககூடாது" என்பதே அவரது நிபந்தனை. மஹிந்த குடும்பத்துடன் அவருக்கு தீர்க்க வேண்டிய கணக்குகள் சில உள்ளன. அதையெல்லாம் தீர்க்க வெளிக்கிட்டால், கடும் சிக்கலாகிவிடும் என மைத்திரி பயப்பிடுகிறார்.

அடுத்த வாரத்தில் அமைச்சரவை சிக்கல், உள்ளூராட்சிசபை தவிசாளர் தெரிவுகள் முடிந்துவிடும். அப்போது நடந்த சம்பவங்களுடன் அடுத்தவாரம் சந்திக்கிறேன்" என்றபடி கருடர் பறந்து சென்றார்.



நாமல் ராஜபக்ச - சரத் பொன்சேகா

## ஹொண்டாவில் வந்தவர் பென்ஸ் வாங்குகிறார்

ஐக்கிய தேசியக்கட்சியின் அமைச்சர் ஒருவர் தனது மருமகனிற்கு பென்ஸ் கார் ஒன்றை கொள்வனவு செய்ய திட்டமிட்டுள்ளார். கொழும்பு 07 இல் உள்ள முன்னணி கார் விற்பனையகத்திற்கு சென்று, ணிபிரிவின் நவீன பென்ஸ் கார் ஒன்றை கொள்வனவு செய்ய, முதற்கட்ட வர்த்தக நடவடிக்கைகளை பூர்த்தி செய்துள்ளார். இந்த பென்ஸ் காரின் பெறுமதி 23 மில்லியன் ரூபா.

இதேவேளை, கொழும்பில் சொகுசு வீடொன்றை கொள்வனவு செய்யும் முயற்சியிலும் இவர் இறங்கியுள்ளதாக சிங்கள ஊடகங்கள் சில மாதங்களிற்கு முன்னர் செய்தி வெளியிட்டிருந்தன. அந்த வீட்டின் பெறுமதி 500 மில்லியன் ரூபா.

2015ஆம் ஆண்டிலேயே இந்த பிரபலம் அமைச்சு பதவியை ஏற்றார். அதற்கு முன்னர் ஹொண்டா ரக மோட்டார் சைக்கிள் ஒன்றையே போக்குவரத்திற்காக பயன்படுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## திருகோணமலையில் வேறு கொள்கையா?


தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட முடிவுகளை, கட்சி தலைமை எடுப்பதில்லையாம். கட்சி தலைமையால் திருகோணமலைக்குள் நுழைய முடியாமல் உள்ளதாம். அங்குள்ள வர்த்தகர் ஒருவரே கட்சியை முழுமையாக வழிநடத்துகிறார். இது கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளர்களிற்குள் புகைச்சலை கிளப்பியுள்ளது.

உள்ளூராட்சி தேர்தலை முன்னிட்டு கிழக்கிலும் கட்சியை விஸ்தரிக்க முயற்சிக்கப்பட்டது. இதன்போது வர்த்தகர் ஒருவர் திருகோணமலையை பொறுப்பேற்றார். அப்போது ஒரு நிபந்தனை விதித்திருக்கிறார். திருகோணமலைக்குள் கட்சி தலைவர்கள் வரக்கூடாது, அனைத்தையும் நானே கவனிப்பேன் என. கட்சியும் அதற்கு சம்மதித்தது. உள்ளூராட்சி பிரசாரத்திற்காக சென்ற கட்சியின் பிரமுகர்கள், தென்னன்மரவாடிக்கு அப்பால் செல்லவில்லை. திருகோணமலை பிரசாரத்திலும் கட்சியின் தலைவர் முன்னிலைப்படுத்தப்படவில்லை. பிரசுரம் பிரசுரம் எதிலும் கஜேந்திரகுமாரின் படம் இருக்கவில்லை.

கட்சியின் நீண்டகால செயற்பாட்டாளர்கள் இருவர் உள்ளூராட்சி தேர்தலில் வெற்றிபெற்றிருந்தனர். அவர்கள் பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டுமென வர்த்தகர் நெருக்குதல் கொடுக்க, இறுதியில் கட்சி தலைமை அதற்கு சம்மதித்தது என கட்சி செயற்பாட்டாளர்கள் புழுங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

## வங்கி இல்லாததால் வருத்தம்

அமைச்சரவை மாற்றம் ஐ.தே.கவிற்குள் புயலை கிளப்பியுள்ளது. லக்ஸ்மன் கிரியெல்லவின் கீழ் நெருஞ்சாலை அமைச்சு இருந்த சமயத்தில், வீதி ஒப்பந்தத்தில் ஊழல் என்ற குற்றச்சாட்டு கிளம்பியிருந்தது. தற்போது லக்ஸ்மனிற்கு அரச முயற்சியாண்மை அமைச்சு மட்டும் வழங்கப்பட்டுள்ளது. இந்த அமைச்சு முன்னர் பிரதமரின் கீழ் இருந்தது. அப்போது அரச வங்கிகள், நிதி நிறுவனங்கள் இந்த அமைச்சின் கீழ் இருந்தன. தற்போது அவை அரச முயற்சியாண்மை அமைச்சிலிருந்து நீக்கப்பட்டு விட்டன. இதனால் லக்ஸ்மன் வருத்தத்தில் இருக்கிறார்.



## விக்கிக்கு ஸ்கெட்ச் போடுகிறதா இந்தியா?

யாழ்ப்பாணம் இந்திய துணை தூதராக கடமையாற்றிய நடராஜன், பணிக்காலம் முடிந்து இந்தியா செல்கிறார். கடந்தவாரம் பிரியாவிடை நிகழ்வொன்றை ஏற்பாடு செய்திருந்தார். கிறீன்கிராஸ் விடுதியில் பிரியாவிடை நடந்தது. வடக்கு முதலமைச்சர், ஆளுனர் போன்றவர்களும் கலந்து கொண்டிருந்தனர். நடராஜன் உரையாற்றும்போது, "யாழ்ப்பாணத்தில் கட்டப்படும் கலாசார மையத்தின் கட்டுமான பணிகள் 2019ஆம் ஆண்டு நிறைவடையும். உடனே திறப்பு விழா நடக்கும். நானும் அந்த விழாவிற்கு வருவேன். அப்போது முதலமைச்சர்தான் அதை திறந்து வைப்பார்" என, வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனை பார்த்தபடி உரையாற்றினார். இந்த வருட இறுதியில் வடமாகாணசபை தேர்தல் நடக்க வேண்டும்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன், முதலமைச்சராகவே இந்த நிகழ்வில் கலந்துகொள்வாரா, இல்லையா என்பதையும் நடராஜன் குறிப்பிடவில்லை. அடுத்த தேர்தலிலும் விக்னேஸ்வரன்தான் வெற்றிபெறுவார் என நடராஜன் கணித்ததாலோ, அல்லது அடுத்த முதல்வர் அவர்தான் என இந்தியா தீர்மானித்து விட்டதாலோ அப்படி கூறியிருக்கலாம்!

இன்னொரு சம்பவமும் நடந்தது. நிகழ்விற்கு வந்திருந்தவர்களை ஒவ்வொருவராக குறிப்பிட்டு நடராஜன் நன்றி தெரிவித்து கொண்டிருந்தார். வடக்கில் பணியாற்றிய சமயத்தில் அரசியல் பிரமுகர்களுடன் தனக்கிருந்த உறவு பற்றியும் குறிப்பிட்டார். நிகழ்வில் ஆனந்தசங்கரி முன்வரிசையில் இருந்தார். எனினும், கடைசிவரை ஆனந்தசங்கரியின் பெயரைக்கூட அவர் உச்சரிக்கவில்லை.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தவர்களிற்கு உணவு உபசாரமும் வழங்கப்பட்டது. கலந்து கொண்டவர்கள் விரும்பிய உணவை தாமே எடுத்து சாப்பிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் மூவருக்கு மட்டும் உட்கார்ந்த இடத்திலேயே சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்தார் இந்திய தூதர். வடக்கு முதலமைச்சர், ஆளுனர் ஆகியோருடன், அந்த மூன்றாவது பிரமுகர் ஆனந்தசங்கரி!

# அரசியல் மசாலா

## வலி.கிழக்கு சிக்கல் இதுதான்!


வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேசசபையில் அதிக ஆசனங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பு பெற்றுள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு அதிக ஆசனங்களை பெற்றுள்ள சபைகளிற்கான தவிசாளர்களை இரண்டு வாரங்களின் முன்னரே பகிரங்கமாக அறிவித்து விட்டார்கள். ஆனால் வலிகாமம் கிழக்கிற்கு இன்னும் அறிவிக்கவில்லை. தமிழரசுக்கட்சிக்கும், ரெலோவிற்குமிடையிலான இழுபறியினாலேயே தவிசாளர் அறிவிப்பு தாமதமடைந்துள்ளது.

கூட்டமைப்பின் தலைவர்களிற்கிடையில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின்படி, இந்தசபை ரெலோவிற்கு வழங்கப்பட்டிருந்தது. ரெலோவினால் தவிசாளராக பரிந்துரைக்கப்பட்டவர் தியாகராசா நிரோஷ் என்பவர். எனினும், இவர் கொழும்பில் வசிப்பவர் என தமிழரசுக்கட்சி எதிர்ப்பு தெரிவித்து, ரெலோவின் பட்டியலில் வெற்றியடைந்த இராஜேந்திரம் என்பவரை தவிசாளராக நியமிக்கும்படி வலியுறுத்தி வருகிறது. ஏற்கனவே தமிழர் விடுதலைக்கூட்டணியில் தேர்தலில் போட்டியிட்ட இராஜேந்திரம், பின்னர் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் மக்கள் தொடர்பு அதிகாரியாக இருந்தவர்.

இந்த இழுபறியின் பின்னணியில் சமூக முரண்பாடுகளும் இருப்பதாக கட்சிப்பிரமுகர்கள் முணுமுணுக்கிறார்கள். இந்த பகுதியை சேர்ந்த, தமிழரசுக்கட்சி பிரமுகர் ஒருவர் தனது சமூகத்தை சேர்ந்த ஒருவர் தவிசாளராக வர வேண்டுமென விரும்புவதாலேயே இந்த இழுபறியேற்பட்டதாக சொல்கிறார்கள்.




## கிழக்கில் சங்கமம்!



தமிழ் தேசியக்கூட்டமைப்பிலிருந்து பிரிந்து சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ், உதயசூரியன் கூட்டமைப்பில் இணைந்தது. தமிழரசுக்கட்சிக்கும், ஈ.பி.ஆர்.எல்.எவ் இற்குமிடையில் கீரியும் பாம்பும் போன்ற உறவுதான் இப்போதுள்ளது. இரண்டு கட்சியும் இணையும் வாய்ப்பு இல்லவேயில்லையென்றுதான் இரண்டு தரப்பாலும் சொல்லப்பட்டு வந்தது. ஆனால், கிழக்கில் சத்தமில்லாத சங்கமிப்பு ஒன்று நடந்துள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எவ் கிழக்கு பிரமுகர் துரைரெட்ணம், தமிழரசுக்கட்சியின் கிழக்கு முக்கியஸ்தர்களுடன் பேச்சு நடத்தியுள்ளார். இரண்டு தரப்பும் இணக்கமாக செயற்படுவது பற்றி பேசினோம் என, நாவடக்கமாக பேசுகிறார்கள் இரண்டு தரப்பிலும். ஆனாலும், அதைவிட ஆழமான பேச்சுவார்த்தை நடந்ததென்கிறது உள்வட்ட தகவல்கள். மாகாணசபை உறுப்பினர் பதவியை துரைரெட்ணம் குறிவைத்துள்ளதால், இப்பொழுதே அதற்கான அத்திவாரத்தை போடுகிறாராம்!

## வேலை வாய்ப்பு கட்சிக்குள்ளால்!

ஐக்கிய தேசியக்கட்சிக்கு இது போதாத காலம் போல. ஏற்கனவே நொந்து போயுள்ள கட்சிக்கு, சிங்கள புலனாய்வு ஊடகமொன்று அடி வயிற்றில் புளியை கரைத்துள்ளது. அரச வங்கியொன்றில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு சுமார் 1,500 பேரிடம் கட்சி பிரபலங்கள் சிலர் இலஞ்சம் வாங்கியுள்ளதாக செய்தி வெளியிட்டுள்ளது. இதற்கான ஆதாரங்களை விரைவில் வெளியிடவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது.

கட்சியின் சில பிரமுகர்கள் வழங்கும் பட்டியலின்படியே இந்த நியமனங்கள் வழங்கப்படவுள்ளன என்றும், வங்கியில் நேர்முக பரீட்சை நடத்தப்பட்டாலும், எல்லாம் "உள்ளால்" நடக்குமென்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நியமனங்களை வழங்குவதற்காக ஒரு அமைச்சின் அதிகாரிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் உதவியாளர்கள் மூலம் இதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மூன்று முதல் ஐந்து இலட்சம் வரையான பணம் இதற்காக பெறப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அதிகளவான முறைப்பாடு தற்போது அந்த வங்கிக்கு சென்ற வண்ணம் உள்ளதாம்.

இந்த தகவல் ஒன்றுதான் இப்போது வெளியாகியுள்ளது. ஆனால் பல வருடங்களாக ஆட்சியிலிருக்கும் தரப்பு, பணம் வாங்கிக்கொண்டு வேலைவாய்ப்பு வழங்குவது சாதாரணமாக நடந்து வருகிறது. அரச கட்சிகளின் வடக்கு, கிழக்கு பிரமுகர்கள் இதனாலேயே கல்லா பெட்டியையும், வாக்கு பெட்டியையும் நிரப்பி வருவது தெரிந்ததே.

தீபம்

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

தொடர்புகளிற்கு

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com



# அந்த 127 குழந்தைகளும் எப்படி இறந்திருக்கும்..?

## சிரியாவின் இரசாயனத் தாக்குதல் கதை!

நின்றுகொண்டிருந்தார்கள். அவ்வளவு கவனமாக சூழலை கவனித்துக்கொண்டிருந்தார்கள். எந்த நடமாட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. அடுக்கி வைக்கப்பட்டிருந்த அந்த மணல் மூட்டைகளுக்குப் பின்னால் கனமான துப்பாக்கிகளைச் சுமந்தபடி இருந்த அவர்கள், அதிகம் பேசிக் கொள்ளவில்லை. சொல்லப்போனால் பேசிக்கொள்ளவே இல்லை. சிலர் சில விஷயங்களைச் சைகைகளில் பகிர்ந்துகொண்டார்கள். உங்கள் கற்பனையை இன்னும் விசாலப் படுத்திக்கொள்ள இதன் காலம் உங்களுக்கு உதவலாம். இது நடப்பது ஏப்ரல் மாதம் 22ம் திகதி, 1915ம் ஆண்டு. முதலாம் உலகப் போர் சமயம். பெல்ஜியத்தின் ஈப்ரஸ் நகரம் (Ypres). பிரெஞ்ச் மற்றும் அல்ஜீரிய ராணுவ வீரர்கள் கூட்டாக அந்தப் பகுதியைக் காத்துக்கொண்டு நின்றார்கள்.


எதிரிகளின் சத்தம் எதுவும் கேட்கவில்லை. எந்த ஆயுதங்களும் நகர்த்தப்படுவதற்கான அறிகுறிகள் தெரியவில்லை. நம் படை கண்டு எதிரிகள் பயந்துவிட்டார்களோ என்ற நினைப்பு வேறு அங்கிருந்த சிலருக்கு எழுந்தது. நினைப்பு என்று எதிர்காலம் தெரிந்த நாம் சொன்னாலும், அந்த நிமிடம் அவர்களுக்கு அந்த நினைப்பு தான் நம்பிக்கை. ஆம், அப்படித்தான் அவர்கள் நம்பிக்கொண்டிருந்தார்கள். நாம் காலத்தைக் கடந்து போயிருப்பதால் நம்மால் இவர்களை எதிர்க்கும் ஜெர்மனிப் படை என்ன செய்துகொண்டிருக்கிறது என்பதையும் பார்க்க முடியும்.

பிரெஞ்ச் மற்றும் அல்ஜீரிய கூட்டுப் படைகள் நின்றிருக்கும் எதிர் திசையில் ஜெர்மனிய படை நின்றுகொண்டிருந்தது. அவர்கள் அனைவரின் முகத்திலும் பெரும் ஆர்வம் இருப்பதை உணர முடிந்தது. துப்பாக்கிகளைத் தோள்களில் மாட்டியபடி அங்கு சில டாங்க்குகளைத் தள்ளி வந்தனர் ராணுவவீரர்கள். யாருக்காகவோ காத்திருந்தனர். சில நிமிடங்களில் கருப்பு நிற கோட், சூட் சகிதம் வித்தியாசமான கண்ணாடி அணிந்து அந்த மனிதர் வந்தார். மூச்சுவிடும் சத்தம்கூட, குண்டு வெடிக்கும் சத்தம் அளவிற்குக் கேட்கும் நிசப்தம் அங்கு நிலவியது. அந்த கண்ணாடிக்காரர் காற்றின் போக்கைக் கவனித்துக்கொண்டிருந்தார். கிட்டத் தட்ட ஒருமணி நேரம் கழிந்திருக்கும். காற்று தங்களுக்கு சாதகமாக வீசுவதை உணர்ந்து சில சைகளைக் காட்டினார். மிகத் துரிதமாக வேலைகள் நடந்தன. அனைவரும் தங்களிடம் இருந்த அந்தக் கண்ணாடி மாஸ்க்குகளை முகத்தில் மாட்டிக்கொண்டார்கள். அந்த டாங்குகள் ஒரு திசையில் நிறுத்தப்பட்டுத் திறக்கப்பட்டன. திறந்துவிட்டதும், மொத்த படையும் பின்னோக்கி நகர்ந்தது.

போர்தான். இருந்தும், வீசும் அந்தக் காற்றை அத்தனை ரசனையோடு அனுபவித்துக்கொண்டிருந்தார்கள் அந்த வீரர்கள். சில நிமிடங்கள் கடந்திருக்கும். காற்றோடு சேர்ந்து பழுப்பு மஞ்சள் நிறத்தில், மேகம் நகர்வதுபோல் ஏதோ ஒன்று நகர்வதைக் கண்டு முதலில் ஆச்சர்யப்பட்டார்கள். அது என்ன, ஏது என்று அவர்கள் உணரும் முன் அது அவர்களை நெருங்கியது.

கண்கள் எரிந்தன. இருமத் தொடங்கினார்கள். சிலருக்கும் தும்மல். மூச்சடைத்தது. திணறினார்கள். மூச்சுக் குழாய் எரிந்தது. வாயில் ரத்தம் வழியத் தொடங்கியது. மயக்கமடைந்தார்கள். கீழே விழுந்தார்கள். அப்படியே மரணமடையத் தொடங்கினார்கள். கத்தியின்றி, சத்தமின்றி, குண்டுகளின்றி மிக அமைதியாக அந்தப் படுகொலை நடந்தேறியது. கொலை செய்யப்பட்டது மொத்தம் ஆறாயிரம் வீரர்கள். கொன்றது மொத்தம் 400 தொன் க்ளோரின் வாயு (Chlorine Gas). ஜெர்மனிய வீரர்கள் கொண்டாடினார்கள். உலகின் முதல் 'இரசாயனப் போர்' (Chemical Warfare) வெற்றிகரமாக நடந்தேறியது. 'இரசாயன போர்முறையின் தந்தை' (Father of Chemical Warfare) ஃப்ரிட்ஸ் ஹேபர் (Fritz Haber) கொண்டாடப் பட்டார்.

(ஏப்ரல் 15ம் திகதி மிகப் பெரிய வெற்றியை ஈட்டியதாகப் பெருமிதம் கொண்ட ஃப்ரிட்ஸ், மே 1ம் திகதி தன் வாழ்நாளின் பேரிழப்பைச் சந்தித்தார். சில வருடங்களிலேயே தன் வாழ்வின் பேரழிவுகளையும் கண்டார். அதுகுறித்து கடைசியில் பார்ப்போம். இப்போது இந்தக் க்ளோரின் அரக்கன் குறித்த தகவல்களைத் தேடலாம்.)




க்ளோரின் (Chlorine) தனியாக இருக்கும் பட்சத்தில் மிகக் கடுமையான எதிர்வினை ஆற்றக்கூடிய தன்மை வாய்ந்தது. நாம் எடுத்துக் கொள்ளும் உணவை உடைப்பது 'ஹைட்ரோ க்ளோரிக் அசிட்' (Hydrochloric Acid). இந்த ஹைட்ரோ க்ளோரிக்கில் இருந்து க்ளோரினை, 1774ல் முதன்முதலாகத் தனியாக பிரித்தெடுத்தார் கார்ல் வில்ஹெல்ம் ஷீல் (Karl Wilhelm Scheele). 1810ல் இந்தத் தனியான க்ளோரினுக்கு வெளிறச் செய்யும் (Bleaching) தன்மை அதிகமாக இருக்கிறது என்பதை ஹம்ஃப்ரி டேவி (Humphry Davy) கண்டுபிடித்தார். இது காற்றைவிட அடர்த்தியானது.

உலர்ந்த க்ளோரின் தண்ணீரோடு சேரும்போது, அது 'ஹைப்போக்ளோரைட்' (HypoChlorite) எனும் இரசாயனத்தை உருவாக்குகிறது. அது மிகச் சிறந்த கிருமிநாசினி. 1897ல் பிரிட்டனின் மெயிட்ஸ்டோன் (Maidstone) பகுதியில் மிகப் பெரியளவில் 'டைஃபோய்ட்' (Typhoid) பரவிய காலத்தில், அந்தப் பரவலைத் தடுக்க ஹைப்போக்ளோரைட்தான் உபயோகப்படுத்தப் பட்டது.

மனித உடலுக்கு க்ளோரின் மிகப்பெரிய கேடு.

127 அப்பாவிக் குழந்தைகளின் மிகக் கொடூரமான மரணம், இந்தச் செய்தியை இப்போது எழுத வைத்திருக்கிறது. கொல்லப்பட்ட அந்தக் குழந்தைகளின் புகைப்படங்கள் நெஞ்சை உலுக்குகின்றன. சிரியாவில் கடந்த வாரம், கிழக்கு கவுட்டா (Estern Ghouta) பகுதியில் சிரிய அரசாங்கம், ரஷ்யா மற்றும் இரான் கூட்டுப்படை நடத்திய தாக்குதலில் ஒரே வாரத்தில் 510 பொதுமக்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதில்

தொடர்ச்சி 20-ம் பக்கம்...




# ஆனந்தபுரம் BOX இல் சிக்கிய புலிகள்

## தப்பி வந்த பானுவை பங்கருக்குள் அடைத்தார்களா?

## யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்.... கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்

**மினி தொடர் 5**





ஆனந்தபுரம் BOX இற்குள் இருந்து பானு எப்படி ஒரு சிராய்ப்பு காயமுமில்லாமல் தப்பித்து வெளியேறினார்?

இந்த கேள்வி, விடுதலைப்புலிகளின் கீழ்மட்ட உறுப்பினர்கள் பலரிடம் கூட இருந்தது. தளபதி பானுவை சுற்றி ஏதோ மர்மங்கள் இருப்பதாக அவர்கள் நினைத்தார்கள். அந்த அதுதான் பானுவை பற்றிய இந்த அபிப்பிராயம் வளர காரணமாக இருந்தது.

புதுக்குடியிருப்பிலிருந்து முன்னேறிய 53வது டிவிசன், தேவிபுரத்தின் ஊடாக, இரணைப்பாலை சந்தியை நெருங்கிய 58வது டிவிசன், மந்துவில் பகுதியில் நெருக்கடி கொடுத்துக்கொண்டிருந்த அதிரடிப்படை என புலிகளை மூச்சுவிட முடியாத நிலைமைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இந்த சமயத்தில்தான் புலிகள் ஆனந்தபுரத்தில் BOX அடிக்கும் முடிவை எடுத்தனர். இந்த முடிவின் பின்னால் பல சுவாரஸ்ய, அதிர்ச்சி, துயர செய்திகள் எல்லாம் உள்ளன. அதை இப்பொழுது நாம் குறிப்பிடவில்லை. தீபத்தில் வெளியாகும் இறுதியுத்தத்தில் நடந்தது என்ன தொடரில், ஆனந்தபுரம் BOX ஐ புலிகள் ஏன் உருவாக்கினார்கள், அங்கு நடந்தது என்ன, ஒரே சமயத்தில் எல்லா தளபதிகளும் ஏன் அங்கு மாட்டினார்கள் என்ற விபரத்தை விலாவாரியாக குறிப்பிடுவோம். இப்பொழுது மேலோட்டமாக குறிப்பிடுகிறோம்.

ஆனந்தபுரம் BOX இற்குள் மாட்டிய புலிகளின் தளபதி பானு மட்டுமல்ல. தீபன், கடாபி, விதுஷா, துர்க்கா, மணிவண்ணன், கோபித், சுயாகி, நாகேஷ் என புலிகளின் முன்னணி தளபதிகளில் முக்கால்வாசிப்பேர் அதற்குள் சிக்கினார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் மரணமானார்கள். பானு தப்பித்தார்.

ஆனந்தபுரம் BOX இற்குள் இருந்து தப்பித்து வெளியேறிய ஒரே தளபதி பானு மட்டுமல்ல. தளபதி நாகேஷூம் தப்பித்து வெளியேறினார். அவருக்கு கையில் சிறிய காயம் ஏற்பட்டிருந்தது. அவருடன் நான்கைந்து, போராளிகளும் தப்பித்து வெளியேறியிருந்தனர். பானுவுடனும் சில போராளிகள் தப்பித்து வெளியேறினர். இவர்களை விட, உதிரிகளாக பல போராளிகள் தப்பித்து வெளியேறினார்கள்.

ஆகவே, ஆனந்தபுரம் BOX இற்குள் இருந்து தப்பித்து வெளியேறிய ஒரே ஆள் பானு அல்ல!

பானு இராணுவத்துடன் தொடர்பில் இருந்தார், அதனால்தான் அவரால் தப்ப முடிந்தது என்பது தவறான தகவல். ஆனந்தபுரத்தின் வரைபடம் தெரிந்தவர்களிற்கு ஒரு விசயம் புரியும் அந்த சிறிய பரப்பிற்குள் நடந்த உக்கிரமோதலில் இராணுவத்தின் ஆளை தவிர்த்து, தாக்குதல் நடத்த முடியாதென்பது.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதி, அற்கப்பால் சிறிது தூரம் இராணுவம் கட்டுப்பாட்டில் வைத்திருந்தது. அதற்கு எதிர்ப்புறமாக மந்துவில் குளம், நீரேரி பகுதிகளும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இடையில் இருந்த ஒரு கிலோமீற்றர் அகலமான நிலப்பரப்புதான் புலிகளின் நிலை.

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை வீதிப்பக்கம் நிற்கும் இராணுவம் சுட்டால், மந்துவில் பக்கம் நிற்கும் இராணுவத்தின் காதோரம் காற்றை கிழித்துக் கொண்டு ரவைகள் செல்லும். அப்படி நெருக்கமான களம் அது. அதற்குள் பானு எங்கு நிற்கிறார், மற்றவர்கள் எங்கு நிற்கிறார்கள் என்பதை கவனித்து தாக்குதல் நடந்த முடியாது.

ஆனந்தபுரம் BOX எனப்படுவது நான்கு பக்கமும் இராணுவத்தால் சூழப்பட்ட புலிகள் நிலைகொண்டிருந்த குறுகிய நிலப்பரப்பு. புலிகள் இந்த தாக்குதலில் தோல்வியடைந்ததற்கு ஒரேயொரு காரணம்தான். அது புலிகளின் கணிப்பொன்று பிசகியது!

ஆனந்தபுரம் BOX இல் நிலைகொண்டுள்ள தமது படையணிகளை இராணுவம் மூன்று முனைகளில்தான் சந்திக்கும் என புலிகள் கணக்குப்போட்டனர். இரணைப்பாலை பக்கத்தால் 58வது டிவிசன். புதுக்குடியிருப்பு பக்கத்தால் 53வது டிவிசன். மந்துவில் பக்கத்தால் அதிரடிப்படை.

மூன்று முனைகளிலும் இராணுவத்துடன் புலிகள் மோதிக்கொண்டிருக்க, பச்சைப்புல்மோட்டை பகுதியின் ஊடாக, மாத்தன் தொடக்கம் முள்ளி வாய்க்கால் வரையான களப்பு நிலத்துடன் தொடர்பை வைத்திருக்கலாமென நினைத்தார்கள். பச்சைப்புல்மோட்டைக்கும் வலைஞர் மடத்திற்குமிடையில் கோடைகாலத்தில் நந்திக்கடல் நீர் வற்றி சிறிய தரைப் பாதையொன்று ஏற்படும். அதனூடாக புலிகளின் வாகனப் போக்குவரத்தும் நடந்தது. ஆனந்தபுரம் BOX இற்குள் இருந்து பிரபாகரன் வெளியேறியதும் இந்த தரைப்பாதையினூடாகத்தான்.

புலிகள் ஆனந்தபுரத்தில் நிலை கொண்டபோது, இந்த தரைப்பாதை இருந்தது. ஆனால் ஆனந்தபுரம் BOX சண்டை முடிந்த சில நாளில் அங்கு பெய்த கடும் மழையின் பின் நந்திக்கடலின் நீர்மட்டம் உயர்ந்து, அந்த பாதை பெருமளவில் மூடப்பட்டு விட்டது.

புலிகளின் இந்த வீநியோக பாதையை 58வது டிவிசன் படையினர் மூடிவிட்டனர். இரகசிய நகர்வொன்றின்மூலம் பாதையை இராணுவம் மூட, அதன்பின்னர், நடந்த கொடூர தாக்குதலே ஆனந்தபுர BOX தாக்குதல் எனப்படுகிறது.

ஆனந்தபுரத்திற்குள் இருந்து பச்சைப்புல்மோட்டை வழியாகவே பானு தப்பித்து சென்றார். அவரது அணி பச்சைப்புல்மோட்டை பகுதியில் உடைப்பு தாக்குதல் செய்தது. மட்டக்களப்பை சேர்ந்த தளபதி நாகேஷூம் பானுவுடன் கூட இருந்தார். அவர்களது அணி இராணுவத்தின் முன்னரணை பெரும் இழப்பிற்கு பின்னர் உடைத்தது. அதனால் பானு, நாகேஷ் BOX இற்குள்ளிருந்து வெளியேறினார்கள்.

வன்னி யுத்தத்தில் ஏற்கனவே பானு சில தோல்விகளை சந்தித்திருந்தது, அவரை இராணுவத்துடன் இணைத்து பேச வாய்ப்பேற்படுத்தி விட்டது என்பதே உண்மை.

இறுதியுத்தத்தின் ஆரம்ப கட்டத்தில் பானு மன்னார் களமுனைக்கு பொறுப்பாக இருந்தார். அப்போது அவரால் இராணுவத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. அவருக்கு முன்னர் தளபதியாக இருந்த ஜெயம், பின்னர் தளபதியாக இருந்த தீபன் ஆகியோராலும் மன்னார் முனையில் இராணுவத்தை கட்டுப்படுத்த முடியவில்லை.

பானுவிற்கு மேல் இப்படியான பழி ஏற்பட காரணமாக இருந்த இன்னொரு சம்பவம் வாகரை பின்வாங்கல். 2007 இல் மட்டக்களப்பின் வாகரையில் இருந்து பின்வாங்கிய புலிகளின் இறுதி அணியை பானுதான் வழிநடத்தினார். பானுவின் துரதிஷ்டம் புலிகளின் முக்கிய தோல்விகளில் பானு சம்பந்தப்பட்டிருக்கிறார். ஒரே தளபதி, முக்கிய எல்லா தோல்விகளிலும் சம்பந்தப்படஞ். இறுதியில் அவரை இராணுவத்துடன் கோர்த்து விட்டார்கள்.

2007 இல் தொப்பிக்கல காட்டை இராணுவம் முழுமையாக கைப்பற்றி, வாகரையை சுற்றிவளைத்தது. முள்ளிவாய்க்காலை போன்ற பெரும் மனித அவலம் ஒன்றின் பின்னரே வாகரை யுத்தம் முடிந்தது. ஆனால் அந்த அவலம் தமிழர்களாலோ, சர்வதேசத்தாலோ சரியாக புரிந்து கொள்ளப்படவில்லை. முள்ளிவாய்க்காலை விட, சற்று குறைவான தீவிரத்துடன் வாகரை போர் நடந்தாலும், அது உரியவிதத்தில் கவனிக்கப்படவில்லை. பொதுவாக வடக்கில் ஏற்படும் அவலங்கள்தான் அதிக முக்கியத்துவம் பெறும். இதுதான்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...



# பூமிக்கு வந்த தேவதை!

சந்திரமோகன்

கவுரி ஷிண்டே இயக்கிய 'இங்கிலீஷ் விங்கிலீஷ்' திரைப்படம் வெளியான சமயம். டெல்லி பிவிஆர் திரையரங்கின் வெளியே நல்ல கூட்டம். வந்திருந்தவர்களில் கணிசமானோர் 15 ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் நடிக்க வந்திருந்த ஸ்ரீதேவியைத் திரையில் காணும் ஆர்வத்தில் வந்திருந்தவர்கள் என்பதை அவர்களுடைய பேச்சு சொன்னது. வரிசையில் நின்றிருந்த ஒரு நடுத்தர வயதுப் பெண், 'மிஸ்டர் இந்தியா' படத்தின் 'ஐ லவ் யூ' பாடலில் ஸ்ரீதேவியின் நடனத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். நீலச் சேலை முழுவதும் தென்றலில் நெகிழ்ந்தாட, காதல் சொட்ட அவர் ஆடும் நடனம் அது. 'இங்கிலீஷ் விங்கிலீஷ்' படத்திலும் ஒரு காட்சியில் ஸ்ரீதேவி யின் மகன் அவரை மைக்கேல் ஜாக்ஸன் நடனம் ஆடச் சொல்வான். அப்போது மிக எளிதாக அதேசமயம் ஒரு அமெச்சூர்போல அந்த நடனத்தை ஆடுவார் ஸ்ரீதேவி. அவர் ஆடாத நடனமா!

மிகச் சிறிய வயதில் நடிக்க வந்தவர். 'நல்ல பேரை வாங்க வேண்டும் பிள்ளைகளே'(நம்நாடு)என்றுஎம்ஜிஆர் பாடும்போது மழலைச் சிரிப்புடன் தலையாட்டும் பையனாக வருவார். 'துணைவன்' (1969) படத்தில் 'முருகக் கடவுள். சிவாஜியின் 'பாபு' படத்தில் அம்மு என்று குழந்தை நட்சத்திரமாகத் தொடர்ந்து நடித்துவந்தவர், தனது பதின்பருவத்தின் தொடக்கத்திலேயே நாயகியாகிவிட்டார். ஆம், பால சந்தரின் 'மூன்று முடிச்சு' படத்தில் ரஜினி, கமலுடன் போட்டி போட்டு நடித்தபோது, அவருக்கு வயது வெறும் 13. எத்தனை சவால்களைக் கடந்து இந்தியத் திரையுலகின் உச்ச நட்சத்திரமாக வளர்ந்திருப்பார் என்பதை நினைத்துப் பார்த்தால், அவரது வெற்றியின் பிரம்மாண்டம் புரியும்.

நடிப்பில் அவருக்கு எதுவுமே சவால் இல்லை என்றே சொல்லலாம். எதையும் அநாயாசமாகச் செய்து விடுவார். 'ஜானி' அர்ச்சனா பாத்திரம் ஒன்று மட்டுமே ஒரு நடிகையின் வாழ்நாளுக்குப் போதுமானது. ரஜினி யிடம் தன் காதலை வெளிப்படுத்தி சங்கடப்படும் காட்சியில் அவர் காட்டியிருக்கும் நுட்பம் பிறவிக் கலைஞருக்கானது.

பெரிய அளவில் கவனிக்கப்படாத 'மனிதரில் இத்தனை நிறங்களா?' படத்தில் தன் மீது விழுந்த கறையைத் தாங்கிக்கொண்டு எதிர்நீச்சல் போடும் பாத்திரம். அந்த வைராக்கியம் படம் முழுவதும் உறுதியுடன் வெளிப்படும். தன்னைக் காதலிப்பதாகச் சொல்லும் நாயகனிடமிருந்து விலகிச் செல்ல நினைத்தாலும் மனம் கேட்காது. அந்த உணர்வை மிக நுட்பமாக வெளிப் படுத்துவார். 'மழை தருமோ என் மேகம்?' பாடலில் அவர் காட்டும் தவிப்பைக் கவனித்திருக்கிறீர்களா? கழிவிரக்கமும் காதலும் வைராக்கியமும் ஒன்றுடன் ஒன்று மோத, கண்கள் மூலம் அந்தக் கலவையை வெளிப்படுத்தும் அழகு, இயக்குநர் சொல்லித்தருவதையும் தாண்டி வெளிப்படும் கலைத்திறன் அல்லவா!

திரைக் கலைஞர்கள் எல்லா வித மான பாத்திரங்களிலும் நடிக்கத்தான் செய்கிறார்கள். ஆனால், எந்தப் பாத்தி ரத்திலும் ஒன்றி நடிக்க முடியும், பரிமளிக்க முடியும் என்று நிரூபித்த வர்கள் சிலரே. மடிசார் முதல் மாடர்ன் உடை வரை எந்த வகையான உடை யும்பொருந்தும் கச்சிதமான உடலமைப் பையும் அவர் பெற்றிருந்தார்.

நடித்த அத்தனைப் பாத்திரங்களிலும் தோற்றம், உடல்மொழி, உச்சரிப்பு என்று எல்லா வகைமையிலும் பொருந்திப்போனவர் ஸ்ரீதேவி. 'மூன்றாம் பிறை'யில் குழந்தைமை வெளிப்படும் காட்சிகளில் அத்தனை வெகுளியாக இருக்கும் ஸ்ரீதேவி, கமலைக் கதறவைத்துவிட்டு ரயிலில் புறப்படும்போது எப்படி மாறியிருப் பார்? வெறுமனே ஒப்பனை மாற்றத் தில் செய்துகாட்டக்கூடிய விஷயமா அது! 'மீண்டும் கோகிலா'வில் "விஷமம் பண்ணாதேள்" என்று கமலைக் கண்டித்துக்கொண்டே வெட்கப் படுவார். அந்தப் படத்தின் 'சின்னஞ் சிறு வயதில்' பாடலில், குழந்தை சிறுநீர் கழித்துவிட அவஸ்தையில் நெளியும் கமலை ஓரக்கண்ணால் பார்த்தபடி குறும்புடன் பாடும் ஸ்ரீதேவி வெறும் நடிகை மட்டும்தானா?

ஸ்ரீதேவியைப் பற்றிக் குறிப்பிடும் போது வைஜெயந்திமாலா, ஹேம மாலினிபோல் தமிழகத்திலிருந்து பாலிவுட் சென்று வெற்றி பெற்றவர் என்பார்கள். உண்மையில், தமிழ்ப் படங்கள், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய தென்னக மொழிப் படங்களில் நடித்துப் பெரும் புகழ்பெற்ற பின்னர், 1980களின் தொடக்கத்தில் பாலிவுட் சென்று மிகப் பெரிய வெற்றிகளைக் கண்டவர் என்பது ஸ்ரீதேவியின் தனிச்சிறப்பு. 1980 களின் தொடக்கத்தில் அவர் நடித்த இந்திப் படங்கள் மிகப் பெரிய வெற்றி பெற இந்தியாவின் முதல் 'பெண் சூப்பர் ஸ்டாரானார். ராஜேஷ் கன்னா, தர்மேந்திரா, மிதுன் சக்கரவர்த்தி, அமிதாப் பச்சன், ரிஷிகபூர், அனில் கபூர், சல்மான் கான், சஞ்சய் தத் என்று பாலிவுட்டில் அவர் ஜோடி சேராத பெரும் நாயகன்கள் இல்லை. மிக நீண்ட காலம் பாலிவுட்டை அவர் கட்டியாண்டார்.

ரஜினியுடன் நடித்த 'நான் அடிமை இல்லை' படம்தான் தமிழில் கதாநாயகியாக அவர் நடித்த கடைசிப் படம். அதன் பிறகு, தொடர்ந்து இந்திப் படங்களில்தான் கவனம் செலுத்தினார். 'இங்கிலீஷ் விங்கிலீஷ்', 'புலி' போன்ற படங்கள் மூலம் நீண்ட நாட்களுக்குப் பின்னர் தமிழ்த் திரையில் தோன்றினாலும் அவர் பெயர் சொல்லத்தக்க ஒரு படம் மீண்டும் வரவில்லை என்ற வருத்தம் தமிழ் மக்களிடம் தொடர்ந்து இருந்தது. இதோ, அவரது மறைவுச் செய்தி கேட்டுத் தமிழகமே அதிர்ந்து நிற்கிறது.

சிரஞ்சீவியுடன் அவர் நடித்த 'ஜகதேக வீருடு அதிலோக சுந்தரி' படத்தில் பூவுலகில் தனது மோதிரத்தைத் தொலைத்துவிட்டு, அதைத் தேடித் திரியும் தேவ கன்னிகையாக நடித்திருப்பார். தேவதைக்கு மோதிரம் கிடைத்திருக்க வேண்டும். நம்மை விட்டு மறைந்துவிட்டார்!







# தடையில்லா பிஸ்னஸிற்கு இயந்திரங்கள் மேலாண்மை!


எல்லா பிஸ்னஸிலும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுவதில்லை என்றாலும் பெரும்பாலான பிஸ்னஸ்களில் இயந்திரங்கள் பயன்படுத்தப் படுகின்றன. முக்கியமாக, பொருள்களை உற்பத்தி செய்யும்போது இயந்திரங்கள் மிகவும் அவசியமாகின்றன. வருடம் முழுவதும் இயந்திரங்களைப் பயன்படுத்தினாலும் வருடத்தில் ஒருநாள் கொண்டாடப்படும் ஆயுத பூஜையின் போதுதான் ஒவ்வொருவருக்கும் இயந்திரங்களின் முக்கியத்துவம் தெரியவரும்.

நம் பிஸ்னஸில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன இயந்திரங்களின் தொழில்நுட்பங்கள் தற்போது மிகவும் நவீனமடைந்துவிட்டன. இந்த நிலையில், நாம் நமது பிஸ்னஸில் பயன்படுத்தும் இயந்திரங்களை எப்படி சரியாகப் பராமரித்துப் பேணிக் காப்பது என்பதைத் தெரிந்துகொள்வது அவசியம்.

**இயந்திரங்களின் வகைகள்**

இயந்திரங்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அலுவலகத்தில் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் என்பவை ஒருவகை; உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் இயந்திரங்கள் என்பவை மற்றொரு வகை. அலுவலகத்தில் பயன்படுத்தும் இயந்திரங்கள் பெரும்பாலும் எலெக்ட்ரோனிக் தொழில்நுட்பம் சார்ந்தவை. உற்பத்திக்குப் பயன்படுத்தும் இயந்திரங்கள் பெரும்பாலும் இன்ஜினீயரிங் தொழில்நுட்பம் சார்ந்தவை.

அலுவலகங்களில் பயன்படுத்துவதில் முக்கியமானவை கணினி, பிரின்டர், ஸ்கானர் போன்றவை. இவை அனைத்து பிஸ்னஸிலும் தற்போது பயன்படுத்தப்பட்டாலும், பெருமளவில் அவசியமாக இருப்பது தொழில்நுட்பம் சார்ந்த பிஸ்னஸ்களுக்குதான். நம்முடைய தேவைக்கு ஏற்றாற்போல் இவற்றை வாங்கிக் கொள்ளலாம்.



சிறு பிஸ்னஸுக்கு ஒன்று அல்லது இரண்டு கணினி இருந்தால் போதுமானது. லப்ரொப்பாக இருந்தால் மிகவும் நல்லது. ஏனெனில் நம்மால் எங்கு வேண்டுமானாலும் அதை எடுத்துச் செல்ல முடியும். கணினி வாங்கும்போது நம் தேவைக்கு ஏற்றபடி பார்த்து வாங்கவேண்டும். கணினிக்கு எந்தப் பங்கமும்வராமல் தடுக்க, ஒரிஜினல் ஆன்ட்டி வைரஸ் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டும். அன்ட்டி வைரஸ் ஒரிஜினலுக்குச் செலவு செய்ய யோசித்து, பைரேட்டட் அன்ட்டி வைரஸினை வாங்கிப் போட்டால், அடிக்கடி பிரச்னை வந்து, செலவு செய்ய வேண்டியிருக்கும்.

பிரின்டர் வாங்கும்போது அது லேசர் பிரின்டராக இருப்பது நல்லது. பிரின்டரை டோனரின் விலையை அடிப்படையாக வைத்து வாங்கவேண்டும். பிரின்டர் ரூ5,000, டோனர் ரூ.1000 என்றால் அதைத் தவிர்த்து விட்டு, தரமான பிரின்டர் 7,000 ரூபாய், டோனர் 250 ரூபாய் என்கிற. விலையில் வாங்கலாம்.

ஆவணங்களை அனுப்பவும், அரசு இணையதளங்களில் பதிவு செய்யவும் ஸ்கானர்தான் அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. யாரும் இப்போது தொலைநகலை அதிகம் பயன்படுத்துவதில்லை. எனவே, ஸ்கானர் மிகவும் அவசியம்.

**உற்பத்தி இயந்திரங்கள்**

உற்பத்தி இயந்திரங்களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று, உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள். இரண்டு, உணவு அல்லாத பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள். உணவுப் பொருள் தயாரிக்கும் பிஸ்னஸில் உணவுப் பொருள்களைத் தயாரிக்கும் இயந்திரங்கள், தயாரித்த பொருள்களை பேக்கிங் செய்ய இயந்திரங்கள் என அடுத்தகட்டங்களில் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உணவுப் பொருள் உற்பத்திக்குத் தேவைப்படும் இயந்திரங்கள், பொருளுக்கு ஏற்றவாறு மாறுபடும்.

நம்முடைய பிஸ்னஸுக்கு ஏற்ப இயந்திரங்களை வாங்க வேண்டும். திரவப் பொருள்களுக்கு தனியான இயந்திரங்களையும், திடப் பொருள்களுக்கு தனியான இயந்திரங்களையும் வைத்துக் கொள்ள வேண்டும். சில சமயங்களில் சந்தையில் ஏற்கெனவே உள்ள மெஷின்களுக்குப் பதிலாக நம்முடைய பொருளுக்கு ஏற்ற மாதிரி நமக்கென பிரத்யேகமாகவும் மெஷின்களைத் தயார் செய்யலாம்.

**உற்பத்திக்குப் பிறகான இயந்திரங்கள்**

**ஸ்கேலிங் மெஷின்:** இது பெரும்பாலான சிறு குறு தொழில்களுக்கு கட்டாயம் தேவைப்படும். ஒரு கிலோ முதல் 100 கிலோ வரையிலான ஸ்கேலிங் மெஷின்கள் உள்ளன. எந்தமாதிரியான ஸ்கேலிங் மெஷின் என்பதை பிஸ்னஸுக்கு ஏற்றவாறு வாங்கிக் கொள்ளலாம். ஆனால், அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்திடமிருந்துதான் வாங்கவேண்டும். தனியாரிடம் வாங்கினாலும் அதற்கு அரசுத் தரப்பில் இருந்து சோதனை செய்து சீல் வாங்கவேண்டும்.

**ஹாண்ட் சீலிங் மெஷின்:** பேக்கிங் அளவைப் பொறுத்து அதற்கேற்ப சீலிங் மெஷின் வாங்க வேண்டும். சீலிங் மெஷினை வாங்கும்போது அதோடு சேர்த்து அதில் பயன்படுத்தப்படும் இரும்புக் கம்பி ஒன்றையும், அதன் மேல் ஒட்டும் ரேப் ஒன்றையும், கூடுதலாக வாங்கிக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்த இயந்திரம் அடிக்கடி பழுதடைய வாய்ப்புள்ளதால், உடனே மாற்றிக்கொள்ள உதவியாக இருக்கும். இது ரூ.1,500லிருந்து ரூ.5,000 வரையில் கிடைக்கும்.


ஒரு கிலோ வரைக்கும்தான் இந்த ஹாண்ட் சீலிங் மெஷின் உதவியாக இருக்கும். ஒரு கிலோவுக்கு மேல் பொருள்களை பேக்கிங் செய்வதாக இருந்தால், அதற்குநிறைய இயந்திரங்கள் சந்தையில் உள்ளன. அவற்றில் பொருளின் அளவை நிர்ணயம் செய்து, பேக்கில் அடைத்து சீல் செய்யும் வரை அனைத்து வேலையையும் செய்துவிடும் வகையிலான மெஷின்கள் உள்ளன.

**உணவு அல்லாத பொருள்களுக்கான இயந்திரங்கள்**

உணவு அல்லாத பொருள்களை உற்பத்தி செய்யும் பிஸ்னஸ்கள், பெரும்பாலும் மிகப் பெரிய முதலீட்டுடன் செய்யப்படக் கூடியவை. ஆட்டோ மொபைல், பிளாஸ்டிக், கெமிக்கல், உலோகங்கள் போன்றவற்றுக்குப் பெரிய அளவில் மெஷின்கள் தேவைப்படும். இதிலும் சிறிய அளவில் செய்பவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தங்களிடம் உள்ள ஒன்று, இரண்டு லேத் மெஷின், மோல்டிங் மெஷின், வெல்டிங் மெஷின் போன்றவற்றை வைத்துக்கொண்டு பிஸ்னஸ் செய்கிறார்கள்.

**முதலீடும் பாதுகாப்பும்**

பிஸ்னஸ் மதிப்பில் இவ்வளவு சதவிகிதம் இயந்திரங்களுக்கு முதலீடு செய்யலாம் என்று எந்த வரைமுறையும் இல்லை. ஆனால், நம்முடைய பிஸ்னஸுக்குத் தேவையான இயந்திரங்களை மட்டுமே வாங்கவேண்டும். தேவையற்ற இயந்திரங்களை வாங்குவதால், முதலீடு வீணாவதுடன், அந்த இயந்திரம் பயன்படுத்தாமலேயே பழுதாகும் நிலை ஏற்படும். அதேபோல், வாங்கும் இயந்திரம் நவீன தொழில் நுட்பம் கொண்டதாகவும், தரமானதாகவும் இருக்க வேண்டும்.




ஒவ்வொரு இயந்திரத்துக்கும் தரப்பட்டுள்ள செயல்முறையின்படி மட்டுமே கையாளவேண்டும். அந்தந்த இயந்திரங்களைக் கையாளும் நிபுணத்துவம் கொண்டவர்களை வைத்து மட்டுமே இயக்கவேண்டும். மேலும், இயந்திரத்தின் தேய்மானம், விபத்து நடக்காமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் ஆகியவற்றை சரியான நேரத்தில் செய்ய வேண்டும். இயந்திரங்களின் செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணிக்கவும், சோதனைச் செய்யவும் வேண்டும். மூன்று நாள்களுக்கு மேல் இயந்திரங்களை இயக்காமல் இருக்கக்கூடாது. இரண்டுமாதங்களுக்கு ஒருமுறை, இயந்திரங்களைக் கட்டாயமாக சுத்தம் செய்யவேண்டும். இயந்திரங்கள் அதிகம் தேவைப்படவில்லை என்றால், பிறரிடம் உள்ள இயந்திரத்தை வைத்தே நமக்கான தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அதேபோல், நம்முடைய இயந்திரத்தையும் நம்முடையத் தேவைபோக, பிற நேரங்களில் பிறருக்காக இயக்கி அதன் மூலம் லாபம் ஈட்டலாம்.

தடையில்லாமல் தொடர்ந்து பிஸ்னஸ் நடைபெற, இயந்திரங்கள் பேணிக் காக்கப்படுவது அவசியம் என்பதை உணர்ந்து செயல்பட வேண்டும்.

தொடரும்...



# பண்ணை வீட்டில் பதுங்கியிருந்த பதினாறு வயது மனைவி

## அல்ஹைதா தலைவரை அமெரிக்கா எப்படி கண்டுபிடித்தது தெரியுமா?

### 7 சி.ஐ.ஏ செய்த வெளிநாட்டு ஒப்ரேசன்கள்

அபு முஸப் அல்ஸவாகி. ஈராக் அல் கைதா இயக்கத்தின் தலைவர். 2006 ஜூன் மாதத்தில் இவர் கொல்லப்பட்டார். இவர் கொல்லப்பட்ட பின்னர்தான், மத்திய கிழக்கு ஒப்ரேஷனை கவனித்து வந்த சி.ஐ.ஏ நிம்மதியாக மூச்சு விட்டது.


அல்ஸவாகி அவ்வளவு பயங்கரமான ஆளா?

இதற்கு பதில் ஆம் என்பதுதான். அல்ஸவாகி உயிரோடு இருந்தவரையும், அமெரிக்காவின் தேடப்படுபவர்கள் பட்டியலில் முதலிடத்தில் இருந்தார். அவரைப்பற்றிய தகவல்தருபவர்களிற்கு 25 மில்லியன் அமெரிக்க டொலர் பரிசளிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்திருந்தது. இப்பொழுது அல் ஸவாகி அமெரிக்காவிற்கு எவ்வளவு "வேண்டப்பட்டவர்" என்பது புரிகிறதா?.

அல்கைதா தலைவர்களை சி.ஐ.ஏ ட்ரக் டவுன் செய்ய தொடங்கியதும், அவர்கள் இலத்திரனியல் உபகரண தொடர்பாடல்களை கைவிட்டு விட்டார்கள், கூரியர்கள் எனப்படும் நடமாடும் தகவல் சொல்பவர்கள் மூலமே தகவல் பரிமாற்றத்தில் ஈடுபட்டனர் என்றும் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

அல்ஸவாகி வானொலிப்பெட்டியை தவிர வேறெந்த இலத்திரனியல் உபகரணத்தையும் தன்னுடன் வைத்திருப்பதில்லை. அப்படியிருந்தும் அவரது இருப்பிடத்தை சி.ஐ.ஏ கண்டுபிடித்தது. அது எப்படி?

அல்ஸவாகியின் கூரியர் ஒருவரை சவுதி அரேபிய உளவுத்துறை ட்ரக் டவுன் பண்ணினார்கள். அவர்கள்தான் முதலில் ஈராக் அல் கைதா தலைவரின் கூரியர் ஒருவரை ட்ரக் டவுன் செய்தார்கள். சவுதி அரபிய உளவுத்துறையுடன் இணைந்து மத்திய கிழக்கில் சில விசயங்களை அமெரிக்காவின் எப்.பி.ஐ (திஙிமி) உளவுத்துறை செய்துவந்தது. ஈராகில் அமெரிக்கப்படைகள் இருந்ததால், இந்த தகவலை அப்படியே எப்.பி.ஐ



க்கு மாற்றினார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், சில வாரங்களிலேயே எப்.பி.ஐ இன் ட்ரக் டவுனிற்கு வெளியில் சென்றுவிட்டார் அந்த கூரியர்!

அவரைப்பற்றிய எந்த தகவலையும் எப்.பி.ஐ இனால் பெற முடியவில்லை.

அல்ஸவாகியின் ஆலோசகராக மதகுரு அப்துல் ரஹ்மான், அல் ஸவாகியின் முதல் மனைவி உம் மொஹமட் ஆகியோர் மீது எப்.பி.ஐ ஏற்கனவே கண் வைத்திருந்தது. ஆனால் அவர்களையும் அல்ஸவாகியோ, அந்த கூரியரோ சந்தித்ததாக தகவல் இல்லை.

அந்த கூரியர் ஈராக்கை விட்டே வெளியேறியிருக்கலாமென எவ்.பி.ஐ நினைத்தது. ஜோர்தான், சவுதி, கட்டார், இஸ்ரேல் உளவுத்துறைகளிற்கும் அந்த கூரியர் தொடர்பான தகவல்களை அனுப்பி, ஏதாவது துப்பிருக்கிறதா என கேட்டார்கள். ஆனால் கிடைத்த மிக முக்கிய துரும்பொன்றை கவனயீனமாக கைவிட எவ்.பி.ஐ விரும்பவில்லை. அதனால் சி.ஐ.ஏ இடமும் அந்த தகவலை பாஸ் செய்தனர்.

அதாவது ஈராக்கிய அல்கைதா தலைவரை வேட்டையாட அமெரிக்கா, இஸ்ரேல், ஜோர்தான், சவுதி அரேபியா, கட்டார் ஆகிய நாடுகள் கூட்டாக புலனாய்வு ஒப்ரேஷனில் ஈடுபட்டனர்.

இந்த சமயத்தில்தான் ஜோர்தான் உளவுத்துறைக்கு ஒரு முக்கிய தகவல் கிடைத்தது. பகுபா பகுதியிலுள்ள உணவகம் ஒன்றின் வாடிக்கையாளர் சந்தேகப்படும்படியான ஒருவர். அல் ஸவாகிக்கு நெருக்கமான ஆளாக அவர் இருக்க வேண்டும். சில சமயங்களில், அந்த கூரியராக கூட அவர் இருக்கலாம்!

அவரை அடையாளம் காண சி.ஐ.ஏ உதவியது. சாட்சாத் அந்த கூரியரேதான்! அந்த கூரியரை ஜோர்தானிய உளவுத்துறை தொடர்ந்து ட்ரக் டவுன் செய்ய, பகுபாவிலிருந்து எட்டு கி.மீ தொலைவில் உள்ள சிறிய கிராமமொன்றிலிருந்த பண்ணை வீட்டின் மீது கவனம் சென்றது.

அல்ஸ்வாகிக்கு நான்கு மனைவிகள். அதில் மூத்தவர் உம் மொஹமட். அவர் இருந்தது ஜோர்தானில்.

அல்ஸவாகியிடம் தொலைபேசி இருக்கவில்லையே தவிர, உம் வைத்திருந்தார்!

உம் இருந்தது ஜோர்தானில். அவரது தொலைபேசியை தொடர்ந்து ட்ரக் டவுன் செய்ததில், ஈராக்கின் பகுபா பகுதியிலிருந்து செய்மதி தொலைபேசியில் எப்பொழுதாவது திடீர்திடீரென மிகக்குறுகிய அழைப்புக்கள் வந்திருந்தன. அந்த செய்மதி தொலைபேசியை ட்ரக் டவுன் செய்தார்கள். அந்த தகவல் சி.ஐ.ஏ இடமும் கொடுக்கப்பட்டிருந்தது. பகுபாவிற்கு பக்கத்தில் இரண்டொரு முறை அந்த செய்மதி தொலைபேசியை சி.ஐ.ஏ ட்ரக் டவுன் செய்திருந்தது. ஆனால் அதை வைத்து உருப்படியான தகவல் எதையும் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனெனில் மிக நுட்பமாக அதை பாவித்தார்கள்.

இதன்பின்னர் பகுபா உணவகத்தை மையமாக வைத்து ஜோர்தானிய உளவுத்துறை சில மாதங்கள் செயற்பட்டது. உணவக உரிமையாளரிற்கு ஜோர்தானிய உளவுத்துறை தாராளமாக பணம் கொடுத்தது. ஏற்கனவே அமெரிக்க அறிவித்திருந்த 25 மில்லியன் டொலர் ஆசையையும் காட்டியது. இவர் மூலமே அல் ஸவாகியின் பண்ணை வீடு அடையாளம் காணப்பட்டது..

அல்ஸவாகியை தேடி அமெரிக்கா ஈராக் முழுவதும் சல்லடை போட்டுக் கொண்டிருக்க, அந்த பண்ணை வீட்டை குறிப்பிட்டு காண்பித்தது ஜோர்தானிய உளவுத்துறை.

ஜோர்தானிய உளவுத்துறையின் தகவலை உறுதிசெய்ய சி.ஐ.ஏ விரும்பியது. பக்தாக் அமெரிக்க ஒப்ரேஷன் சென்ரரின் மிக உயர்மட்ட அதிகாரியொருவரிடம் அல்ஸவாகி விசயம் கையளிக்கப்பட்டது.

அமெரிக்க ரேஞ்சர்களும், சில உள்ளூர் தகவல் அளிப்பவர்களும் அந்த பண்ணைவீட்டை கண்காணிக்க ஆரம்பித்தனர். கொஞ்சம் ஒதுக்குப்புற

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

மான இடத்தில் இருந்த பிரமாண்ட வீடு அது. அந்த வீட்டைச்சுற்றி இருந்த சிற பற்றைக்காடுகள், மரங்களில் அமெரிக்க ரேஞ்சர்கள் வாரக்கணக்கில் மறைந்திருக்க வைக்கப்பட்டார்கள். பிரதான வீதிகளும் கண்காணிக்கப்பட்டன. அந்த கிராமத்தில் மிக இரகசியமாக, உயர்மட்ட புலனாய்வு நெட் வேர்க் ஒன்றை அமைத்தது அமெரிக்கா.

பண்ணை வீட்டிற்கு அந்த கூரியர் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்தார். ஆனால் அல்ஸவாகி யாருடைய கண்ணிலும் படவில்லை. அவர் இடம்மாறி சென்றிருக்கலாமென சில அதிகாரிகள் நினைத்தனர்.

இந்த சமயத்தில்தான் இன்னொரு தகவல் அமெரிக்க அதிகாரிகளிற்கு கிடைத்தது. அந்த பண்ணை வீட்டில் வேலைசெய்யும் ஆள் ஒருவர், பெண்களிற்கான மாதவிடாய் நப்கின்களை வாங்கிக்கொண்டு அந்தவீட்டிற்கு சென்றிருக்கிறார். நிச்சயம் அங்கே யாரோ முக்கியமான பெண் இருக்க வேண்டும். அவர் ஏன் இதுவரை முகத்தை காட்டவில்லை? அதனால் கண்காணிப்பை நிறுத்துவதில்லையென்ற முடிவிற்கு வந்தனர்.

இந்த நிலையில் திடீரென ஒருநாள் அடுத்த தகவல், மற்றொரு சோர்ஸிடம் இருந்து சி.ஐ.ஏ.வுக்கு கிடைத்தது பண்ணை வீட்டுப் பகுதியை நோக்கி, அப்துல் ரஹ்மான் செல்கிறாராம்!

உடனடியாக இந்தத் தகவல் பண்ணை வீட்டைச் சூழ மறைந்திருந்த ராணுவ ரேஞ்சர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

உட்னே பண்ணை வீட்ண்ட நோக்கி மேலும் பல ராணுவ ரேஞ்சர்களை அனுப்ப முடிவு எடுக்கப்பட்டது. ஆனால், அதற்கு வாய்ப்பில்லாமல் அடுத்தடுத்த “மில்லியன் டொலர் பெறுமதியான தகவல்கள்“ வந்து கொண்டிருந்தன!

அப்துல் ரஹ்மான் பண்ணை வீட்டுக்குள் சென்றார். அடுத்த 30 நிமிடங்களில், வேறு இரண்டு வாகனங்கள் அந்த வீட்டுக்கு முன்னே வந்து நின்றன. அதிலிருந்து இறங்கியவர்களில் ஒருவர் அல்ஸவாகி!

அல்ஸவாகி பண்ணை வீட்டுக்குள் நுழைந்துவிட்டார் என்ற விபரத்தை, அங்கே மறைந்திருந்த இராணுவ ரேஞ்சர்கள் உடனடியாக மேலிடத்திற்கு அறிவித்தார்கள். புதிதாக மேலதிக ஆட்களை அனுப்பி, தரைவழி அதிரடி ஒப்ரேஷன் ஒன்றை செய்யலாமா என்று யோசித்தார்கள். சில சமயங்களில் அல்ஸவாகியை உயிரோடு பிடிக்கவும் வாய்ப்பு கிடைக்கலாமென அமெரிக்க அதிகாரிகள் நினைத்தனர்.

ஆனால் அல்ஸவாகி அங்கு எவ்வளவு நேரம் இருக்கப் போகிறார் என்பது தெரியாது. தரை வழி தாக்குதல் நடத்த குறைந்தது முக்கால் மணித்தியாலமாவது தேவை. ப்ண்ணை வீட்டை சுற்றியிருப்பவர்கள் உளவு நடவடிக்கைக்காக ஈடுபடுத்தப்பட்டவர்கள். முறைப்படி திட்டமில்லாமல் வீட்டின் மீது தாக்குதல் நடத்துங்கள் என்ற ஒரு உத்தரவை கொடுத்தால் அது எப்படி முடியுமென்பது தெரியாது.

இதையெல்லாம் விட, பண்ணை வீட்டிற்குள் எத்தனை பேர் இருக்கிறார்கள், எப்படியான ஆயுதங்கள் இருக்கின்றன என்பதை இன்னும் உறுதிசெய்யவில்லை. இந்த நிலையில் தரை தாக்குதல் முடிவு முட்டாள்தனமானது. அல்ஸவாகியை உயிரோடு பிடிக்க வேண்டுமென்ற ஆசையில், தரைத்தாக்குதல் முடிவெடுத்து, அது வெற்றியளிக்காவிட்டால், அவர் எச்சரிக்கையாகிவிடுவார். இன்னொரு முறை அவரது நடமாட்டத்தை ட்ரக் டவுன் செய்ய முடியாமலே போய்விடலாம்.

அல்ஸவாகியை உயிரோடு பிடிக்க முடியாவிட்டால் கூட பரவாயில்லை, ஆனால் தப்பவிடக்கூடாது. அதற்கு வேறு என்ன செய்யலாம்?

அமெரிக்காவின் துல்லியமான ராார்க்கெட்டட் கில்லிங் (targeted killing) முறையை பாவிக்கலாமென அதிகாரிகள் முடிவெடுத்தனர்!

அதென்ன ராார்க்கெட்டட் கில்லிங்?

இதைப்பற்றி தீபம் வாசகர்களிற்கு ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். குறிப்பிட்ட இலக்கை வான்வழியாக துல்லியமாக தாக்கு அழிப்பது. அது தனி ஆளாகவும் இருக்கலாம். கட்டிடடமாகவும் இருக்கலாம். விமானம் மூலம், துல்லியமாக ஒருவரை கொல்வது சாதாரணமானதல்ல.

செய்மதிகளின் மூலம் இலக்கின் துல்லியமான அமைவிடத்தை கண்டுபிடித்து விட்டு, அந்த இலக்கின் தலையிலேயே விழக்கூடிய விதத்தில் குண்டு வீசுவதே அது. விடுதலைப்புலிகளின் அரசியல்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்செல்வன் மீதான தாக்குதலும் ராார்க்கெட் கில்லிங் முறைதான். அமெரிக்கா இன்னும் ஒருபடி மேலேபோய், லேசர் தொழில்நுட்பத்தின் மூலம் குண்டை வழிநடத்தும் தொழில்நுட்பத்தை வைத்திருந்தது.

ஏற்கனவே உளவு விமானங்களின் மூலம் அந்த பண்ணை வீட்டை துல்லியமாக லொக்கேற் பண்ணி வைத்திருந்தனர் அமெரிக்கர்கள். 33°48'02.83"N 44°30'48.58"E இதுதான் அல்ஸவாகியின் பண்ணை வீட்டின் சரியான லொக்கேஷன்!

சாத்தியமான வழி, விமானத்தாக்குதல்தான். விமானத் தாக்குதல் நடத்துவதென்றே முடிவெடுக்கப்பட்டது.

உடனடியாக பக்தாத் விமானநிலையத்தில் நின்ற இரண்டு F-16 விமானங்கள் தயார்படுத்தப்பட்டன.


அல்ஸவாகியின் பண்ணைவீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்ட மறுநாள். தேடுதல் நடத்தும் அமெரிக்க படைகள்

அவற்றில் லேசரால் வழிநடத்தப்படும் பதுங்குகுழிகளை அழிக்கும் சக்திவாய்ந்த குண்டுகள் இரண்டு இணைக்கப்பட்டது. ஒவ்வொன்றும் 230Kg நிறையுடையவை. இரண்டு விமானங்களும், வெறும் இரண்டேயிரண்டு குண்டுகளுடன்தான் சென்றன. அமெரிக்கர்களிற்கு தமது தாக்குதலின் துல்லியத்தில் அவ்வளவு நம்பிக்கை!

பக்தாத்திலிருந்து புறப்பட்ட விமானங்கள் நான்கு நிமிடத்தில் பகுபாவிற்கு பக்கத்தில் இருந்த அந்த பண்ணை வீட்டை குறிவைத்தன. பண்ணை வீட்டு பகுதிக்குள் நுழையும்போது, தாக்குதலிற்காக பதிந்தபடிதான் விமானங்கள் நுழைந்தன. வானத்தில் ஒரு வட்டமடித்து லொக்கேஷனை செக் பண்ணும் வேலையெல்லாம் நடக்கவில்லை. துல்லியமான விமானிகள் விமானத்தில் இருந்ததால், ஒரு அதிரடி தாக்குதலைப் போலவே விமானத்தாக்குதல் நடந்தது. விமானங்கள் திடீரென குண்டை வீசியபோது, பண்ணை வீட்டிலிருந்தவர்களால் சுதாகரித்துக்கொள்ள முடியவில்லை.

இரண்டு குண்டுகள் அடுத்தடுத்து விழுந்தன. பண்ணை வீடு முற்றாக தரைமட்டமானது. அல்ஸவாகி, மதகுரு அப்துல் ரஹ்மான், ஸவாகியின் 16 வயது மனைவி உள்ளிட்ட ஐந்து பேர் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலின் பின்னர்தான், அல்ஸவாகியின் 16வயது மனைவி அந்த பண்ணை வீட்டில் வசித்து வந்தது தெரிந்தது. வெளியில் தலைகாட்டாமல் அங்கு வசித்து வந்திருக்கிறார்.

இந்த விருந்தில் நான்கு ஆண்கள் கலந்து கொண்டிருந்தார்கள் என்று ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருந்தோம். அதில் ஒருவர் மதகுரு அப்துல் ரஹ்மான். மற்றைய இருவரும் அல்ஸவாகியின் கூரியர்கள். இவர்கள் அனைவரும் கொல்லப்பட்டனர்.

ஒரேயொரு ஆள் மிஸ்ஸிங்!

அஸ்ஸவாகி கொல்லப்பட்ட செய்தி வெளியானபோது, இதை யாரும் கவனிக்கவில்லை. அமெரிக்காவும் இதைப்பற்றி மூச்சுக்காட்டவில்லை. அவர் விருந்தின் இடையில் வெளியேறினாரா? அல்லது குண்டுவீச்சில் தப்பித்தாரா? பண்ணை வீட்டை சுற்றி உளவுபார்த்துக் கொண்டிருந்த ரேஞ்சர்களிடம் சிக்காமல் தப்பித்தாரா? அமெரிக்காவின் ஆளா அவர்? எதற்குமே விடை கிடைக்கவில்லை.

தாக்குதல் அறிக்கையில், அல்ஸவாகியுடன் நான்கு ஆண்கள் விருந்தில் கலந்து கொண்டார்கள் என்று மட்டுமே உள்ளது. ஒருவேளை, இன்னும் சிறிதுகாலத்தின் பின் Declassification செய்யப்படும் ஆவணங்களில் அவரைப்பற்றிய தகவல்கள் வெளியானாலும் ஆச்சரியமில்லை!


(தொடரும்)












நடிப்பு : கிருஷ்ணா, ஐஸ்வர்யா மேனன், கருணாகரன், தம்பி ராமய்யா, நான் கடவுள் ராஜேந்திரன், யோகி பாபு, ராதாரவி, நரேன்.

ஒளிப்பதிவு : விக்னேஷ், குமரன்.

இசை : லியோன் ஜேம்ஸ்

தயாரிப்பு : ஆர்.எஸ்.இன்போடெயின்மெண்ட்

இயக்கம் : ராஜாராமன்

கிருஷ்ணா, கருணாகரன் இரண்டு பேருக்கும் தங்களது ஏரியாவில் பெரிய ரவுடியாக வேண்டும் என்பது லட்சியம். அதற்கு அந்த ஏரியாவிலுள்ள மன்றத்தைக் கைப்பற்ற வேண்டும். அங்கு தற்போது தலைவராக இருப்பவரைப் போட்டுத்தள்ள வேண்டும். அதற்காக தம்பி ராமய்யாவின் ஆலோசனைப்படி, முன்னாள் ரவுடி ராதாரவியிடம் கொலைத்தொழில் பழகுகிறார்கள். பழகிவிட்டு, பிறகு குருநாதரையே போட்டுத்தள்ளி ரவுடியாக மாறி சிறைக்குச் செல்கிறார்கள். அங்கு கைதியாக இருக்கும் பெரிய ரவுடியிடம் கூட்டு சேருகிறார்கள். அவர்களுக்கு ஒரு பெண்ணைக் கடத்தும் அசைன்மெண்ட் கொடுக்கிறார், ரவுடி.

அந்தப் பெண், கிருஷ்ணா காதலிக்கும் ஐஸ்வர்யா மேனன். இவரது அப்பா நரேன், பல ரவுடிகளை தன்னுடன் வைத்திருக்கும் பாக்ஸர். ஐஸ்வர்யாவைக் கடத்தினால், நரேன் போட்டுத்தள்ளி விடுவார். கடத்தவில்லை என்றால், ரவுடி போட்டுத்தள்ளி விடுவார். இந்த இடியாப்பச் சிக்கலுக்குள் மாட்டிய கிருஷ்ணாவும், கருணாகரனும் அதிலிருந்து எப்படி வெளியே வருகிறார்கள் என்பது மீதி கதை. கைப்புள்ள கேரக்டரில் கிருஷ்ணாவும், பயந்தாங்கொள்ளி கேரக்டரில் கருணாகரனும் கச்சிதமாகப் பொருந்துகிறார்கள். ஐஸ்வர்யாவுக்கு அதிக வேலை இல்லை. யோகி பாபுவும், ராஜேந்திரனும் அடிக்கடி வந்து கிச்சுகிச்சு மூட்டுகிறார்கள். தம்பி ராமய்யா, கருத்து கந்தசாமியாக வருகிறார்.

ரவுடியாக இருந்து சாமியாராக மாறுகின்ற ராதாரவியின் காட்சிகள், கலகல ரகம். விக்னேஷ் மற்றும் குமரனின் ஒளிப்பதிவு கதைக்கு ஏற்றபடி இருக்கிறது. லியோன் ஜேம்ஸ் பின்னணி இசை பரவாயில்லை. பாடல்களில் எல்லாம் ஏற்கனவே ஹிட்டான ஏ.ஆர்.ரகுமான் பாடல்களின் சாயல். காமெடி என்ற பெயரில் படம் முழுக்க கொலை, ரத்தம், வன்முறைக் காட்சிகள் என திசை தெரியாமல் சென்றிருக்கிறார்கள். வசனத்தில் கெட்ட வார்த்தைகள், மது குடிக்கும் காட்சிகள், வெட்டுக்குத்து காட்சிகள் என வரிசை கட்டுகிறது.

கொலை செய்வது எப்படி என்பதை பள்ளிக்கூடம் மாதிரி வகுப்பு எடுக்கிறார்கள். மாரடைப்பால் இறந்துவிட்டவரைக் கூட, 'இவரு தானா செத்ததா இருக்கக்கூடாது. நாமதான் கொலை செய்ததா இருக்கணும்' என்று, ராதாரவியின் உடலில் கத்தியால் குத்துவது எல்லாம் வக்கிரத்தின் உச்சம். கொலை செய்வதையும் மற்றும் கை, கால்களை வெட்டுவதையும் ஏதோ மிகச் சாதாரணமான விஷயம் என்பது போன்ற கருத்தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது படம். கொலை செய்தால் வாழ்க்கையில் முன்னேறலாம் என்று, மிகக் கொடூரமான மெசேஜ் சொல்கிறார் வீரா.



## தேவதர்ஷினியின் விலகல்

சின்னத்திரை பிரபலங்களில் ஒருவர் தேவதர்ஷினி. சன் டிவியில் ஞாயிறு தோறும் சன்டே கலாட்டாவை தொகுத்து வழங்கினார். 300 எபிசோட் கடந்து ஒளிபரப்பாகி வரும் இந்த நிகழ்ச்சியிலிருந்து தேவதர்சினி திடீரென வெளியேறியுள்ளார். சன் டிவியுடன் ஏற்பட்ட மனஸ்தாபத்தினால்தான் அவர் வெளியேறினார் என்றும் கூறப்பட்டது. எனினும், தேவதர்ஷினி இதை மறுத்துள்ளார். சின்ன பிரேக் தேவைப்படுவதால் நானாக வெளியேறியுள்ளேன் என கூறியுள்ளார்.



## மைனா நந்தினியும் பெண்தான்!

மைனா நந்தினியை அவ்வளவு எளிதாக மறக்க முடியாது. கணவரின் தற்கொலைக்கு பின்னர் எதிர்மறையான விமர்சனங்கள் அவரை துரத்தின. ஆனால் அதையெல்லாம் கடந்து இன்று சின்னத்திரையில் பிசியாக இருக்கிறார். காமெடி கில்லாடிஸ் நிகழ்ச்சியில் நடுவராக இருக்கிறார். கணவர் இறந்த சில வாரங்களில் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆட்டம்போட்டார் என்ற விமர்சனம் கிளம்பியது. அதற்கு பதிலளித்திருக்கிறார். "கணவர் இறந்ததும் எல்லோரும் கடுமையாக விமர்சித்தனர். நானும் பெண்தான். எனக்கும் எல்லா உணர்ச்சிகளும் இருக்கு. எனக்கு குடும்பமும் முக்கியம். அப்பா, அம்மா, தம்பி மூவரும் குழந்தைகள் மாதிரி. அவர்களிற்காக நான் அந்த நிகழ்ச்சியில் இருந்துதான் ஆகணும். சிரிக்கிறது, டான்ஸ் ஆடுவது, பாடுவது எனது வேலை. அதை செய்துதான் ஆகணும். விமர்சிப்பவர்களால் இதை புரிந்துகொள்ள முடியாது" என்றுள்ளார்.



## அஜித் போல ஜோடி!

விஜய் தொலைக்காட்சியில் கல்யாணமாம் கல்யாணம் சீரியலில் கமலியாக நடிப்பில் கலக்குபவர் ஸ்ரீத்து கிருஸ்ணன். பதினெட்டு வயது கல்லூரி மாணவியான இவர், முதிர்ச்சியான பாத்திரத்தில் நடிக்கிறார். இவர் நடித்த இரண்டு சீரியலிலுமே முதிர்ச்சியான பாத்திரங்கள்தான். கல்யாணமாம் கல்யாணம் சீரியலில் இவரது ஜோடி தேஜஸ், பார்ப்பதற்கு அஜித்தை போலிருப்பார். அஜித் ஸ்டைல்களையும் பின்பற்றுகிறாராம். 10 எண்றதுக்குள்ள, ரங்கூன் போன்ற படங்களில் நடித்திருக்கிறார். சூர்யாவின் பரமரசிகையான இவர், அவருடன் ஒரு செல்பி எடுக்க காத்திருக்கிறார்.



சூட்டிங் ஸ்பொட்



கடை குட்டி சிங்கம்





கன்னி ராசி

# வண்ணத் திரை



## அனுஷ்காவிற்கு இனி அது சரிவராது!

பாகுபலி படத்தின் இரண்டு பாகங்களிற்குப் பிறகு அனுஷ்காவின் இமேஜ் மாறிவிட்டது. சமீபத்தில் வந்த பாகமதி தெலுங்கு படமும் நல்ல வசூலை பெற்றுத்தந்தது. முன்னணி ஹீரோக்கள் நடித்த படங்களே ஊற்றிக்கொள்ள, பாகுமதி வசூல் வேட்டையாடியது குறிப்பிடத்தக்கது. பாகமதி படத்திற்கு பின்னர் அனுஷ்கா புதிய படமெதிலும் ஒப்பந்தமாகவில்லை. பாகுபலி, பாகமதி படங்களில் நல்ல பெயரை எடுத்த பின்னர், வழக்கமாக ஹீரோவிற்கு பின்னால் டூயட் பாடிக்கொண்டு திரியும் வேடங்களை அனுஷ்கா விரும்பவில்லையென்கிறார்கள். இனமேல் கிளாமர் ஹீரோயினாக நடிப்பதும் பொருத்தமில்லையென அனுஷ்காவும் நினைக்கிறார். கதைக்கு முக்கியத்துவம் உள்ள படங்களை மட்டுமே இனி தேர்வுசெய்யவுள்ளாராம். கௌதம் மேனனில் படமொன்றில் நடிக்க பல வருடங்களின் முன்னரே சம்மதித்துள்ளார். ஆனால் இருக்கும் படங்களையே முடிக்க முடியாமல் அவர் சிரமப்படுகிறார். இனி எப்பொழுது புதிய படத்தை தொடங்குவார் என்பது தெரியவில்லை. எப்படி பார்த்தாலும் இனி அனுஷ்காவை அடிக்கடி திரையில் காண முடியாது.

## பியாவின் ஜீ உதட்டு முத்தம்

கோ, கோவா, சட்டம் ஒரு இருட்டறை உள்ளிட்ட பல படங்களில் நடித்திருப்பவர் பியா. சினிமாவிற்கு வந்த புதிதில் எல்லா நடிகைகளையும் போல, நீச்சலுடையில் நடிக்க மாட்டேன், முத்தக்காட்சியில் நடிக்க மாட்டேன் என நிபந்தனை விதித்துக்கொண்டிருந்தார். இதனால் சக ஹீரோயின்களுடன் போட்டிபோட முடியாமல் திணறினார். இரண்டு, மூன்று நாயகிகளில் ஒருவராகத்தான் நடிக்கவைக்கப்பட்டார். கடந்த இரண்டு வருடமாக தமிழில் ஒரு படத்தில்கூட வாய்ப்பு வரவில்லை. இதனால் அப்செட்டில் இருந்த பியா, இப்பொழுது விளம்பர பக்கம் கவனத்தை திருப்பியிருக்கிறார். சினிமாவில் விட்ட பிழையை இங்கும் விடக்கூடாதென்பதில் கவனமாக இருக்கிறார். கவர்ச்சியின் உச்சம்வரை செல்ல தயாராக இருக்கிறார். ரூ பீஸ் நீச்சலுடையில் காதலனுடன் சரசம் செய்துகொண்டிருப்பதை போல நடித்தார், ரொப் லெஸ் படத்தை இணைத்தில் வெளியிட்டார். இதையெல்லாம் பார்த்த பின்னர் சினிமா உலகம் அவரை மீண்டும் வரவேற்க ஆரம்பித்துள்ளது. இந்திப்படம் ஒன்று, மலையாள படங்கள் இரண்டு இப்பொழுது அவரது கைவசம் உள்ளது. தமிழ், மலையாளத்தில் தயாராகும் படத்திலுத் ஒப்பந்தமாகியுள்ளார். தனுஷின் மாரி 2 படத்தின் வில்லன் டொவினோ தாமஸ்தான் இந்த படத்தில் ஹீரோ. இதன் ரெயிலர் அண்மையில் வெளியானது. நாயகனிற்கு சூடான உதட்டு முத்தத்தை பியா வழங்கும் காட்சிகள் அதிலுண்டு.

## ரித்திகாவிற்கு பதிலாக நிகிஷா

2010இல் பவன் கல்யாண் ஜோடியாக தெலுங்கில் புலி படத்தில் அறிமுகமாகியவர் நிகிஷா பட்டேல். பின்னர் தமிழில் ஜெ.ஜெ. டிவி பாஸ்கரனுக்கு ஜோடியாக தலைவன் படத்தில் அறிமுகமானார். சினிமாவில் அறிமுகமாகியும் எந்த மொழியிலும் நிலையான இடத்தை பிடிக்க முடியாமல் திண்டாடி வருகிறார். அதை தொடர்ந்து என்னமோ ஏதோ, கரையோரம், நாரதன் உள்ளிட்ட சில படங்களில் நடித்துள்ளார். இந்தநிலையில் தெலுங்கில் மீண்டும் கவனம் செலுத்த ஆரம்பித்துள்ளார். அறிமுக இயக்குனர் ஒருவரின் படத்தில் இப்பொழுது நடித்து வருகிறார். இந்த படத்தில் முதலில் நடிப்பதற்கு இறுதிச்சுற்று ரித்திகா சிங் உடன் பேசியுள்ளனர். அதன்பின்னரே நிகிஷா பட்டேலை நடிக்க வைத்துள்ளனர். இது அதிரடி அக்ஷன் பாத்திரமாம்.

## அஜித்தின் வீரம் பார்ட் 2

அஜித்தின் புதிய படம் விசுவாசம். சிறுத்தை சிவா வரிசையாக நான்காவது அஜித் படத்தை இயக்குகிறார். நயன்தாரா நாயகி. வடசென்னையை மையமாக வைத்து இந்த படம் உருவாகுவதாகவும், வடசென்னை தமிழ் பேசி அஜித் நடிப்பதாகவும் முதலில் செய்தி வந்தது. ஆனால் இப்பொழுது, வீரம் படத்தை போல கிராமத்து கதையில் தயாராவதாக சொல்லப்படுகிறது. வீரம் பார்ட் 2 போலவே விசுவாசம் தயாராகிறது என்கிறார்கள். படம் முழுக்க அஜித்திற்கு வெள்ளை வேட்டி, சட்டைதானாம்.

## நடிகையின் உள்ளாடையும் மிஞ்சவில்லை

சரவணா, வீராசாமி, ஜாம்பவான் உள்ளிட்ட பல படங்களல் நடித்திருக்கிறார் பவர் மேக்னா நாயுடு. தெலுங்கு, இந்தி, கன்னடம், மலையாள படங்களிலும் நடித்திருக்கிறார். இவருக்கு கோவாவில் சொந்தவீடு உள்ளது. அண்மையில் தனக்கு தெரிந்தவர்கள் மூலம் அந்த வீட்டை வாடகைக்கு விட்டுள்ளார். தம்பதி என சொல்லிக்கொண்டு வந்த ஜோடியொன்று வாடகைக்கு குடிபுகுந்தார்கள். ஒருநாள் இரவு மட்டுமே அங்கு தங்கினார்கள். மறுநாள் காலையில் வீட்டிலிருந்த சகல பொருட்களையும் வழித்து துடைத்துக் கொண்டு எஸ்கேப் ஆகிவிட்டனர். அம்மணியின் உள்ளாடைகளை கூட அந்த திருட்டு ஜோடி விட்டு வைக்கவில்லையாம்.

## தமிழ் பேசும் ஆபாச நடிகை


கனடாவில் ஆபாச நடிகையாக இருந்த சன்னி லியோன், இந்திப்படங்களில் கவர்ச்சி வேடங்களில் நடிக்கத் தொடங்கினார். தமிழ், தெலுங்கிலும் வாய்ப்புக்கள் வர கவர்ச்சிக்கடை விரித்தார். வடகறி படத்தில் ஐயிட்டம் டான்ஸ் ஆடினார். தற்போது வீரமாதேவி படத்தில் ஹீரோயினாக நடிக்கிறார். இதில் ராணியாக நடிக்கிறார். தற்போது குதிரையேற்றம், கத்திச்சண்டை பயின்று வருகிறார். இந்தியில் நடித்தபோதும், இந்தியில் பேச அவர் முயலவில்லை. இயக்குனர் ஆங்கிலத்தில் சொல்லிக்கொடுப்பதைபோல நடித்தார். ஆனால் வீரமாதேவி படத்தில் நடிக்கும்போது சன்னி தமிழ் கற்க முயற்சிக்கிறார். தமிழிலேயே பேசி, நடிக்க முயற்சித்துக் கொண்டிருக்கிறார். இயக்குனர் படத்தை இயக்குவதுடன், சன்னிக்கு தமிழும் கற்றுக்கொடுத்து வருகிறாராம்!

## கௌதமிக்கு பாக்கி வைத்த கமல்!

கமல்ஹாசனுடன் இணைந்து வாழ்ந்துவந்த கௌதமி, சில ஆண்டுகளிற்கு முன்னர் பிரிந்து சென்றார். அதன்பின் கமலுடன் எந்த தொடர்புமில்லாமல் இருந்து வந்தார். சமீபத்தில் சிலர், கமலுடன் அவரை இணைத்து சமூகவலைத்தளங்களில் வதந்தி பரப்பினார்கள். இதையடுத்து கௌதமி அவர்களிற்கு பதிலளித்துள்ளார். "கமல் அரசியலை நான் ஆதரிக்கவும் இல்லை. என்னை, கமலுடன் ஒப்பிட்டு பேசுவது வருத்தமளிக்கிறது. தசாவதாரம், விஸ்வரூபம் ஆகிய படங்களில் ஆடைவடிவமைப்பாளராக பணியாற்றிய எனக்கு கமல் சம்பள பாக்கியும் தரவில்லை" என்று கூறியுள்ளார். தனது படத்தில் பணிபுரிந்த ஒருவருக்கு சம்பளமே தராத ஒருவர், எப்படி தமிழக மக்களின் தேவைகளை தீர்ப்பார்"என நெட்டிசன்கள் கலாய்த்து வருகிறார்கள்.

## பக்கத்து வீட்டு பெண்!

மலையாள நடிகை அனுபமா பரமேஸ்வரன் தற்போது தெலுங்கில் பிசியான நடிகையாக இருக்கிறார். ஆரம்பத்தில் கிளாமர் காட்ட மறுத்தவர், தெலுங்கில் நிலைப்பதெனில் கவர்ச்சி அவசியமென்பதை புரிந்து, மெதுவாக கவர்ச்சிக்கு தாவி வருகிறார். இதையடுத்து, அனுபமா அட்ஜஸ்ட் செய்வார் என நம்பிய இயக்குனர் ஒருவர், பிகினி அணிந்து நடிக்கும்படி கேட்டிருக்கிறார். "எப்பொழுதும் ரசிகர்களை ரசிக்க வைக்க வேண்டும். முக்கியமாக, பக்கத்து வீட்டு பெண் என்பதை போன்ற இமேஜ் அவசியம் வேண்டும். அதனால் எந்த சந்தர்ப்பத்திலும் கிளாமரில் லிமிட் தாண்டமாட்டேன்" என கூறியுள்ளார்.



எம்.ஜி.ஆர் **100** நெடுந்தொடர் 96

# ரசிகர்களை அரசியலில் வளர்த்தவர்!

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்.** தனது ரசிகர்களில் ஏராளமானோரை அரசியலில் வளர்த்தவர். அவர்களை முக்கிய பதவிகளில் அமரவைத்து அழகுபார்த்தவர். அவரால் அரசியலில் உயர்ந்து தனது அதிரடியான நடவடிக்கைகளாலும், சர்ச்சைக்குரிய முடிவுகளாலும் தமிழகத்தைக் கலக்கியவர் சட்டப் பேரவை சபாநாயகராக இருந்த பி.எச். பாண்டியன்!

சிறுவயதில் இருந்தே பி.எச். பாண்டியன் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகர். 1959ம் ஆண்டு பாளையங்கோட்டையில் உயர்நிலைப் பள்ளி மாணவராக இருக்கும் போது அங்குள்ள நகராட்சி பயணியர் விடுதியில்தான் எம்.ஜி.ஆரை முதன் முதலாக சந்தித்தார். 1972ம் ஆண்டு அதிமுகவை எம்.ஜி.ஆர் தொடங்கிய போது, கட்சியில் சேர்ந்தார். அதிமுகவின் வழக்கறிஞர் பிரிவு அமைப்பாளராக பி.எச். பாண்டியனை எம்.ஜி.ஆர் நியமித்தார்.

பி.எச்.பாண்டியனும் அவருடன் சில வழக்கறிஞர்களும் ஒருநாள் எம்.ஜி.ஆரை பார்க்கச் சென்றனர். அவர்களிடம், தான் வைத்திருந்த சிறிய சோனி டிரான்ஸிஸ்டர் ரேடி யோவைக் காட்டி, "இதைப் பிரிக்கத் தெரியுமா?" என்று எம்.ஜி.ஆர் கேட்டார். மவுனமாக நின்றவர்கள் முன்பு, ரேடியோவை அக்குவேறு ஆணிவேறாக பிரித்து, பின்னர் மீண்டும் சரியாக பொருத்திக் காண்பித்தார். "எம்.ஜி.ஆருக்குத் தெரியாதது எதுவும் இல்லை" என்று வியக்கிறார் பி.எச்.பாண்டியன்!

காலையிலேயே எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்டத்துக்கு பி.எச்.பாண்டியன் சென்று அங்கேயே சிற்றுண்டியை முடித்து விடுவார். பின்னர், நீதிமன்றம் சென்று விட்டு மதியம் சென்னை மாம்பலம் அலுவலகத்திலோ, அல்லது படப்பிடிப்பிலோ, எம்.ஜி.ஆர் எங்கே இருக்கிறார் என்பதை அறிந்து அங்கு சென்று அவருடன் உணவருந்துவார். சில நேரங்களில் அவருக்காக எம்.ஜி.ஆர் காத்திருப்பார்!

1977ம் ஆண்டு. சட்டப்பேரவைத் தேர்தலில் சேரன்மாதேவி தொகுதியில் பி.எச்.பாண்டியனை அதிமுக வேட்பாளராக நிறுத்தி வெற்றிபெற வைத்தார் எம்.ஜி.ஆர்! 1980ம் ஆண்டு நடந்த தேர்தலில் அதே தொகுதியில் மீண்டும் வெற்றி பெற்ற அவரை சட்டப்பேரவை துணை சபாநாயகர் ஆக்கினார். பின்னர், சபாநாயகராகவும் பி.எச்.பாண்டியன் உயர்ந்தார்.

துணை சபாநாயகராக பி.எச். பாண்டியன் இருந்தபோது, பிரேசிலில் சாவ் பாவ்லோ நகரில் நடந்த உலக சட்ட மாநாட்டுக்கு அவரை முதல்வர் எம்.ஜி.ஆர் அனுப்பி வைத்தார். 15 நாட்கள் மாநாடு முடிந்து சென்னைக்கு விமானத்தில் அவர் திரும்பியபோது நள்ளிரவு 12 மணி. அந்த நேரத்தில் விமான நிலையத்தில் காத்திருந்து பி.எச்.பாண் டியனை கட்டியணைத்து எம்.ஜி.ஆர் வரவேற்றார். அவரது அன்பில் பாண்டியன் நெகிழ்ந்து போனார்.

1952ம் ஆண்டு முதல் 1985ம் ஆண்டு வரை சட்டப்பேரவை அலுவலகம் அரசின் பொதுத்துறையோடு இணைக்கப்பட்டிருந்தது. பி.எச்.பாண்டியன் சபாநாயகராக இருந்தபோதுதான், முதல்வர் எம்.ஜி.ஆரோடு ஆலோசித்து அரசியல் சட்டத்தின் 187வது பிரிவின்படி சுதந்திரமான அமைப்பாக தமிழ்நாடு சட்டமன்ற பேரவை செயலகத்தை ஏற்படுத்தினார்.

"நான் எம்.ஜி.ஆரின் தீவிர ரசிகன். அவரது புதிய படங்கள் வெளியாகும் போது முதல் நாள் முதல் காட்சியே பார்த்துவிடுவேன். டிக்கெட் வாங்க கூட்ட நெரிசலில் முண்டியடித்துச் சென்றுகூட அவரது படங்களைப் பார்த்த அனுபவம் உண்டு. அரசியலில் மட்டுமின்றி வழக்கறிஞர் தொழிலிலும் என்னை எம்.ஜி.ஆர் வளர்த்தார். இன்று நான் சாப்பிடும் சாப்பாடு அவரது சாப்பாடுதான்!" என்று பி.எச். பாண்டியன் நன்றியோடு கூறுகிறார்.

ஒருமுறை முதல்வர் எம்.ஜி.ஆரோடு அவரது வீட்டில் இருந்து அவரது காரிலேயே புறப்பட்டார் பாண்டியன். ஒரு ஆணும் ஒரு பெண்ணும் நிற்பதைப் பார்த்து காரை நிறுத்தச் சொல்லி அவர்களை எம்.ஜி.ஆர் விசாரித்தார். அதில் ஒருவர் நெல்லையைச் சேர்ந்த கமலா செந்தில்குமார். மற்றொருவர் சேலத்தைச் சேர்ந்த இளைஞர். இருவருமே பட்டதாரிகள். தங்களுக்கு வேலை வேண்டும் என்று கோரி எம்.ஜி.ஆரிடம் மனு அளித்தனர். மறுநாளே இரண்டு பேரின் வீடுகளுக்கும் அதிகாரிகள் சென்றனர். கமலா செந்தில் குமாரும் அந்த இளைஞரும் முறையே நெல்லை மற்றும் சேலம் மாவட்டங்களின் ஆவின் சேர்மன்களாக நியமிக்கப்பட்ட உத்தரவை அவர்களிடம் வழங்கினர். "இப்படி ஒவ்வொருவரையும் மகிழ்ச்சிப்படுத்திப் பார்ப்பதில் எம்.ஜி.ஆருக்கு மிகுந்த மகிழ்ச்சி" என்று பி.எச்.பாண்டியன் கூறுகிறார்.

எந்த சூழலிலும் எம்.ஜி.ஆர் பதற்றம் அடைய மாட்டார். எதையும் சாதாரணமாகவே எடுத்துக்கொள்வதோடு, இக்கட்டான சூழ்நிலையையும் கலகலப்பாக மாற்றிவிடுவார். 1978ம் ஆண்டு பார் கவுன்சில் பொன்விழா சென்னை ராஜா அண்ணாமலை மன்றத்தில் நடந்தது. பி.எச்.பாண்டியன் அப்போது எம்.எல்.ஏ.மட்டுமின்றி, பார் கவுன்சில் உறுப்பினராகவும் இருந்தார். விழாவில் சிறப்பு விருந்தினராக முதல்வர் எம்.ஜி.ஆர் கலந்து கொண்டு பேசினார்.

"தமிழகத்தின் மையமாக இருக்கும் திருச்சியை தலைநகராக மாற்றலாம்" என்று எம்.ஜி.ஆர் கருத்து தெரிவித்தார். அதற்கு வழக்கறிஞர்கள் கரவொலி எழுப்பினர். அவருக்குப் பின் பேசிய அகில இந்திய பார் கவுன்சில் தலைவராக இருந்த ராம் ஜெத்மலானி, "நெஞ்சுப் பகுதியில் இதயம் உள்ளது. தலைக்கு உள்ளே மூளை இருக்கிறது. அவற்றை இடம் மாற்றினால் என்ன ஆகும்?" என்றார். அதற்கும் பலத்த கரவொலி. தர்மசங்கடமான சூழ்நிலை. பதில் சொல்ல எம்.ஜி.ஆர் எழுந்தார். கூட்டத்தில் பரபரப்பு!

"வழக்கறிஞர்கள் நான் சொன்னதற்கும் கைதட்டினீர்கள். ராம் ஜெத்மலானி கூறியதற்கும் கைதட்டுகிறீர்கள். உங்கள் உண்மையான நிலைப்பாடுதான் என்ன?" என்று கூட்டத்தினரை எம்.ஜி.ஆர் கேட்டார். கூரையே இடிந்து விழுவது போல கரவொலியும் ஆரவாரமும் எழுந்தன. சிரித்துக் கொண்டே நகர்ந்துவிட்டார் எம்.ஜி.ஆர்!

"1973ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின் போது, எம்.ஜி.ஆர் மீது ஒரே நாளில் ஒன்பது மானநஷ்ட வழக்குகள் அரசு தரப்பில் செஷன்ஸ் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டன. "என்ன செய்யலாம்?" என்று எம்.ஜி.ஆர் என்னுடன் ஆலோசித்தார். உயர் நீதிமன்றத்தில் எம்.ஜி.ஆர் சார்பில் நான் மனு தாக்கல்செய்தேன். "அரசு தரப்பில்தொடரப்பட்ட முதல் வழக்கிலேயே மானம் நஷ்டம் என்றால் மீதி உள்ள 8 வழக்குகளில் இழப்பதற்கு மானம் இல்லை" என்று வாதாடி அப்போது நீதிபதியாக இருந்த வி.பாலசுப்பிரமணியம் மூலம் தடை ஆணை பெற்றேன். பின்னர், எம்.ஜி.ஆருக்கு எதிரான வழக்கு கடைசிவரை விசாரணைக்கு வர்வே இல்லை" என்கிறார் பி.எச்.பாண்டியன்!

தொடரும்...





டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

கடந்த டிசம்பர் 13ம் திகதி, ரோஹித் ஷர்மா இலங்கைக்கு எதிராக அடித்த டபுள் செஞ்சுரி ஞாபகம் இருக்கிறதா நண்பர்களே? அன்று டி.வியில் பார்த்த பலர், அவர் டபுள் செஞ்சுரியை நெருங்கும்போது அவர் மனைவி அடைந்த குதூகலத்தைப் பார்த்திருப்பீர்கள். ஆனந்தக் கண்ணீரோடு, கணவரின் ஒவ்வொரு பந்துக்கும் கண்களை மூடிக்கொண்டும், கண்களைப் பாதி திறந்தபடி கணவர் ஆட்டத்தைப் பார்த்தபடியும் ஒரு மனைவியாக அவர் அடைந்த ஆனந்தத்தை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதுதானே? காரணம், அன்று அவர்களுக்குத் திருமண நாள். ஒரு கணவர், தன் மனைவிக்கு இதைவிடச் சிறந்த பரிசைத் தர முடியுமா..? ரோஹித் ஷர்மா அடித்த டபுள் செஞ்சுரிக்கும் செக்ஸ் பற்றிய இந்தத் தொடருக்கும் என்ன சம்பந்தம் இருக்கப் போகிறது?

ரோஹித் ஷர்மா என்றில்லை... உலகில் இருக்கும் எல்லா ஆண்களுமே டபுள் செஞ்சுரியைவிட ஒரு சந்தோஷத்தைத் தங்கள் மனைவிக்குத் தர முடியுமென்றால் அதற்கு 'செக்ஸ்' என்று பெயரிடலாம். 'MATCH' என்ற வார்த்தையின் தமிழ் அர்த்தத்தை யோசித்துப் பாருங்கள். பொருந்திப் போதல். 'பொருந்திக் கரைந்து போதல்' என்று சொல்லலாம். கிரிக்கெட்டோ, கட்டிலோ பொருந்திக் கரைந்து போதல்தானே உடலுக்கும் மனதுக்கும் அழகு. அதுதானே காதலும் காமமுமாக இருக்க முடியும்? காமமும் விளையாட்டுதான். ஆனால், அதை விளையாட்டாக நினைக்கக் கூடாது..? சரி... விரிவாகச் சொல்கிறேன்.




'Sachin: A Billion Dreams' புத்தகம் படித்திருக்கிறீர்களா? அண்மையில்

# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!



அது படமாகவே ரிலீஸாகி இருந்தது. சச்சின் டெண்டுல்கரின் வாழ்க்கையை டாக்கு டிராமா ஸ்டைலில் விவரித்த அந்தப் படத்தில் சச்சின் மெள்ள மெள்ள பேட்டிங்மீது ஆர்வமாகி...தெரு கிரிக்கெட்டில் விளையாடி அப்படியே பள்ளி அளவில், மாவட்ட அளவில், மாநில அளவில், மண்டல அளவில், சர்வதேச அளவில் உயர்ந்ததை அழகாகக் காட்டியிருப்பார்கள்.

செஞ்சுரி மேல் செஞ்சுரி குவித்திருந்தாலும் அவரது தினசரி வாடிக்கை என்ன என்று அழகாகப் படத்தில் காட்சிப்படுத்தியிருந்தார்கள். 'நெட் பிராக்டீஸ்'. ஒருநாள்கூட அதை அவர் தவறவிட்டதில்லை. ஒரேநாளில் அவருக்கு பேட்டிங் திறமை வந்துவிடவில்லை. ஒவ்வொரு நாளும் அவர் ஒவ்வொரு செங்கல்லாகக் கட்டி எழுப்பிய கோட்டைதான் அவரது கிரிக்கெட் சகாப்தம், சாதனைகள் எல்லாமே..! அதற்குப் பின்னால் இருந்ததெல்லாம் தினமும் அவர் கற்றுக்கொண்ட நெட் பிராக்டீஸ். பயிற்சி, பயிற்சி மட்டுமே! செக்ஸ் என்பதும்கூட அப்படித்தான். ஒரே நாளில் இங்கும் டபுள் செஞ்சுரி அடிக்க முடியாது. திருமணமாகும் வரை அடிப்படை செக்ஸ் அறிவைக் கூட வளர்த்துக்கொள்ளாமல் களம் புகுகிறார்கள். தவறான கற்பிதங்களாலும், வழிகாட்டுதல்களாலும், பயத்தாலும் எல்லாவற்றுக்கும் மேலாகப் போலி வைத்தியர்களால் இன்னும் குழப்பத்தோடு களம் புகுகிறார்கள். விளைவு...? திருமண பந்தத்தில் இணையும் இளையோர், முதல் பாலிலேயே அவுட் ஆகிவிடுகிறார்கள். முதலிரவிலேயே கசப்பான அனுபவங்களைச் சுமந்து திருமண பந்தத்தையே முறித்துக்கொள்ளும் சூழலுக்குத் தள்ளப்படுகிறார்கள்.


காம உணர்வை இயல்பான ஒன்றாக, வாழ்க்கையின் நான்காவது அத்தியாவசியத் தேவையாக உணவு, உடை, உறைவிடத்துக்கு அடுத்த இடத்தில் செக்ஸுக்கும் முக்கியப் பங்கைக் கொடுத்திருந்தார்கள். முனிவர்கள், ரிஷிகளேகூட காமத்தைக் கடந்து வந்தவர்கள்தான். சாமானியர்கள் காமத்தைக் கொண்டாடி வாழ்க்கையைக் கடந்து வந்திருக்கிறார்கள். செக்ஸை ஒதுக்கிவைக்கவோ, ரகசியப் பொருளாகப் பதுக்கிவைக்கவோ நம் முன்னோர் நினைத்ததில்லை. ஓர் ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையே அரும்பும் அன்பு, காதலாக மலர்ந்த பிறகு அவர்கள் இணைந்து நடத்தும் திருமண வாழ்க்கை இந்த உறவில்தான் முழுமை பெறுகிறது என்பது அவர்களுக்கு நன்கு புரிந்திருந்தது. இல்லறம் என்பதே ஒளிவு மறைவில்லாததிலிருந்து தொடங்குவதாக நம்பினார்கள். அன்பிலிருந்துதான் எல்லாமே தொடங்குவதாக நம்பினார்கள். அன்பு செலுத்துவது, உண்மையாக இருப்பது, மரியாதை தருவது என எதுவுமே ஒருவழிப்பாதை இல்லை. செக்ஸிலும் இப்படித்தான். 'அது இருவரின் தேவைகளையுமே முழுமையாகப் பூர்த்தி செய்யும்படி அமைய வேண்டும்' என்றனர் நம் முன்னோர்கள்.

'தாம்பத்ய உறவில் கொடுப்பவர், எடுப்பவர் என்ற வித்தியாசம் இல்லை!' நம் முன்னோர்கள் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சொன்ன இந்தச் சின்னப் புரிந்துகொள்தலை நாற்பது வருடங்களுக்கு முன்பு நமக்கு மேற்கத்திய நாகரிகம் ஆராய்ச்சிகள் மூலம் கற்றுக்கொடுத்திருக்கிறது. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் நமது இந்த மரபு வேரைப் பிடுங்கிவிட்டு, 'செக்ஸ் உணர்வு' என்பதையே ஒரு மிகப் பெரிய கவர்ச்சி அம்சம்போல ஆக்கி, செக்ஸைத் தனிமைப்படுத்திவிட்டார்கள். செக்ஸ் என்பது நம் ரத்தத்தில் ஊறிய ஒன்று என்பதைக் காலப்போக்கில் மறந்துபோய் யாரோபோல கள்ளத்தனமாக அனுபவிக்கும் ஒன்றாக ஆக்கிக் கொண்டோம். ஆண்பெண் என்ற பாலினத்தை 'செக்ஸ்' என்றுதான் அழைக்கிறோம்.

இந்த விஷயத்தில் உலகிற்கே முன்னோடிகள் நாம்தான். அவர்கள் காட்டிய வழியில் செக்ஸை அணுக என்னால் இயன்ற சில விஷயங்களை இதன் மூலம் பகிர ஆசைப்படுகிறேன். செக்ஸில் ஏற்படும் சந்தேகங்கள், சிக்கல்களுக்கு அறிவியல் ரீதியான விளக்கம் சொல்லப் போகிறேன். பல சந்தேகங்கள் இருக்கின்றன நம்மவர்களுக்கு... உதாரணமாக, நடுத்தர வயது ஆண் ஒருவர் என்னிடம் ஒரு பிரச்னையோடு வந்தார். தனக்கு செக்ஸ் ஆசை இருப்பதாகவும் ஆனால், தன் பிள்ளைகள் வீட்டில் இருப்பதாகவும் மாதத்தில் ஒருமுறை மனைவியைச் சந்திப்பதே அரிது என்றும் சொன்னார். சேர்ந்து ஒன்றாகத் தூங்கவே வாய்க்காதபோது, அவருக்குள் எழும் செக்ஸ் ஆசைகளை யாரிடம் சொல்வார்? என்னிடம் தீர்வுக்காக வந்தார். குற்ற உணர்வும் அவரிடம் தலைதூக்கி இருந்தது.

செக்ஸைக் கொண்டாடிய தேசத்தில் ஒரு மனிதனின் இயல்பான பாலுணர்

தொடர்ச்சி 18-ம் பக்கம்...





9-ம் பக்க தொடர்ச்சி...

வாகரைக்கும் நடந்தது. இன்றும், பலருக்கு வாகரையில் பெரிய மனித அவலம் நடந்ததே தெரியாது.

வாகரையிலிருந்து பானு தலைமையில் புலிகளின் படையணிகள் பின்வாங்கியபோது, புலிகளின் மூத்த தளபதிகள் சிலர் கொஞ்சம் இளக்காரமாகவே பானுவை பார்த்தனர். வாகரை தோல்விக்கு பானுவின் திறமையின்மை ஒன்றுதான் காரணமென நம்பினார்கள். காரணம், யுத்தத்தின் தீவிரத்தை புலிகளின் தளபதிகள் அப்பொழுது சரியான இனம்காணவில்லை. வழக்கமான இராணுவத்தின் முன்னகர்வுகளை போலத்தான் நினைத்தார்கள். வடக்கு முனையில் இராணுவத்தின் மீது சில வலிந்த தாக்குதல்களை நடத்தும்வரை, "நான்கு செல் அடித்தால் இராணுவம் ஓடிவிடும்" என்றுதான் பல தளபதிகள் நினைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் அதையே, வன்னியில் அவர்கள் எதிர்கொண்டபோதுதான், இறுதி யுத்தத்தில் இராணுவத்தின் மூர்க்கத்தனமாக போராற்றலை உணர்ந்தார்கள்.

கிழக்கில் பானு இருந்ததால்தான் தோல்வியென கூறப்படுவது மிக தவறானது. அங்கு யார் தளபதியாக இருந்திருந்தாலும், இதுதான் நிலைமையாக இருந்திருக்கும்.

பானு தொடர்பான இந்த கதைகளின் உச்சபட்சமாக ஒரு கதையிருக்கிறது. அதாவது ஆனந்தபுரத்தில் காட்டிக்கொடுத்தது நீதானேயென, பானுவை பிடித்து பங்கரில் அடைத்தாரம் பிரபாகரன். ஆனால் சில நாளிலேயே உண்மை தெரிந்து, பானுவை மன்னித்து, பதுங்குகுழியில் இருந்து பிரபாகரன் விடுவித்தாரம்.

உண்மையில் இப்படியான சம்பவமொன்றே நடக்கவில்லையென்பதே உண்மை. இப்படியொரு கதையை கிளப்பியவருக்கு, அதிகபட்ச நகைச்சுவையுணர்வு இருக்க வேண்டும். எப்படியெல்லாம் சிந்திக்கிறார்கள்!

ஆனந்தபுரத்தில் இருந்து தப்பித்து வெளியேறிய எந்த தளபதி, போராளியையும் புலிகள் சந்தேகிக்கவில்லை. BOX இற்குள் என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்வதற்காக, அவர்களை தளபதிகள் நேர்முகம் கண்டார்கள். அதை எல்லா சண்டைகளிலும் புலிகள் செய்வார்கள். அதைதத்தான் ஆனந்தபுரத்திலும் செய்தார்கள்.

ஆனந்தபுரத்தில் இருந்து பானு தப்பி வந்தபின்னர், அவர் காட்டிக் கொடுத்தார் என்ற கோபத்தில் பிரபாகரன் அவரை சந்திக்கவில்லையென்ற இன்னொருகற்பனை கதையும் உள்ளது. பானுவை பின்னாட்களில் பிரபாகரன் சந்திக்கவில்லையா என்று கேட்டால், அதற்கு விடை ஆம் என்பதுதான்!

ஆனால், ஆனந்தபுரத்தில் அவர் சரியாக நடக்கவில்லையென்ற காரணத்தால்தான் சந்திக்கவில்லையா என்று கேட்டால், இல்லை என்பதே பதில்!

பொதுவாகவே பிரபாகரனின் இயல்பின்படி, அவர் கடமையில் மட்டுமே குறியாக இருப்பார். அவரது நோக்கத்திற்காக செயற்படுவார். அதற்கு குறுக்கே உணர்ச்சிகரமான செய்கைகளிற்கு இடமளிக்கமாட்டார். கடைசிக்கட்டத்தில் தளபதிகளை, போராளிகளை, குடும்பத்தை சந்திக்க வேண்டுமென்றெல்லாம் அவர் நினைக்கவில்லை. பிரபாகரனின் இயல்பை நன்றாக தெரிந்தவர்களிற்கு, அவர் எப்படி நடப்பார் என்பது தெரியும்.

யுத்தத்தின் இறுதி நாட்களில் அவர் எந்த தளபதியையும் சந்திக்கவில்லை. தளபதிகளிற்கான வேலை என்னவென்பதை அவர் ஏற்கனவே தெரியப்படுத்தி விட்டார். யுத்தம் புலிகளை நெருக்கிக்கொண்டு செல்ல, புலிகளிற்கும் புதிய வாய்ப்புக்கள் இல்லாமல் போய்க்கொண்டிருந்தது. வலிந்த தாக்குதல்களிற்கு இனி இடமில்லையென்றான பின், தற்காப்பு தாக்குதல்களை நடத்தி, இருக்குமிடத்தை பாதுகாத்தால் சரியென்பதே அவரது நிலைப்பாடு.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சாள்ஸ் அன்ரனியையும், பொட்டம்மானையும் மட்டுமே அவர் சந்தித்தார் என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். மிகச்சில சந்தர்ப்பத்தில் மட்டுமே வேறு தளபதிகளை சந்தித்தார். அது ஏன் என்பதை இறுதியுத்தத்தில் நடந்தது என்ன தொடரை படிப்பவர்கள் அறிந்து கொள்ளலாம்.

பானு காட்டிக்கொடுத்த விசயத்தில் உண்மையில் நடந்தது இதுதான். இறுதியுத்தம் தொடர்பான இன்னொரு உல்டா கதையுடன் அடுத்த வாரம் சந்திப்போம். (தொடரும்)

17-ம் பக்க தொடர்ச்சி...

வுக்குத் தீர்வு தராத சமூகம்மீது கோபமே வருகிறது. தங்கள் தகப்பனுக்கும் தாய்க்கும் செக்ஸ் உணர்வே தோன்றாது என, படித்த அந்தப் பிள்ளைகள் எப்படி நினைத்தார்கள்? எங்கே நம் கலாசாரத்தைத் தொலைத்தார்கள்? இயல்பான செக்ஸ் உணர்வைத் தவறான ஒன்றாக சித்தரித்தது யார்? அந்த மனிதர் கட்டுப்படுத்தும் இயல்பான ஆசைகள் விபரீத விளைவுகளை உண்டுபண்ணிவிடாதா? நாட்டில் பல குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு உள்ளாவதற்கான மூலகாரணமே இதுபோன்ற செக்ஸ் அடக்குமுறைதானே! நரைத்த வயதிலும் மனைவியோடு ஆரோக்கியமான செக்ஸை அனுபவித்து வாழ்ந்தவர்கள்தானே நம் முன்னோர். இந்த அடிப்பண்டைப் புரிந்துகொள்தல்கூட இல்லாத சமூகமாக நாம் எப்போது மாறினோம்?

சமீபத்தில் ஓர் இளைஞன் வந்திருந்தான். ஆரோக்கியமான உடல், அழகான தோற்றம். என்னைப் பார்த்த முதல் நிமிடத்திலேயே குழந்தையைப்போல உடைந்துபோய் அழ ஆரம்பித்துவிட்டான். முதலிரவில் அவனுக்குக் கசப்பான உணர்வு ஏற்பட்டிருக்கிறது. உடலுறவில் அவனால் ஈடுபடவே முடியவில்லை. அவன் ஆண் குறி செயல்படவே இல்லை. அவனால் செக்ஸ் உறவுக்குத் தயாராக முடியவில்லை. அவன் பாலியலைக் கற்றுக்கொண்டதெல்லாம் நீலப்படங்களை மட்டும் பார்த்துத்தான். அதில் காட்டப்படுபவைதான் நிஜத்திலும் என நம்பி ஏமாந்துபோய் விட்டான். அவன் மனைவி விளக்கொளியை எரியவே விடவில்லை. அவளது கூச்ச சுபாவத்தைப் போக்கும் முயற்சியை அவன் யோசிக்கவே இல்லை. காரணம், 'அதெல்லாம் அதுவாகவே நடக்கும்' என யாரோ சொல்லியிருக்கிறார்கள்.

தேவையில்லாத டென்ஷன், அசதி, அதீத ஆர்வம் எல்லாம் குழப்பியடிக்க எல்லாமே தோல்வியில் முடிந்திருக்கிறது. இவனுக்குப் பெண்ணுடல் பற்றிய அடிப்படைப் புரிந்துகொள்தல் இல்லை. பயந்துபோய் வலியில் அந்தப் பெண் கத்தி ஊரையே கூட்டிவிட்டாள். அது அவர்கள் இருவருக்குமே மனரீதியான பாதிப்புகளை உண்டு பண்ணியிருந்தது. அதற்கு என்ன மாதிரியான சிகிச்சை கொடுத்தேன் என்பதைப் பிறகு விரிவாகச் சொல்கிறேன். செக்ஸ் என்றால், நம்மவர்களுக்கு இருக்கும் புரிந்துகொள்தல் அவ்வளவுதான் என்பதற்காக இதை இங்கு சொல்கிறேன்.

இன்னொரு இளைஞன்... திருமணத்துக்கு முன்பு உறவு வைத்துக் கொண்டால்தான் மனைவியைச் சந்தோஷப்படுத்த முடியும் என்று யாரோ சொல்லியிருக்கிறார்கள். அவன் நேரடியாகக் களமிறங்கியதன் விளைவு என்ன தெரியுமா? பால்வினை நோய்! நோயைத் தானமாக வாங்கி அதிலிருந்து மீள மருத்துவர்களிடம் அலைந்துகொண்டிருக்கிறான் பாவம். மேலே சொன்ன இந்தச் சம்பவங்களுக்கு எல்லாம் மூல காரணமே நம் பாரம்பர்ய வேரை நாம் மறந்ததுதான். நம் இயல்பைத் தொலைத்ததுதான்.



மனித உடலும் மனமும் இணைந்து ஒரு புள்ளியில் நிகழும் அற்புதமான நிகழ்வுதான் செக்ஸ். அதில் எழும் பிரச்னைகளுக்குத் தகுந்த மருத்துவர்களைப் பரிந்துரை செய்வதுதான் இத்தொடரின் நோக்கம். அடிப்படையைப் புரிந்துகொள்ளாமல் தவறான ஆலோசனைகளைப்பெற்று மன உளைச்சலில் தவிப்பவர்களுக்கு இந்தத் தொடர் மூலம் தகுந்த ஆலோசனைகளைச் சொல்ல முடியும் என நம்புகிறேன்.

நான் மருந்து மாத்திரைகள் கொடுக்கப் போவதில்லை. ஆனால், நடுக்கடலில் சிக்கித் தத்ததளிக்கும் ஒரு கப்பலைப்போன்ற மனநிலையில் தவிப்பவர்களுக்குச் சரியான திசை காட்டும் கலங்கரை விளக்கம்போல இந்தத் தொடர் மூலம் வழிகாட்டிக் கரை சேர்க்க முடியும் என நம்புகிறேன். உங்கள் சந்தேகங்களைத் தாராளமாக, தயக்கமில்லாமல் டாக்டர் விகடனுக்கு அனுப்பிவையுங்கள். அதற்கான பதிலை நான் அடுத்தடுத்த பகுதியில் சொல்கிறேன்.

எல்லாவற்றுக்கும் மேலாக இந்தத் தொடரின் நோக்கத்தை ஒரே வரியில் சொல்வதென்றால் அது என்னவாக இருக்கும் தெரியுமா? அதைத்தான் சொல்லிக் கொடுக்கப் போகிறேன்.

ஆம். சொல்லித் தெரிவதுதான் மன்மதக் கலை!

(கற்றுத் தருகிறேன்...)




# சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முராட்ரெய்ஸ் மயானம்



சாள்ஸ் ஜே போர்மன்

ஸியன்னாவிலிருந்து விடுதிக்குத் திரும்பும்போது எங்கள் ரோடோஸ் சுற்றுலா முடிய இன்னும் ஓரிரு தினங்கள்தான் இருக்கின்றன என்று பேசிக்கொண்டு வந்தோம். ரோடோஸ்நகரை நெருங்கி வரும்போது மாலை நேரமாகிக் கொண்டிருந்தது. இருள் வருவதற்கு மேலும் ஓரிரு மணி நேரமிருந்தது. நகருக்குள் சுற்றிப் பார்த்த முதல்நாளில்நாங்கள் கண்ட இஸ்லாமிய மயானம் பற்றித் தேடிக் கொஞ்சம் அறிந்திருந்தேன். அதற்குள் நுழைந்து சுற்றிப் பார்த்துவிட்டு விடுதிக்குப் போகலாமா என்று சுதிரிடம் கேட்க அவனும் ஒத்துக்கொண்டான்.

சுவீடனில் இருக்கும் மயானங்கள் பெரும்பாலும் பூந்தோட்டங்கள் போன்று அழகானவை. நாங்கள் சில சமயங்களில் அவைகளுக்குள் நடந்து மகிழ்ந்திருக்கிறோம். ஒவ்வொரு மயானமும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. முன்னரைப் போல எல்லோருமே இறந்தவரைக் கல்லறைக்குள் வைத்து நினைவுச் சின்னங்களை அதன் மீது வைப்ப தில்லை.

கிறிஸ்தவ பாரம்பரியத்தில் உருவான நாடாக இருப்பினும் சுவீடனில் 80 விகிதத்துக்கு அதிகமானவர்கள் இறந்தவர்களின் உடலை எரிக்கிறார்கள். உலகில் சுவீடனிலும், ஜப்பானிலும்தான் இறந்தவர்களின் உடல்களைப் பெரும்பாலும் எரிக்கிறார்கள்.

. எரிக்கப்பட்ட பின் சிலர் அந்த அஸ்தியை மயானத்தில் ஒரு ஞாபகக்



கல்லறையில் வைக்கிறார்கள். இன்னொரு பகுதியினரோ அஸ்தியை குறிப்பிட்ட ஒரு பகுதியில் மண்ணுடன் கலந்து விடுகிறார்கள். அப்படியான பகுதியில் பூந்தோட்டம் உண்டாக்கப்பட்டு அங்கே இருப்பதற்காகச் சில வாங்குகள் வைக்கப் பட்டிருக்கும். இறந்தவரை ஞாபகப் படுத்திக் கொள்ள உறவினர் அந்தப் பூந்தோட்டப் பகுதியில் வந்து அமைதியாக உட்கார்ந்து விட்டுப் போவார்.

இடிபாடுகளாக ரோடோஸ் நகரிலிருக்கும் "முராட்ரெய்ஸ்" மயானத்தைப் ,பற்றி இந்தியாவில் பிறந்து வளர்ந்த அயர்லாந்துக்காரர் லோரன்ஸ் டுரல்லின் [Lawrence Durrell and the Greek world] ஒரு குறிப்பைக் காணக் கிடைக்கிறது. "இரண்டாம் உலகப்போருக்குப் பின்னதான எனது மகிழ்ச்சியான நாட்களை நான் ரோடோஸில் பவுத்திரமாகப் பொத்தி வைக்கப்பட்டிருந்த முராட்ரெய்ஸ் பூந்தோட்டத்தை ரசித்தபடி கழித்தேன். நான் அங்கேயிருந்த துருக்கிய மயானத்தின் அழகிலும் அமைதியிலும் லயித்தபடி இறப்புக்காக ஏங்கியபடி வாழ்ந்தேன் எனலாம்."

மயானம் என்றும் பூந்தோட்டம் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது எனக்குள் குழப்பத்தை உண்டாக்கியது. முக்கிய வீதியில் இடிந்து போயிருந்த வாசலொன்றின் வழியாகத்தான் அந்த மயானத்துக்குள் நுழைய முடிந்தது. அவ்விடத்தை நான் கவனிக்கக் காரணம் ஒரு கைவிடப்பட்ட பள்ளிவாசல்தான் என்பதை நான் இக் கட்டுரையின் ஆரம்பத்திலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.

பள்ளிவாசலின் கட்டிடப் பூச்செல்லாம் கொட்டிப் பாழடைந்ததுபோல இருப்பினும் அதன் தூபி முழுசாக இருந்தது. அதைச் சுற்றிவர நிறைய மரங்களும், பூமரங்களுமாக இருந்ததையும் கவனிக்க முடிந்தது. கைவிடப்பட்ட அந்தப் பள்ளிவாசலின் பெயர் முராட்ரெய்ஸ் பள்ளிவாசல்.

சிதிலமடைந்த வாசல் பகுதியைக் கடந்து உள்ளே நுழைந்ததும் ஒரு முதிய கிரேக்கமாது ஒரு கதிரையில் இருந்ததைக் காண முடிந்தது. சிரித்த முகத்துடன் எங்களைப் பார்த்தாள் அவள். அவள் இருந்த இடத்தில் மேலும் நாலைந்து பழைய கதிரைகள் போடப்பட்டிருந்தன. அவளுக்கு சுமார் 50 மீற்றர் பின்பகுதியில் சிதிலமடைந்த சிறு கட்டடமொன்று அரையும் குறையுமாகச் சரி செய்யப்பட்டிருந்தது.

ஒரு சிறிய வீடு போலிருந்த அக் கட்டட வராந்தாவில் முதியவர் ஒருவர் மூதாட்டி ஒருத்தியுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். இது ஏதாவது வயோதிபர் மடமா, யாரிவர்கள் என்ற கேள்வி எனக்குள் எழுந்தது. அந்தச் சிறிய வீட்டைப் போலவே அருகேயும் சில கட்டடப்பகுதிகள் நிமிர்த்தப்பட்டு வசிக்கக்கூடியதாகச் சீர்செய்யப்பட்டிருந்தன. அதைத் தாண்டி சுமார் நூறு மீற்றர்கள் தூரத்திலிருந்து பல கல்லறைகள் வெவ்வேறுவடிவத்தில் காணப்பட்டன. ஒரு மயானத்தினுள் ஏன் சிறுசிறு கட்டடங்கள் கட்டப்பட்டன, என்று புரியவில்லை.

அங்கே இருந்த மூதாட்டியிடம் "உள்ளே போய் சுற்றிப் பார்க்கலாமா?" என்று கேட்டேன். ஆமோதிப்பது போல தலையை அசைத்தார். அவரிடம் மேலும் எதையாவது கேட்டுத் தெரிந்து கொள்ள முடியாது. ஏனெனில் அவருக்கு ஆங்கிலம் தெரியாது என்பதைப் புரிந்து கொண்டேன்.

உள்ளே அந்த வளாகத்துக்குள் நடந்தோம். மயானத்தை தவிர அப்பிராந்தியத்துக்குள் சிறு தியான மண்டபங்களும்,திட்டமிட்டு உண்டாக்கப்பட்ட பூந்தோட்டமும் இருந்தது என்பதை புரிந்துகொள்ள முடிந்தது.

வெவ்வேறு தகைமையிலிருந்தவர்களுக்கான விதத்தில் வெவ்வேறு விதமான கல்லறைகளும் அதன்மீது அடையாளங்களும் உண்டாக்கப்பட்டிருந்தன. சில கல்லறைகளுக்கான தனியான மண்டபங்களும் இருந்தன. அவை அரச குடும்பத்தினரினதாக இருக்கலாம்.

1884-1886 காலகட்டத்தில் எடுக்கப் பட்ட ஒத்தமானிய சாம்ராஜ்ய மக்கள் கணக்கெடுப்பின்படி ரோடோஸில் 36, 606 குடிமக்கள் இருந்தார்கள். அவர்களில் 20,771 பேர் கிறிஸ்தவர்கள் 6,476 பேர் முஸ்லீம்கள் 2, 690 பேர் யூதர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. தற்போது சுமார் 3, 500 முஸ்லீம்கள் ரோடோஸில் வாழ்கிறார்கள்.

கல்லறையிலிருந்த சின்னங்களை, அடையாளங்களை படமெடுத்து அவைகளின் அர்த்தங்களை ஆராய்ந்ததில் பெண்கள், போர்வீரர்கள், உயர்மட்ட அதிகாரிகள் போன்ற ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு அடையாளங்களுடன் ஒத்தமானிய சாம்ராஜ்யத்தில் கல்லறைகள் அமைக்கப்பட்டன என்று தெரியவருகிறது.

முஸ்லீம், இந்து அரசர்கள் இந்தியா

தொடர்ச்சி 24-ம் பக்கம்...

8-ம் பக்க தொடர்ச்சி...


127 குழந்தைகளும், 75 பெண்களும் அடக்கம். இந்த வான்வழித் தாக்குதலில் 'க்ளோரின் வாயு' நிரப்பப்பட்ட குண்டுகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளதாக முதல் கட்டத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

சிக்கல்கள் நிறைந்தது சிரியா பிரச்னை. பல நூறாண்டுகளாகவே அவ்வப்போது பெரும் போர்களையும், பேரிழப்புகளையும் சந்தித்து வரும் ஒரு நிலப்பரப்பு. தற்போது பூதாகரமாக மாறியிருக்கும் சிரிய உள்நாட்டுப் போருக்கான தொடக்கம் 2011ல் ஆரம்பித்தது.

2010ல் துனிசியாவில் தொடங்கிய 'Arab Spring' புரட்சி லிபியா, எகிப்து, ஏமன், சிரியா மற்றும் பஹ்ரைன் நாடுகளுக்கும் பரவின.

2011ல் சிரியாவின் டெர்ரா (Derra) நகரில் சில இளைஞர்கள் ஒரு பள்ளியின் சுவரில் அதிபர் பஷார் அல் அசாத்துக்கு எதிராக சில புரட்சிகர வாசகங்களை எழுதுகிறார்கள். இவர்களுக்கு எதிராகத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. பல இளைஞர்கள் கொலை செய்யப்பட்டார்கள். பல இளைஞர்கள் சிறை பிடிக்கப்பட்டுத் துன்புறுத்தப்பட்டார்கள். இதனைத் தொடர்ந்து அசாத்துக்கு எதிரான போராட்டங்கள் பல இடங்களிலும் வெடிக்கத் தொடங்கின. அது பெரிய கலகமாக உருவெடுத்தது. அரசுக்கு எதிராகப் போராட்டக் குழுக்கள் கிளம்பின.

அவர்களுக்கு ஆதரவாக துருக்கியும், ஜோர்டானும், வளைகுடா நாடுகளும் சில அரசியல் காரணங்களுக்காகக் கை கோர்த்தன. அசாத்துக்கு ஆதரவாக ரஷ்யாவும், ஈரானும் களமிறங்கின. ஏற்கெனவே ஒரு பக்கம் "குர்து" (Kurds) போராளிகள் அரசுக்கு எதிராகக் களத்தில் இருந்தனர். ரஷ்யா தலையிட்டதும், அமெரிக்கா தன் பலத்தைக் காட்டத் தொடங்கியது. குர்துகளும், மற்ற போராட்டக் குழுக்களும், அரசுக்கு எதிராகப் போராட அவர்களுக்கு உதவியது அமெரிக்கா. இந்தப் பிரச்னைகள் போக, இவர்கள் அத்தனை பேரையும் எதிர்த்து அழிக்கத் தொடங்கியது ஐஎஸ்ஐஎஸ் (ISIS). பல சர்வதேச சிக்கல்கள் நிறைந்த இந்த அரசியல் களத்தில் அனுதினமும் அப்பாவி மக்கள் கொல்லப்படுகின்றனர்.



2013ம் ஆண்டே "சரின்" எனும் இரசாயனம் கொண்டு மக்கள்மீது தாக்குதல் நடத்தப்பட்டது. ஐநா இதற்குக் கடும் கண்டனம் தெரிவித்தது. பல உலக நாடுகளும் இதை வன்மையாகக் கண்டித்தன. அரசுத் தரப்பும், போராட்டக் குழுக்களும் ஒருவர்மீது ஒருவர் குற்றம் சுமத்திக் கொண்டார்கள். இதோ, ஐநா, சிரியாவில் 30 நாள்களுக்கான அமைதி உடன்படிக்கை (Ceasefire) போட்ட இரண்டாவது நாள் இந்தக் கொடூரமான தாக்குதல் நடந்தேறியுள்ளது. அதுவும், பழைய தாக்குதல்களில் வீடுகளை இழந்து முகாம்களில் தங்கியிருந்தவர்கள் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இந்தத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் புகைப்படங்கள் உலகம் முழுக்க இணைய வழியில் பயணித்து பெரும் உணர்ச்சி அலைகளைக் கிளப்பியுள்ளது. அய்லான் புகைப்படம் உலகம் முழுக்க ஏற்படுத்திய அதிர்வலைகளில் ஒரு பங்கைக்கூட இசைப்பிரியாவின் புகைப்படம் உலகத்தில் எழுப்பிவிடவில்லை என்பதற்குப் பின்னணியிலும் ஓர் அரசியல் உண்டுதான். இந்த அப்பாவிக் குழந்தைகளின் இறப்புகளைக் கண்டு வருந்தும் அதே நேரம், அதன் பின்னணி அரசியல்களையும் அறிய வேண்டியது மிகவும் அவசியம்தான்.

"நாம் எந்த ஆயுதத்தை ஏந்த வேண்டும் என்பதை நம் எதிரிதான் தீர்மானிக்கிறான்" என்றார் மாவோ.

அஹ்மத்தும், ஒமரும், அல் டிமாஸியும், பிராஸ் அப்துல்லாவும், இசைப்பிரியாவும் சிரிப்பைத் தவிர வேறு எந்த பேராயுதத்தையும் ஏந்திவிடவில்லைதான். ஆனால், அவர்களை அழிக்க அந்த எதிரிகள் ஏன் இந்த நச்சு குண்டுகளை ஏந்தினார்கள் என்பது விடை காண வேண்டிய கேள்வி. தொடு திரையில் தெரியும் புகைப்படங்களை ஒரு நொடி அனுதாபத்தோடு தொட்டு நகர்த்தி வேலைகளைத் தொடரும் வாழ்க்கைக்கு நடுவில் இந்தக் கேள்விகளை எப்படி ஆராயப் போகிறோம்? இதற்கான தீர்வுகளை எப்படித் தேடப் போகிறோம்? மனித மாண்புகளை எப்படிக் காக்கப் போகிறோம்? மனிதத்தை எப்போது உணரப் போகிறோம்?

1. ஃப்ரிட்ஸ் ஹேப்லர், தான் ஏதோ பெரிதாக சாதித்துவிட்ட மகிழ்ச்சியில் மே 1ம் திகதி வீடு திரும்பினார். தன் வெற்றியைத் தன் மனைவியோடு பகிர்ந்தார். அவர் மனைவி மிகக் கடுமையாக அவரை விமர்சித்தார். ஃப்ரிட்ஸ் செய்தது அரக்கத்தனம் என்றார். அது பேரழிவிற்கான விதை என்றார். கடுமையான வாக்குவாதம் இரண்டு பேருக்கும் ஏற்பட்டது. ஆறாயிரம் பேரைக் கொன்றுவிட்டு வந்த கணவன் தன் வெற்றி குறித்துப் பேசியதைத் தாளாமல், வாக்குவாதமும் முற்ற அந்த நொடியே தற்கொலை செய்து இறந்துவிட்டார். சில ஆண்டுகளில் ஃப்ரிட்ஸ் கண்டுபிடித்த ரசாயன குண்டைக் கொண்டே நாஜிக்கள் பல ஆயிரம் பேரைக் கொன்று குவித்தனர். அதில் ஃப்ரிட்ஸின் மொத்த சொந்தங்களும் செத்து மடிந்தன.

2. 1918ம் ஆண்டில் வேதியியலுக்கான நோபல் பரிசை வென்றார் ஃப்ரிட்ஸ் ஹேப்லர்.

2-ம் பக்க தொடர்ச்சி...

புதிதாக பிரச்னைகள் உருவாகிக் கொண்டே இருக்கும். ஒருவன் இறக்கும் வரை பிரச்னைகளும் இருக்கும்! அவற்றிலிருந்து விடுபட இரண்டு வழிகள் உண்டு.

பிரச்னைகளை லேசாக எடுத்துக் கொண்டு அவற்றை அலட்சியப்படுத்துவது முதல் வழி. அடுத்து... பிரச்னையைத்தலைதூக்கவிடாமல் அழித்துவிட வேண்டும். இதற்கு உறுதியான மனம் அவசியம். தர்மசாஸ்திரத்தை நடைமுறைப் படுத்தினால், மனம் உறுதி பெறும். இன்னொரு விஷயம்... கடமையை எப்படி நிறைவேற்றலாம் என்பது குறித்துக் கவலைப்படலாம். ஆனால், அதன் பலன் குறித்துக் கவலைப்படக் கூடாது. பலனை எதிர்பார்த்தால், பிரச்னைகளைச் சந்திக்கும் வலு இருக் காது; துயரத்தில் துவண்டு விடுவோம். எனவே, எது வந்தாலும் ஏற்றுக்கொள்!" என்று அறிவுரை கூறினார். இது உங்கள் அன்னைக்கும் பொருந்தும்!

**புராணக் கதைகளில் சொல்லப் படுவது போல் ஏழு பிறவிகள் என்பதெல் லாம் உண்மையா?**

'பல பிறவிகளைத் தாண்டி அறிவை எட்டியவன் என்னுடன் இணைகிறான்' என்கிறான் கண்ணன். அதேபோல், 'பல பிறவிகளைத் தாண்டி, தற்போது மனிதனாகப் பிறந்த நான்...' என்று சங்கல்பத்தின்போது சொல்வது உண்டு (கேனாபி புண்யகர்மவிசேஷண இதானீம்தனமானுஷ்யே).

பல பிறவிகளை ஏற்று, எந்தப் பிறவியில் அம்பாளின் வழிபாட்டில் அக்கறை செலுத்துகிறானோ, அதுவே அவனது கடைசிப் பிறவி' என்கிறார் பாஸ்கரராயர் (தத்சரமம் ஜன்ம...).



'பிறப்புஇறப்பு; இறப்புபிறப்பு எனும் சங்கிலித் தொடரில் சிக்கித் தவிக்கும் மனிதனைப் பார்த்து, அதிலிருந்து விடுபட கோவிந்தனை நாடுக' என்று பிரார்த்திக்கிறார் ஆதிசங்கரர்.

நமது செயல்பாடுகளால் நாம் சேமித்த பாவம் அல்லது புண்ணியம் இருக்கும் வரை, அதை அனுபவித்துத் தீர்க்க பிறவி எடுக்க நேரிடும். புண்ணியம் பாவம் முற்றிலும் அகன்று விட்டால், பிறவி முடிந்துவிடும்.

ஆக, நமது செயல்பாடுகளே பிறவியின் எண்ணிக்கையை வரையறுக்கின்றன. ஆன்மிக வாசனையின்றி, உலகவியலில் வாழ்க்கையை இணைத்துக் கொண்டவன், பெரும்பாலும் துயரத்தையே சந்திக்க நேரிடும். இன்பத்தைச் சந்திக்க நேர்ந்தாலும் அந்த இன்பம் மின்னல் போல் மறைந்துவிடும். ஒருவேளை, அந்த இன்பம் தொடர்ந்தாலும், துயரத்திலேயே முற்றுப்பெறும். இந்த உண்மையை அறிந்த அறிஞர்கள், பிறவித் தளையைக் களையுமாறு பரிந்துரைப்பார்கள்.

ஏழு தலைமுறை என்பது ஒரு வம்சத்தின் (குலத்தின்) எல்லைக்கோடு. இதையே 'ஏழு பிறவிகள்' என்று சொல்லும் வழக்கமும் உண்டு. பல பிறவிகள் எடுத்தாலும் ஒவ்வொரு பிறவியிலும் மனிதனாகவே பிறப்பான் என்று சொல்ல முடியாது. பாவபுண்ணியத்துக்கு ஏற்ப விலங்கினமாகவும், ஊர்வனவாகவும், ஏன் தேவனாகவும்கூட பிறப்பு அமையும்.


ஸஹஸ்ர கவசன், கர்ணனாகப் பிறந்தான் என்கிறது புராணம். அதே போல், சாபத்தின் காரணமாக மரமாகவும் பாம்பாகவும் பிறந்தவர்கள் பற்றிய தகவல்களும் புராணத்தில் உண்டு.

ஒருவன் ஒவ்வொரு பிறவியிலும் எப்படி இருப்பான் என்பதை அறிய இயலாது. பிறவியின் எண்ணிக்கையையும் வரையறுக்க இயலாது. நல்லவற்றைச் செய்து நல்லபடியாக வாழ்ந்தால் பிறவியில் இருந்து விடுபடலாம். கனவு காணும் வேளையில் அதை உண்மை என எண்ணும் மனம், விழித்தபிறகு அது பொய் என்பதை அறிந்துகொள்ளும்.

அதேபோல், உலகவியலைச் சுவைக்கும் வேளையில், அறியாமையில் இருப்பதால்... நீண்ட சுவையான வாழ்க்கையை உண்மை என்று எண்ணும். அறிவு வந்து அறியாமை விலகும்போது, நமது வாழ்க்கையே பொய் என்று தோன்றும். அப்போது பிறப்பு முடிந்து விடும்.

# மனமே நலமா?

## உங்கள் சந்தேகங்களை கேளுங்கள்





கு.நக்கீரன்
உளவள ஆலோசகர்

**எஸ்.கமலாம்பிகை, முகமாலை**

**கேள்வி:** எனக்கு ஒரு மகன் இருக்கின்றான். க.பொ.த உயர்தரம் படிக்கின்றான். அவனது நடவடிக்கைகளைப் பார்க்கும்போது அவனுக்கு பல பெண்களுடன் தொடர்பு இருப்பது போல் தெரிகின்றது. இதைப் பற்றிக் கேட்டால் சந்தேகப்படுகிறீர்களா? என்று எரிந்து விழுகின்றான். இவனது நண்பர்களும் இவனைப் போல்தான் என்று அறிந்தேன். இதனால் இவனது படிப்பு கெட்டு விடுமோ என்று பயப் படுகின்றேன். ஒரு அம்மாவாக நான் என்ன செய்வது?

**பதில்:** அன்புச் சகோதரி! இன்று பல பெற்றோரின் கவலையும் இதுதான். தங்களின் கட்டிளம் பருவப் பிள்ளைகளின் போக்குகள் தொடர்பாக பாரிய மனச்சுமையுடன் உள்ளனர்.


உங்கள் மகனுக்கு பல பெண்களுடன் தொடர்பு உள்ளது என்று கூறுகின்றீர்கள். அது தனியே பொதுவான (தொலைபேசி போன்ற) தகவல் தொடர்பு சாதனங்களின் மூலமாக மட்டும்தானா? அல்லது நேரடியாகவும் தொடர்பைப் பேணுகின்றாரா? என்பது பற்றி நீங்கள் கூறவில்லை. இருந்தாலும் பரவாயில்லை.

தனியே நவீன தகவல் தொடர்பு சாதனங்களின் மூலமாக மட்டுமே தொர்புகளைப் பேணி வருகின்றார் எனின் மாற்று ஏற்பாடுகள் மூலம் அவரின் நேரத்தை வேறு பிரயோசனமான பொழுதாக மாற்றுவதற்குரிய பிரதியீடுகளை ஏற்படுத்த முனையுங்கள். ஏனெனில் கட்டிளம் பருவம் என்பது பலமான ஒரு சக்தி. அந்த சக்தியை வீடெரிக்கவும் பயன்படுத்தலாம், விளக்கேற்றவும் பயன்படுத்தலாம். இப்படியான இளம் சந்ததியினரின் சக்தியைத்தான் இன்று பல சமூக விரோதக் கும்பல்கள் முறைகேடாகப் பயன்படுத்த முனைந்து கொண்டுள்ளனர்.

இல்லை, உங்கள் மகன் அடுத்த படியாக நேரடியாகப் பெண்களுடன் தொடர்புகளைப் பேணுகின்றார் என்றால் முதலில் அவரைப் பொருத்தமான உள ஆலோசனைக்கு உட்படுத்தி பாலியல் தொற்றுநோய்களுக்கான பரிசோதனையையும் மேற்கொண்டு அந்த விதமான தொடர்புகளில் இருந்து வெளிவருவதற்கான 'நடத்தை மாற்ற' ஆலோசனைக்கு உட்படுத்துங்கள். முக்கியமாக அவரின் நிகழ்கால நட்பு வட்டத்தை உடனடியாக மாற்றுங்கள். பொருத்தமான இடமாற்றத்தைக் கூட ஏற்படுத்தலாம். ஏனெனில் பிழையான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் ஒருவரை சரியான பாதைக்கு நகர்த்துவதற்கு வேறு முயற்சிகளும் தேவை.

சிலவேளைகளில் உங்கள் மகன் உண்மையிலேயே வாழ்க்கைத் தேர்ச்சியுள்ள, தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய திறன்களையும் கொண்டுள்ள ஒருவராகவும், அதே வேளை கட்டிளம் பருவத்துக்குரிய தனித்துவமான இயல்பான எதிர்ப்பால் கவர்ச்சியின் மகிழ்வான தருணங்களை அனுபவித்துக் கொண்டு தனது இலக்கு நோக்கிப் பயணிக்கக் கூடிய ஒரு இளைஞனாகவும் இருக்கலாம்.

எனவே எல்லாவற்றிற்கும் சிறந்த வழி உங்கள் மகனுக்கு 'வாழ்க்கைத் தேர்ச்சி' பற்றி அதிகூடியளவு புரிதலினை ஏற்படுத்துவதற்கான இயலுமான அனைத்து வழி வகைகளையும் உருவாக்கிக் கொடுப்பதே ஒரு சிறந்த தாயின் கடப்பாடு என்பதே எனது நிலைப்பாடு.



**கார்த்திக் (வயது 25), திருநெல்வேலி**

**கேள்வி:** என்னை விடவும் இரண்டு வயது அதிகமுள்ள பெண்ணைக் காதலிக்கின்றேன். அவளுக்கும் இதில் பூரண சம்மதம். ஆனால் நம் இருவரின் வீட்டாரும் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். நான் செய்வது சரியா, தவறா? நம் காதலை எம் வீட்டாருக்கு எப்படிப் புரிய வைப்பது என்று தெரியவில்லை. எனக்கு ஒரு வழி கூறுங்கள்?

**பதில்:** சகோதரா! காதலுக்குக் கண் இல்லை என்பார்கள். உண்மையில் காதலுக்குக் கண் உண்டு, அறிவு இல்லை என்பதே சரி. ஏனெனில் காதல் வருவதே கண்களின் ஊடாகத் தானே? காதல் என்பது எல்லோருக்கும் பொதுவாக உள்ள ஒரு உணர்வு. இந்தக் கண்றாவிக் காதல் யாருக்கு, எப்போது, எப்படி, எதனால் வரும் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. ஒரு பொதுவிதியாக ஆணுக்குப் பெண் மீது காதல் வரும் என்று கூறுகின்றோம். ஆணுக்கு ஆண் மீதும், பெண்ணுக்குப் பெண் மீதும் காதல் வருவது கூட இயற்கையே. இப்படிக் காதல் வரும்போது சாதி, மதம், கல்வியறிவு, பதவி, அந்தஸ்து, வயது என்று எதனையும் கருத்தில் கொண்டு வருவதில்லை. அதை முளையிலேயே கிள்ளிவிடுவதும் நீரூற்றி வளர்ப்பதும் மட்டும்தான் நமது செயல்.

உமக்கு ஏற்பட்டுள்ள வயது கூடிய பெண்ணின் மீதான காதல் நீரூற்றி வளர்க்கப்பட்டு விட்டது. இனி அதைப் பிடுங்கி எடுப்பது கொஞ்சம் கஷ்டமான காரியம் தான். இருந்தாலும் உமக்கும் உமது காதலிக்கும் வெறும் வயது மட்டும் தானே வித்தியாசம். எனக்குத் தெரிந்து ஏழு, எட்டு வயது வித்தியாசத்தில் கூட சிலர் காதலித்துத் திருமணம் செய்து பேரப் பிள்ளைகளைக் கூடக் கண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். என்ன நாற்பதைத் தொட்ட நாய் வயதுகளில் கொஞ்சம் அதிகமாகக் கடிபட்டுக் கொண்டார்கள். இன்று முதுமைக் காலத்தில் ஒருவருக்கொருவர் உதவியாய் மிகுந்த காதலுடனேயே வாழ்கின்றார்கள். உங்கள் காதல் உண்மைக் காதல் எனில் நீங்கள் செய்வதில் எந்தத் தவறும் இல்லை. பயப்படாமல் காதலைத் தொடருங்கள். உங்கள் காதலுக்கு எனது வாழ்த்துக்கள்.

**பாஸ்கரன் (வயது 25), நெல்லியடி**

**கேள்வி:** பள்ளி பருவத்தில், ஒருமுறை என்னை எழுப்பி கேள்வி கேட்டார் ஆசிரியர். அக்கேள்விக்கு பதில் தெரிந்திருந்தும், என்னால் பதில் கூற முடியவில்லை. காரணம், பயம். அன்று முதல், இன்று வரை, பயத்துடனே வாழ்ந்து வருகிறேன். கடந்த ஆண்டு, ஒரு நிறுவனத்தில் நேர்முக தேர்வுக்கு சென்றிருந்த போது, அவர்கள் கேட்ட கேள்விக்கு என்னால் பதில் கூற முடியவில்லை. வார்த்தைகள் வெளிவரவே இல்லை. இப்படி நிறைய சூழ்நிலையில் அவமானப்பட்டு இருக்கிறேன். இதனால், யாருடனும் என்னால் இயல்பாக பேச முடிவதில்லை. இப்பிரச்னையில் இருந்து வெளி வர வேண்டும். தயவு செய்து ஆலோசனை கூறுங்கள்.

**பதில்:** அன்பு மகனுக்கு, மூன்று வகையான மனபிறழ்வுகளை, மனோதத்துவம் வகைப்படுத்துகிறது. அதில் ஒன்று, வெறுப்பு (போபியா). எதன் மீதாவது ஏற்படும் பயம்!

தாழ்வுமனப்பான்மைதான் பயத்துக்கு அடிப்படை காரணம். கோழைத்தனமும், தான் பேசினால் அடுத்தவர் என்ன நினைப்பாரோ என்கிற சங்கூமும் உப காரணங்கள். நாக்கு தடித்திருந்தாலும், வாய் அடிக்கடி உலர்ந்து போனாலும், தொண்டையில் ஏதாவது பிரச்னை இருந்தாலும் பேச வராது. ஒரு சிலருக்கு கீச்சுக்குரலும், சிலருக்கு கட்டை குரலும் இருக்கும். தன் குரல் நன்றாக இல்லையே என்கிற எண்ணத்தினாலும் இவர்கள் பேசுவதில்லை. வாயில் துர்நாற்றம் வீசினாலும் பேச பயமாயிருக்கும்.

பயம் ஒரு புதைசேறு. மெதுமெதுவாக நம்மை உள்ளிழுத்து விழுங்கி விடும். பயத்தை போக்க எளிய வழிகளை கூறுகிறேன்.

- தனிமையில், தினம் ஒரு மணி நேரம், ஏதாவது ஒரு புத்தகத்தை உரக்கப் படியுங்கள்.
- ஆணோ, பெண்ணோ யாரை பார்த்தாலும், நட்புடன் புன்முறுவல் செய்யுங்கள். துணிந்து ஹலோ சொல்லுங்கள்.
- தன்னம்பிக்கையூட்டும் பிரபலங்களின் வாழ்க்கை வரலாறுகளை படியுங்கள்.
- தினமும் வாயினை சுத்தமாக பராமரியுங்கள்.
- வண்ணமயமான ஆடைகளை அணிந்து, தலைகேசத்தை பராமரியுங்கள்.
- கர்நாடக, வெஸ்டர்ன் என எல்லா வகை பாடல்களையும் கேளுங்கள். இசை பயத்தை விரட்டியடிக்கும்.
- 'வாழ்க்கை வாழ்வதற்கே. வாழும் ஒவ்வொரு நாளும் சிறப்பானது. என் மகிழ்ச்சியை கெடுக்க எந்த தீயசக்தியாலும் முடியாது' என்ற Positive மனப்பான்மைக்கு தாவுங்கள்.
- யோகா பயிற்சி மேற்கொள்ளுங்கள்.
- வாய் உலராமல் இருக்க, கிராம்பை மெல்லலாம்.

வெற்றி நிச்சயம் மகனே!



# “எமது விசயத்தில் தலையிட்டால் போர் வெடிக்கும்”

## அரசுக்கு புலிகள் அனுப்பிய கடுமையான செய்தி

பீஷ்மர்

**2004 மார்ச் 25ம் திகதி.**

இந்த நாள் மிக முக்கியமான நாள். கருணா பிரிவை எப்படி கையாள்வதென சிந்தித்துக்கொண்டிருந்த புலிகள், சமரச முயற்சிகளிலும் ஈடுபட்டார்கள் என்பதை கடந்த வாரங்களில் குறிப்பிட்டிருந்தேன். சமரச முயற்சிகளின் மூலம் பிளவை சரிசெய்ய முடியாதென்பதை தெரிந்த பின்னர், மார்ச் 25ம் திகதி அதிரடியான ஒரு அறிவிப்பை வெளியிட்டனர்.

“எங்கள் தேசத்தையும், அதன் மக்களையும் பாதுகாப்பதற்காக கருணாவை எங்கள் மண்ணைவிட்டு அகற்ற முடிவுசெய்யப்பட்டுள்ளது” என்பதே புலிகளின் அறிவிப்பு. அதாவது கடுமையான போரொன்று ஆரம்பிக்கப் போகிறது என்பதற்கான கட்டியமாக அது அமைந்தது.

அத்துடன் தமது பாணியில் இன்னொரு எச்சரிக்கையையும் இதில் இணைத்திருந்தனர். “கருணாவிற்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்க்கும் எவரும் எங்கள் பாதைக்கு எதிரான துரோகிகளாக கருதப்படுவார்கள்” இதுதான் அந்த அறிவித்தல்.


கருணா - அலிசாஹிர் மௌலானா

கருணா குழுவிற்கு எதிரான புலிகளின் போர் ஏப்ரல் 09ம் திகதி ஆரம்பித்தது என்று கடந்த இதழில் குறிப்பிட்டிருந்தேன்.

கருணாகுழுவின் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்னர், அவர்களின் பலத்தை புலிகள் மதிப்பிட்டனர். தலைமை செயலக புள்ளிவிபரங்களின்படி 5,750 வரையான போராளிகள் இருந்தனர். ஆனால் இதில் 2,000 பேர் கட்டாயமாக சேர்க்கப்பட்டவர்கள். இவர்கள் இதுவரை துப்பாக்கியால் சுட்டே இருக்கமாட்டார்கள்.

ஏற்கனவே 200 வரையானவர்கள் வன்னிக்கு தப்பி சென்றுவிட்டனர். இவர்களைவிட ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள், இரண்டு பக்கத்தையும் சாராமல் நடுநிலை வகித்து




ஒதுங்கியிருக்க முடிவு செய்தனர். அவர்ளை ஒன்றாக்கி சந்திப்பொன்றை நடத்தினார் கருணா. ஆனால் அவர்கள் யாரையும் ஆதரிக்க தயாராக இருக்கவில்லை. அவர்களை வைத்து போரிட முடியாது, முக்கியமான கட்டத்தில் காலைவாரி விடுவார்கள் என்பது கருணாவிற்கு தெரியும். அதனால் அவர்களை வீட்டுக்கே அனுப்பி வைத்தார்.

இப்பொழுது 2,500 பேர்தான் கருணாவின் கட்டுப்பாட்டில் உருப்படியாக இருந்தவர்கள். இதைவிட, கட்டாயமாக பிடிக்கப்பட்டவர்கள், இளையவர்கள், காயமடைந்தவர்கள் என 500 பெண்களை ஏற்கனவே வீட்டிற்கு அனுப்பியிருந்தார்கள். தேவை ஏற்பட்டால் மீண்டும் அழைப்போம், எம்மிடம் வரவேண்டுமென்றுதான் அவர்களிற்கு கூறப்பட்டிருந்தது.

கருணாவின் போரிடும் ஆட்களின் எண்ணிக்கை 2,000 ஆக சுருங்கியது.

இதில் 500 வரையானவர்களை நம்ப முடியாத நிலையில் இருந்தார்கள். தனக்கு விசுவாசமான தளபதிகளின் மூலம் செய்த கணக்கெடுப்பில் இவர்களை அடையாளம் கண்டிருந்தார்கள்.

கடும் நெருக்கடியான கட்டத்தில், தன்னிடமிருந்த படையணிகளை கருணா ஏன் குறைத்தார்?

இதற்குஇரண்டுகாரணம்.முதலாவது விசுவாசமாக செயற்படுவார்கள் என்ற உத்தரவாதமில்லாத படையணிகளை கூடவே வைத்திருப்பது ஆபத்தானது. அவர்களிடமிருந்து ஆயுதங்களை களைந்து வீடுகளிற்கு அனுப்பிவிட்டால் சிக்கலிருக்காது. எப்பொழுதும் அவர்களில் ஒரு கண் வைத்திருந்தால் போதும். புலிகள் மட்டக்களப்பிற்குள் புகுந்து திடீரென அவர்களை ஒழுங்கமைக்க முடியாது. அவர்களால் உடனடி ஆபத்து ஏற்படப் போவதில்லை.

ஆனால், இதில் கருணா கவனிக்காமல் விட்ட விசயம் ஒன்றுள்ளது. கருணாவுடன் இணைந்திருக்க விருப்பமில்லாமல் வெளியேறியவர்கள், புலிகளின் இரகசிய அணிகள் உள்நுழையும் போது, அவர்களிற்கு இரகசியமாக உதவ வாய்ப்பிருந்தது. புலிகளின் இரகசிய அணிகளை உள்ளே விடாமல் தடுக்கலாமென கருணா நம்பினார். ஆனால், அதை சில நாட்கள் மட்டுமே செய்யலாமென்பது அவருக்கு தெரிந்திருக்கவில்லை. விடுதலைப்புலிகளின் முக்கிய தளபதியாக இருந்தும், புலிகளின் ஆற்றல் எப்படியானதென்பதை கருணா புரிந்துகொள்ளவில்லை. பொட்டம்மானுடன் இருந்த தனிப்பட்ட தகராற்றினால், புலனாய்வுத்துறையின் ஆற்றலை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அவரிற்கு ஏற்படாமல் போயிருக்கலாம்.

கிழக்கு பிரிவு நடந்ததும், கருணாவின் பேட்டிகள் அடிக்கடி ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருந்தது. எல்லா பேட்டிகளிலும் கருணா தவறாமல் சொன்ன ஒரு விசயம் “புலிகளின் போர் வெற்றிகளிற்கு நான்தான் காரணம். நான் இல்லையென்றால் புலிகளால் அவ்வளவு வெற்றிகளை பெற்றிருக்க முடியாது” என்பது.

இதன்மூலம், புலிகளின் போர்த்தந்திர மூளை பிரிந்துவிட்டதென்ற பிம்பம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. புலிகளால் கருணாவுடன் மோத முடியாதென்ற அபிப்பிராயமும் சிலரிடம் இருந்தது. கருணாவை எமது மண்ணிலிருந்து அகற்றப்போகிறோம் என புலிகள் அறிவித்ததும், கருணாவுடன் மோதி புலிகள் மூக்குடைபட போகிறார் என்று ஒரு பகுதியினர் நினைத்தனர். ஒருவேளை புலிகள் தோற்றுவிட வாய்ப்பிருக்குமோ என்று பதற்றப் பட்டவர்கள் இன்னொரு சாரர்.

அதனால்தான் போர்த்தந்திரத்தில் சிறந்தவர் யார் என்ற கேள்வியெழுந்தது. இந்த கேள்விக்கு, அந்த மோதல் பதில் தந்துவிடுமென்பதால், எல்லோரும் உச்சக்கட்ட டென்ஷனில் மோதலை கவனித்துக் கொண்டிருந்தார்கள். இந்த மோதலில் வெல்பவரே ஈழ யுத்தத்தில் புலிகள் பெற்ற வெற்றிகளின் உண்மையான கதாநாயகன் என்று அர்த்தமாகும் என்றுதான் ஆய்வாளர்களும் எழுதினார்கள்.

புலிகள் மட்டக்களப்பிற்குள் எப்படியெல்லாம் ஊடுருவ வாய்ப்புள்ளதென, தனது தளபதிகளுடன் உட்கார்ந்து ஆலோசனை நடத்தினார். திருகோணமலையில் நிலைகொண்டுள்ள சொர்ணம் தலைமையிலான அணி, வெருகல் ஆற்றை கடந்து வர முயலும், போர் நிறுத்த உடன்படிக்கையை மீறி பொலன்னறுவ பிரதான வீதியால் வருவார்கள், அடர்ந்த காட்டுக்குள் இருந்த பெய்ரூட் பாதையால் (மட்டக்களப்பிற்கும் வன்னிக்குமான இரகசிய காட்டுப்பாதைக்கு புலிகள் வைத்திருந்த பெயர் பெய்ரூட் பாதை) இரகசியமான பதுங்கி வருவர்ர்கள் என்று கருணாவின் தளபதிகள் ஆளாளுக்கு சொன்னார்கள். அத்தனை பாதைகளையும் கவனமாக பார்க்கும்படி கருணா உத்தரவிட்டார்.

கருணாவிடம் சில ஆட்லறிகளும், 120 mm மோட்டார்களும் இருந்தன. அவற்றையும் வெருகல் ஆற்றை குறிவைத்து நிறுத்தினார்கள்.

மட்டக்களப்பிற்கு வரும் பிரதான வீதிகள் அனைத்திலும் கடுமையான சோதனைகள் நடத்தப்பட்டன. அதேபோல கடற்புலிகளின் முகாம்களான வாகரை, பால்சேனை, சாலைத்தீவு ஆகியவற்றிலும் கருணா தனது படையணிகளை நிறுத்தினார்.

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

சிலநாளில் அந்த முகாம்களை அகற்றினார். கடல்வழியாக புலிகளின் பெரும் படையணிகள் நகர முடியாது, அது போர்நிறுத்த மீறலாக அமையும் என்பதால் புலிகள் அப்படியொரு முடிவை எடுக்கமாட்டார்கள் என நினைத்தார். அதேபோல பிரதான வீதிகளாலும் புலிகள் வர முடியாது, ஆயுதங்களுடன் இராணுவ கட்டுப் பாட்டு பகுதிகளிற்குள்ளால் நுழைய முடியாதெனை கணக்கு போட்டார். தனது படையணிகளை, மட்டக் களப்பின் வடக்காக உள்ள கோரளைப் பற்று பகுதியில் நிறுத்தி, கடுமையான பாதுகாப்பு வலயமொன்றை உருவாக் கினார். செங்கலடிக்கு வடக்காக உள்ள பகுதிகள், கடலேரியின் மேற்கு கரை பிரதேசங்கள், தரவைகுடும்பிமலை பகுதிகளை வலுப்படுத்தினால்,கிழக்கை தக்கவைக்கலாமென நினைத்தார்.

ஆனால் புலிகள் போட்டது வேறு திட்டம்.

புலனாய்வுத்துறை, மற்றும் கிழக் குடன் பரிச்சயமுள்ள போராளிகளை இரண்டு,மூன்று பேர் கொண்ட சிறுசிறு குழுக்களாக்கி, மட்டக்களப்பிற்குள் அனுப்பி வைத்தனர். அவர்கள் கிழக் கிற்குள் குழப்பங்களை ஏற்படுத் தினர். மட்டக்களப்பில் முக்கிய பொறுப்புக்களில் இருந்த யாழ்ப் பாணத்தவரை இலக்கு வைத்து கருணா குழு தாக்குதலை ஆரம்பித்திருந்தது. இப்படி இரகசியமாக ஊடுருவி சென்றவர்கள், கருணா அணிக்கு பதிலடி கொடுத்தார்கள். தாக்குதல், பதிலடியென இருதரப்பும் மாறிமாறி தாண்டவமாடியதில் கிழக்கில் பெரும் உயிரனர்த்தங்கள் ஏற்பட்டன.

இந்த ஆடுபுலியாட்டத்தை தொடர விடாமல், புலிகள் கிழக்கை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரும் படை நடவடிக்கையை ஆரம்பித்தனர். அது ஏப்ரல் 09ம் திகதி.

திருகோணமலையில் ஒழுங் கமைக்கப்பட்ட அணிகள், வெருகல் ஆற்றை சிறு தோணிகளில் கடந்து, முகத்துவாரத்தில் இறங்கினார்கள். இந்த தாக்குதலின் முன்னர் புலிகள் இன்னொரு ஏற்பாட்டை செய்திருந்தனர்.

கருணாவின் இரண்டாம் மட்ட தளபதிகள் பலர் புலிகளுடன்தான் இணைந்திருந்தனர். அவர்கள் தொலைத்தொடர்பு கருவிகள் மூலம் கருணா அணியினரை தொடர்பு கொண்டு பேசினார்கள். இந்த பிரிவு கொள்கையினடிப்படையில் ஏற்பட்டதல்ல தனிநபர் பலவீனங் களால் ஏற்பட்டது, அமைப்பை பலவீனப்படுத்தாமல் மீண்டும் இணைந்து கொள்ளுங்கள், மீண்டும் இணைபவர்களிற்கு மன்னிப்பு உண்டு என பேசினார்கள். இதற்கு நல்ல பதில் கிடைத்தது.

கருணா அணியிலிருந்த கீழ்மட்ட போராளிகளில் பலர் தவிர்க்க முடியாமல் அங்கிருந்தவர்கள். தளபதி களை போல அவர்களால் நினைத்த நேரத்தில் மட்டக்களப்பிலிருந்து வெளியேற முடியாது. வசதியில்லை. அதைவிட முக்கிய காரணம், பலருக்கு கிளிநொச்சி தெரியாது. இராணுவ கட்டுப்பாட்டு பகுதிகளிற்குள்ளால் செல்வதில் எப்படியான ஆபத்திருக்கு மென்பது அவர்களிற்கு தெரியா மலிருந்தது. அதனால் ஒன்றும் செய்ய முடியாத நிலையில், கருணா ஆதரவாளர்களை போல தம்மை காட்டிக்கொண்டு இருந்தார்கள்.

தமது பொறுப்பாளர்கள் பலர் கிளிநொச்சிக்கு தப்பி சென்றதை அவர்கள் அறிந்திருந்தனர். தப்பிச் சென்ற பொறுப்பாளர்கள், இப்பொ ழுது தமக்கு எதிர்முனையில் படை யணிகளுடன் வந்து நிற்கிறார்கள். என்றதும், கருணா அணியிலிருந்த பலரின் மனது மாறியது. “உங்களிற்கு எதிராக எம்மால் சண்டைபிடிக்க முடியாது. எந்த முனையில், எத்தனை மணிக்கு வருகிறீர்கள் என்று சொல் லுங்கள். நாங்கள் உங்களுடனேயே இணைந்து கொள்கிறோம்” என்றுதான் பெரும்பாலானவர்கள் சொன்னார்கள்.

வெருகல் முகத்துவாரத்தை புலிகள் கடந்ததும், கருணா அணியிலிருந்த ஒரு





**கருணாவின் அதி தீவிர விசுவாசிகளே பீரங்கி அணியில் இருந்தனர். தாக்குதல் கட்டளைக்காக காத்திருந்தார்கள். அவர்களிற்கு தெரியாமல், அவர்களின் நிலைகளின் பின்பக்கத்தால் இரகசியமாக சென்ற புலிகள், எந்த எதிர்ப்புமில்லாமல் பீரங்கிகளை கைப்பற்றினர். இதற்கு பின்னர்தான் பல்சேனையில் தரையிறக்கம் நடந்தது.**

தொகுதி போராளிகள் புலிகளுடன் இணைந்து கொண்டனர். புலிகளை எதிர்த்தவர்கள் சிறு தொகையினரே. அவர்கள் மீது புலிகள் தாக்குதல் நடத்த, மரணமானவர்கள் போக, எஞ்சியவர்கள் தப்பியோடிவிட்டனர்.

வெருகலில் ஊடுருவும் புலிகளை குறிவைத்து பத்து 120 mm பீரங்கிகளை காட்டுப்பகுதியொன்றில் கருணா அணியினர் மறைத்து வைத்திருந்தனர். புலிகளுடன் இணைந்த கருணா அணியினர், அந்த பீரங்கி நிலைகளை பற்றிய தகவல்களை சொல்லி விட்டனர்.

கருணாவின் அதிதீவிர விசுவாசிகளே பீரங்கி அணியில் இருந்தனர். தாக்குதல் கட்டளைக்காக காத்திருந்தார்கள். அவர்களிற்கு தெரியாமல், அவர்களின் நிலைகளின் பின்பக்கத்தால் இரகசிய மாக சென்ற புலிகள், எந்த எதிர்ப்புமில்லாமல் பீரங்கிகளை கைப்பற்றினர். இதற்கு பின்னர்தான் பல்சேனையில் தரையிறக்கம் நடந்தது.

வாகரையை அண்டிய பகுதிகளை புலிகள் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததும், கருணா அணியினர் ஏ 11 வீதியை கடந்து தொப்பிக்கல காட்டுப்பக்கமாக பின்வாங்கினர்.

வாகரையை இழந்தாலும் பரவாயில்லை, புலிகளை சமாளிக்க முடியுமென கருணா நினைத்தார். அதற்கு போர்நிறுத்த ஒப்பந்தத்தின் சில சரத்துக்கள் உதவுமென நினைத்தார். கருணாவின் பிரதான மறைவிடங்களாக மீனகம், தேனகம், மருதம் மற்றும் தொப்பிக்கல காட்டு பகுதிகளிற்கு புலிகளின் படையணிகள் செல்வதென்றால், மட்டக்களப்பு பொலன்னறுவ வீதியான ஏ 11 வீதியை கடந்து செல்ல வேண்டும். பெருந்தொகையான ஆயுதங்களுடன், அதிகளவான போராளிகள் வீதியை கடப்பது போர்நிறுத்த மீறலாகும், புலிகளால் வீதியை கடக்க முடியாது. அதையும் மீறி கடக்க முயன்றாலும், இராணுவம் அதை அனுமதிக்காது என கருணா கணக்கு பண்ணினார். கருணாவின் கணக்கை உறுதிப்படுத்தும் விதமாக இராணுவமும் ஒரு நகர்வை செய்தது. ஏ 11 வீதியில் அதிகளவான இராணுவம் குவிக்கப்பட்டது.

ஆனால் புலிகள் ஏ 11 வீதியை கடக்க முடிவெடுத்தார்கள். என்ன நடந்தாலும் பரவாயில்லை வீதியை கடப்பதென புலிகள் தீர்மானித்தனர்.

உடனடியாக அரச உயர்மட்டத்திற்கு ஒரு தகவல் அனுப்பினார்கள். “எங்கள் அமைப்பிற்குள் ஏற்பட்ட உள்வீட்டு பிரச்சனையொன்றை சரி செய்து கொண்டிருக்கிறோம். இதில் இராணு வம் நேரடியாகவோ மறைமுகமாகவோ தலையிட்டால் விளைவு பாரதூர மாக இருக்கும். அது போர் நிறுத்த உடன்படிக்கையை முறித்துக் கொண்டாலும் பரவாயில்லை”. இது தான் புலிகள் அனுப்பிய ‘மெசேஜ்.

கருணா விவகாரத்தை புலிகள் எவ்வளவு சீரியசாக எடுத்துக் கொண்டுள்ளார்கள் என்பது அரசாங் கத்திற்கும் தெரிந்திருந்தது. தமது உள்வீட்டு சிக்கலை தீர்ப்பதில் இராணு வம் குறுக்காக நின்றால், அதை வைத்தே புலிகள் சமாதான உடன்படிக்கையை முறித்துவிடலாமென அப்போதைய ரணில் விக்கிரமசிங்க அரசு நினைத் தது. அதனால், ஏ 11 வீதியை கடக்கும் புலிகளை தடுக்காதீர்கள் என்ற உத்தரவை இராணுவத்திற்கு பிறப்பித்தார்கள்.

இந்த சமயத்தில் புலிகளின் இன்னொரு அணி, அம்பாறையின் திருக்கோவிலில் தரையிறங்கியது. அதில் கிழக்கில் முக்கியஸ்தர்கள் பலர் இருந்தனர். திருக்கோவிலில் ஒருநாள் தங்கியிருந்தபடி, மட்டக்களப்பின் கஞ்சிகுடிச்சாறில் இருந்த கருணா வின் தளத்திற்கு தொடர்பை ஏற்படுத் தினார்கள். அங்கிருந்த தளபதிகளிற்கு, இந்த பிளவின் அடி முதல் நுனி வரை புரிய வைத்தனர். வீணாண சகோதர யுத்தம் எப்படியான விளைவை ஏற்படுத்தும் என்பதையும், கருணா இனி தமிழர்களின் விடுதலைக் காக செயற்படும் வாய்ப்பில்லை யென்பதையும் புரிய வைத்தனர். கிட்டத்தட்ட ஒருநாள் முழுக்க இந்த பேச்சுவார்த்தை நடந்தது. முடிவில், கஞ்சிகுடிச்சாறு முகாமில் இருந்த அனைவரும் புலிகளுடன் இணைந் தனர்.

கருணாவின் அரசியல்துறை செயல கமான தேனகம், கரடியனாற்றில் இருந்தது. இராணுவ அணிகள் நிலைகொண்டிருந்த மீனகம்,தரவையில் இருந்தது. கருணாவின் தங்குமிடமான மருதம் முகாம், குடும்பிமலையில் இருந்தது. கஞ்சிகுடிச்சாறு முகாம் புலிகளிடம் வீழ்ந்ததையடுத்து, இத்தனை முகாம்களும் புலிகளின் நேரடி தாக்குதல் இலக்கிற்குள் வந்தன. ஆனால், கஞ்சிகுடிச்சாறு விவகாரம் கருணாவின் காதிற்கு போகவில்லை. காரணம், அத்தனைபேரும் ஒட்டு மொத்தமாக புலிகளுடன் இணைந்து விட்டனரே!

கஞ்சிகுடிச்சாறு முகாமிலிருந்த வர்களிடம் கிடைத்த தகவல்களினடிப் படையில், கருணாவின் மிக முக்கிய மான இரண்டு முகாம்களை புலிகள் குறிவைத்தனர். ஒன்று தரவை. மற்றையது, வடமுனையிலிருந்த முகாம். இந்த வடமுனை முகாமில் தான், விடுதலைப்புலிகளின் புலனாய் வுப்பிரிவு போராளிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கலாமென புலிகள் நம்பினார்கள். (தொடரும்)

19-ம் பக்க தொடர்ச்சி...

வின் பகுதிகளை ஒருவரிடமிருந்து ஒருவர் கைப்பற்றியபோது செய்ததைப் போலவே கிரேக்கப் பகுதிகளில் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் ஒருவரிடமிருந்து ஒருவர் பிராந்தியங்களைக் கைப்பற்றியதும் எதிர்ப்பகுதியினரின் சமய அடையாளங்களை அழித்து அதன்மீது தமது சமயக்கட்டடங்களை கட்டிக் கொண்டார்கள்.



முராட்ரெய்ஸ் பள்ளிவாசலும், மயானமும் ஒரு கிறீஸ்தவ தேவாலயத்தை அழித்தே கட்டியதாக குறிப்பிடப்படுகிறது.

ரோடோஸ் நகரின் கட்டடக் கலையில் இன்றும் ஒத்தமானியக் கட்டடக்கலையின் பாதிப்பு மிகவும் தெளிவாக காணக்கூடியதாக இருக்கிறது.

முராட்ரெய்ஸ் பள்ளிவாசலை தவிர ரோடோஸ் நகரில் வேறு சில இடிந்த பள்ளிவாசல்களையும் காணலாம். அவைகளில் சுலைமான் பள்ளிவாசல் அப்போஸ்தலர்களின் தேவாலயம் இருந்த இடத்தை இடித்து 1522 இல் கட்டப்பட்டது. 1588 இல் கட்டப்பட்ட ரட்ஜப்பாஷா பள்ளிவாசல் ரோடோஸில் ஒத்தமானிய காலத்தில் கட்டப்பட்ட முக்கிய பள்ளிவாசல் என்று கருதப்படுகிறது.

இன்று ரோடோஸின் வெவ்வேறு பாகங்களில் காணப்படும் பனிரெண்டு பள்ளிவாசல்களில் இப்ராஹிம் பாஷா பள்ளிவாசல் மட்டும் தினசரி பாவிப்பில் இருக்கிறது. சுலைமான் பள்ளிவாசல் முக்கிய இஸ்லாமிய கொண்டாட்டங்களுக்காக மட்டும் திறந்து வைக்கப்படுகிறது. சுல்தான் முஸ்தபா பள்ளிவாசல் திருமண வைபவங்களுக்காக பாவிக்கப்படுகிறது.

1980 வரை ரோடோஸில் உத்தியோகபூர்வமான அங்கீகரிக்கப்பட்ட ஒரு முஸ்லீம் சமூகம் இருந்தாலும் அவர்களுடைய இஸ்லாமிய ஷரியா சட்டங்களைப் பாவித்து தனியான முடிவுகள் எடுக்கும் அனுமதி கொடுக்கப்படவில்லை. இத்தாலியர்களின் கையில் ரோடோஸ் இருக்கும் வரை அங்கிருக்கும் முஸ்லீம்களுக்காக ஒரு தலைமை [முப்தி] தெரிவு செய்யப்பட்டார். [1974 இல் கடைசி முப்தி இறந்தார்]

கிரேக்கர்களின் கையில் ரோடோஸ் வந்தபின்பு புதிய முப்தி எவரும் தெரிவு செய்யப்படவில்லை. தற்போதைய நிலையில் அங்கே உள்ள முஸ்லீம்கள் திருமணம்போன்றநிகழ்வுகளுக்காகஒரு இமாமையே பயன்படுத்துகிறார்கள்.

1990 களுக்குபின்புஏற்பட்ட அரசியல் களநிலையும், ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறுபான்மையினரின் உரிமை பாதுகாப்பு கோரிக்கை போன்றவையும் கிரேக்க அரசியல்வாதிகளிடையே மனமாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.

2000 ம் ஆண்டு முதல் ரோடோஸில் வாழும் முஸ்லீம்கள் தங்கள் கலாச்சாரத்தையும், பாரம்பரியங்களையும் பாதுகாக்கவென்று ஒரு அமைப்பை ஏற்படுத்தி இயங்கி வருகிறார்கள். அவ்வமைப்பின் மூலம் துருக்கிய கலாச்சார நிகழ்ச்சிகளும் குரான் வகுப்புக்களும் ரோடோஸில் தற்போது நடாத்தப்படுகின்றன. துருக்கிய மொழி ஒரு பாடசாலை மொழியாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

கிரேக்க துருக்கிய அரசியலின் உயர் மட்டத்தில் இரண்டு நாடுகளுக்கும் இடையே உள்ள கலாச்சார, பாரம்பரியங்களை பற்றிய ஆராய்வுகள் பற்றிய எண்ணங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.


அப் பேச்சுவார்த்தைகளில் முராட்ரெய்ஸ் மயான வளாகத்தை பற்றிய ஆராய்ச்சி திட்டங்களும் முக்கிய இடம்பெறுவதாகத் தெரிகிறது. இந்த வளாகத்தில்தான் 1974 வரை ரோடோஸ் முஸ்லீம் சமூகத்தின் முப்தியின் தலைமை அலுவலகம் இருந்தது. மயானத்திலிருக்கும் சமாதிகளில் பல 16ம் நூற்றாண்டை சேர்ந்தவை. தனித்தனியான முறையில் இவ்விரு நாடுகளும் அம்மயானத்தில் உறங்குபவர்கள் பற்றி நடத்தியிருந்தாலும் இருவரும் சேர்ந்து அப்படியொரு அகழ்வாராய்ச்சியை நடாத்துவது அவசியம். அதன்மூலம் பல முக்கிய சரித்திரச் சம்பவங்களையும் கலாச்சார, சமய நடப்புக்களையும் உலகம் அறிந்து கொள்ளலாம்.

(தொடரும்)






அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் மீது நடத்தப்பட்ட இனவாத தாக்குதலின் பின்னர், அங்கு பிடிக்கப்பட்ட சில படங்கள்.
(படப்பிடிப்பு ஏ.எல்.எம்.சலீம்)



















# 5 சென்றதும் வென்றதும்!



ஜேம்ஸ் குக்

ஊசி, பட்டன், ரிப்பன் போன்ற துணி தைக்க உதவும்பொருட்களை விற்பனை செய்யும் கடை அது. அங்கு 'வேலைசெய்தால், நல்ல வருமானம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில், இளம் வயதிலேயே ஜேம்ஸ் குக் அங்கே சேர்த்து விடப்பட்டார். பிறகு சொந்தமாகத் தொழில் தொடங்கி, பணம் சம்பாதித்து முன்னேறலாம். எந்தப் பொருளுக்கு என்ன விலை என்றெல்லாம் ஆர்வத்துடன் கற்றுக்கொள்ள ஆரம்பித்தார். ஒரு நாள் தொலைதூரத்தில் இருந்து வந்த ஒருவர், சில பொருட்களை வாங்கினார். அவர் கொடுத்த நாணயங்களில் ஒன்று வித்தியாசமாக இருந்தது. அதில், எஸ்எஸ்சி என்னும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அதற்கு 'சௌத் சீ கம்பெனி' என்று சொன்னார்கள். அப்படியென்றால்...

பிரிட்டிஷ் அரசும் சில தனியார் நிறுவனங்களும் ஒன்றுசேர்ந்து உருவாக்கிய ஒரு வர்த்தக அமைப்பு. கப்பல்கள் மூலம் தென் அமெரிக்காவில் பயணம் மேற்கொண்டு, வர்த்தகம் செய்வதற்கு உரிமை பெற்றிருந்தது இந்த நிறுவனம். அவர்கள் தயாரித்த நாணயங்களில் இந்த முத்திரை இருக்கும். அந்த நாயணத்தைப் பார்த்ததும் அமெரிக்கக் கனவு காண ஆரம்பித்துவிட்டார் ஜேம்ஸ் குக். அதற்குப் பிறகு ஊசி, நூல், பட்டன் மீது அவர் மனம் போகுமா?

18 வயது ஆனபோது, குக்கின் கனவு நிறைவேறியது. "பால்டிக் கடல் வரை போகிறோம். எடுபிடி வேலை செய்ய வருகிறாயா?" என்று சிலர் கேட்டதும் துள்ளிக்குதித்து ஓடினார் குக். 1755ல் பிரிட்டன், பிரான்ஸ் இரு நாடுகளும் மோதிக்கொண்டபோது, குக் தனது நாடான பிரிட்டனுக்காகப் போரிட, கப்பல் படையில் சேர்ந்தார். கப்பலில் குக் இருக்கிறார் என்றால், பயப்படவேண்டியது இல்லை என்கிற அளவுக்கு உயர்ந்தார். "எங்களுடன் வந்து கப்பலைச் செலுத்துகிறீர்களா? உங்களுக்கு எவ்வளவு பணம் தரட்டும்?" என்று பலரும் ஜேம்ஸ் குக்கைத் தொல்லைப்படுத்தினார்கள்.

ஜேம்ஸ் குக் தேர்ந்தெடுத்தது, 'பிரிட்டிஷ் ரோயல் சொஸைட்டியின் எண்டவர்' என்னும் கப்பலை. அது, பெரிய சரக்குக் கப்பல். பொதுவாக, நிலக்கரியைக் கொண்டுசெல்லவே அதைப் பயன்படுத்தினார்கள். ஆனால், இரண்டு முக்கிய ஆராய்ச்சிக்காக, ஜேம்ஸ் குக் அந்தக் கப்பலுக்கு வரவழைக்கப்பட்டிருந்தார். முதலாவதாக, சூரியனுக்கும் பூமிக்குமான தொலைவைக் கண்டறிய வேண்டும். வீனஸ் கிரகம் இந்த இரண்டுக்கும் இடையில் தோன்றப்போவதாக வானியல் விஞ்ஞானிகள் கணித்திருந்ததால், அந்த நிகழ்வு பற்றி குறிப்புகள் எடுக்க வேண்டும் என்பது முதல் வேலை. இரண்டாவதாக, தெற்கில் ஒரு புதிய கண்டம் இருப்பதாக பல காலமாகப் பேசி வந்தார்கள். அது, உண்மையா எனக் கண்டுபிடிக்க வேண்டும்.

புதிய வழிகளைக் கண்டுபிடிப்பது சரி, வீனஸையும் சூரியனையும் பற்றி அவருக்கு என்ன தெரியும்? ஜேம்ஸ் குக், சிறந்த மாலுமி மட்டுமல்ல. வரைபடங்கள் தயாரிக்கவும் தெரிந்தவர். கார்டோகிராஃபி என இந்தத் துறை அழைக்கப்படுகிறது. போர்க் கப்பலில் பணியாற்றிய அனுபவம் இருந்ததால், அற்புதமான வரைபடங்களைத் தயாரிப்பார். அறிவியலுக்கு அறிவியல், சாகசத்துக்குச் சாகசம் என இரண்டிலும் வெளுத்து வாங்கியவர் குக்.

ஜேம்ஸ் குக்கின் முதல் பெரும் பயணம் 26 ஓகஸ்ட் 1768ல் ஆரம்பமானது. நீண்ட பட்டன் வைத்த வெள்ளைச் சட்டை, நீல நிற மேல் கோட் அணிந்து கம்பீரமாக வந்த ஜேம்ஸ் குக்கை, கப்பலில் இருந்த பணியாளர்கள் சாதாரணமாகத்தான் பார்த்தார்கள். வழக்கம்போல அவரவர் வேலைகளைச் செய்யத் தொடங்கினார்கள்.

"இன்று முதல் நீங்கள் சில புதிய பழக்கங்களைப் பின்பற்ற வேண்டும். தினமும் குளிக்க வேண்டும். யாராவது குளிக்கவில்லை எனத் தெரிந்தால், தண்டனை கிடைக்கும். கப்பலையும் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். சிறு தூசுகூட இருக்கக் கூடாது. வாரத்துக்கு இரண்டு முறை படுக்கை விரிப்புகளை மாற்ற வேண்டும்" என்றார்.

பணியாளர்கள் திருதிருவென விழித்தார்கள். 'இவருக்கு என்ன ஆகிவிட்டது? நான் குளித்தால் என்ன, குளிக்காமல் போனால் என்ன? படுக்கையை மாற்றினால் என்ன, தலைகீழாகப் போட்டு படுத்தால் என்ன?' என்று சிணுங்கிக்கொண்டே குளித்தார்கள். இதோடு விட்டாரா? பை நிறைய எலுமிச்சம் பழங்களைக் கொண்டுவந்திருந்தார் ஜேம்ஸ் குக். அதை எல்லோரும் குடித்தே தீர வேண்டுமாம். 'அடக் கொடுமையே! இவருக்கு உண்மையிலேயே கப்பல் பற்றி ஏதாவது தெரியுமா தெரியாதா?' என்று நினைத்தார்கள்.

ஜேம்ஸ் குக், தன் கடமையை மறந்துவிடவில்லை. கானரி, கேப் வெர்டே தீவுகள், ரியோ டி ஜெனிரோ ஆகியவற்றைக் கடந்து, தென் அமெரிக்காவில் உள்ள 'கேப் ஹார்ன்' பகுதியைச் சுற்றிவந்து, 13 ஏப்ரல் 1769ல் 'டெஹிடி' என்னும் இடத்தை வந்தடைந்தது எண்டவர் கப்பல். வீனஸை அங்கே ஆராயலாம் என்பது திட்டம். ஆனால், சூரியக் கதிர்கள் பலமாக இருந்ததால்; கண்களுக்கு எதுவுமே தெரியவில்லை. ஜேம்ஸ் குக் சோர்ந்துவிடவில்லை. அந்தப் பணிக்குப் பதில், அருகில் உள்ள பழங்குடி மக்களின் வாழ்க்கைமுறையை ஆராய்ந்து குறித்துக்கொண்டார்.

அடுத்து, புதிய கண்டத்தைக் கண்டடைவதற்கான பயணம் ஆரம்பமானது. இந்தப் பயணம் ஏமாற்றம் அளிக்கவில்லை. விரைவில், புதிய பகுதியைக் கண்டறிந்தார்கள். அந்தக் கண்டத்தின் ஒரு பகுதி நியூஸிலாந்து. ஜேம்ஸ் குக் குதூகலம் அடைந்தார். நியூஸிலாந்து இரண்டு தீவுகளாக இருப்பதைக் கண்டார். மவோரி பழங்குடி மக்கள் தங்கள் முகத்தில் ஏதேதோ உருவங்கள் வரைந்திருந்ததைப் பார்த்து ஆச்சர்யத்துடன் விசாரித்தார். அதுபோல குக்கின் ஆட்கள் வரைந்துகொண்டார்கள். பச்சை குத்திக்கொள்ளும் வழக்கம் (டாட்டூஸ்) மேற்கு உலகுக்கு அறிமுகமானது இப்படித்தான்.

ஜேம்ஸ் குக் மிகக் கவனமாக நேரம் செலவிட்டு, பிளைமவுத் துறைமுகத்தில் இருந்து நியூஸிலாந்து வரையிலான வழித்தடத்தை வரைபடமாகத் தீட்டினார். எங்கு, எந்தத் திசையில் திரும்ப வேண்டும், என்னென்ன தீவுகளை அல்லது பிரதேசங்களைக் கடக்க வேண்டும், எந்தக் கடல் பகுதி எங்கே பிரிகிறது, அதன் சிறப்புத் தன்மைகள் என்ன என்பதை வரைந்துகொண்டார்.

ஜேம்ஸ் குக் உண்மையிலேயே விஷயம் தெரிந்தவர்தான் என்பதை உணர்ந்துகொண்ட கப்பல் பணியாளர்கள், "ஐயா, எல்லாம் சரி. நாங்கள் தினமும் குளிக்க வேண்டும் என எதற்காகச் சொன்னீர்கள்?" என்று கேட்டார்கள். ஜேம்ஸ்குக்சிரித்தபடியே, "சுத்தமாக இருந்தால், ஆரோக்கியமாக இருக்கலாம். குளிக்காமல் அழுக்காக இருந்தால், பலவித நோய்கள் தொற்றிக் கொள்ளும். உங்களுக்கு அப்படி நடக்கக் கூடாது" என்றார் அக்கறையுடன்.

(பயணம் தொடரும்...)

இங்கிலாந்தில் உள்ள யார்க்ஷையர் என்னும் பகுதியில், 27 அக்டோபர் 1728 அன்று ஜேம்ஸ் குக் பிறந்தார்.

ஜேம்ஸ் குக் உருவாக்கிய வரைபடங்கள், 20-ம் நூற்றாண்டு வரை பயன்படுத்தப்பட்டு வந்தது. துல்லியமாகவும் தெளிவாகவும் அவர் இடங்களைக் குறித்திருந்தார்.

ஜேம்ஸ் குக் வழியில் பயணம் மேற்கொண்ட பலர், பல்லாயிரக்கணக்கான பழங்குடி மக்களைக் கொன்று குவித்தனர். கடல் பயணங்களால், இத்தகைய அழிவுகளும் ஏற்பட்டன.




முதல் பயணத்தில் குக்குடன் பயணம் செய்தவர்கள் 100 பேர். புதிய மரம், செடிகளைக் கண்டறிவதற்காக, சில தாவரவியல் நிபுணர்களும் வந்திருந்தனர். அவர்கள், பல தாவரங்களைச் சேகரித்து எடுத்து வந்தார்கள்.


'எண்டவர்' கப்பலில் வந்திருந்த பலருக்கு டெஹிடி பகுதி மிகவும் பிடித்துவிட்டது. 'இங்கேயே இருந்துவிடுவோமா?' என்று அவர்கள் குக்கிடம் கேட்டார்கள். ஆனால், குக் அனைவரையும் அழைத்து வந்துவிட்டார்.

# புதிரோடு விளையாடு!

**1** இங்கு உள்ள ஃப்ரேம்கள் ஒன்றோடு ஒன்று மற்ற ஃப்ரேமுடன் பின்னியுள்ளன. மூன்று ஃப்ரேம்கள் மட்டும் எதனோடும் பிணையாமல் தனியாக உள்ளன. அவை எவை?






ஜெ.சந்தோஷ்ராம்



**2** வட்டம், உருளை, அரை வட்டம் எல்லாவற்றையும் கவனமா வெட்டிக்கோ; வெள்ளைத்தாளில் சரியாக ஒட்டி, ஏலியன் பிரதரை உருவாக்கிக்கோ!

**3** மரங்களில் பல பல குரங்குங்க; குரங்குகளில் பல பல வகைங்க; எத்தனை எத்தனை இருக்குங்க; எண்ணி எண்ணி எழுதுங்க!







**4** வீக் எண்டு வந்தாச்சு; மீன் வேட்டைக்குக் கிளம்பியாச்சு; மும்முனைச் சந்திப்பில் நின்னாச்சு; எப்படிப் போகணும் பூனை அண்ணாச்சி?

**5** ரோபோ ரோபோ
ரிப்பேர் பண்ணுவதும் ரோபோ;
நீ போ நீ போ
ரெண்டு பேருக்கும் கலரடிக்க
நீ போ!







**7** பசு அக்கா முழிக்குது; பன்றித் தம்பிங்க துள்ளுது; பார்க்க ஒண்ணாத் தெரியுது; ஆனா, பத்து வித்தியாசம் இருக்குது!




மாணவர் பூங்கா

**விடைகள்**

**1** :17, 19, 23

**2**



**7**




# மாய மனிதன் க்ரிஃபின் 5

VENU VARIATH ஓவியம்: கே.எஸ்.ரகு தமிழில்: ரமேஷ்










# பலூனில் ஒட்டிக்கொள்ளும் பேப்பர் கப்புகள்!

**தேவை:** பலூன்கள், பேப்பர் கப்புகள்

**செய்முறை:** ஒரு பலூனை ஊதி, முடிச்சு போட்டுக்கொள்ளவும். பிறகு, தாள் குவளை (பேப்பர் கப்) ஒன்றை ஊதிய பலூன் மீது அழுத்திவைத்து, கையை எடுங்கள். தாள் குவளை கீழே விழுந்துவிடும். அடுத்து, பலூனை சிறிதளவு தாள் குவளைகளில் இருக்குமாறு வைத்து ஊதி, கையை எடுங்கள். தாள் குவளைகள் கீழே விழாது. பலூனை இன்னும் பெரிதாக ஊதினால், தாள் குவளைகள் பலூன்மீது நன்றாக ஒட்டிக்கொள்ளும். காரணம் என்ன?

இதன் அடிப்படையில், குவளையினுள் உள்ள காற்றின் பருமன் அதிகரிக்கும்போது, குவளைக்குள்ளே அழுத்தம் குறைந்துகொண்டே வரும். வெளிக்காற்றின் அழுத்தம், குவளையின் உள்ளே உள்ள காற்றழுத்தத்தைவிட அழுத்தமாக இருப்பதால், வெளிக்காற்று குவளையின் மீது விசையைச் செலுத்தி, கீழே விழாமல் தாங்கிப்பிடிக்கிறது.

காற்றழுத்தத்தாலும் பாயில் விதி அடிப்படையிலும் குவளைகள் கீழே விழாமல் பலூன் மீது ஒட்டிக்கொள்கின்றன.

ஒன்றுக்கு மேற்பட்ட தாள் குவளைகளைப் பலூனில் ஒட்டிவைத்து ஊதிப் பாருங்கள்... இன்னும் வேடிக்கையாக இருக்கும்.

# சிரிப்பின் கதை

## மிஸ்டர் பீன்

'கொஞ்சம் பெரிய மனிதனாக வளர்ந்த குழந்தை' என்பதுதான் 'மிஸ்டர் பீன்' கதாபாத்திரம். ரோவன் அட்கின்சன் (Rowan Atkinson) உருவாக்கி நடித்த கதாபாத்திரமான மிஸ்டர் பீன், அன்றாடம் நாம் செய்யும் வேலைகளைக்கூட ஒழுங்காகச் செய்யாமல், சொதப்புபவர். பிறருக்கு இடைஞ்சலைத் தந்து, நமக்கு சிரிப்பைத் தாராளமாக வரவழைப்பவர்.

ரோவன் அட்கிசன், 1980ல் ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருந்தபோது, 'மிஸ்டர் பீன்' கதாபாத்திரத்தை உருவாக்கினார். முதலில், 'மிஸ்டர் வையிட்' (Mr.White) என்று பெயர் வைத்தார். பின்னர், ஏதாவது காய்கறிகளோடு தொடர்புடைய பெயர் வைக்கலாம் என்று யோசித்து, 'மிஸ்டர் காலிஃபிளவர்' என்று வைத்தார். அதுவும் பிடிக்காமல், கடைசியாக வைத்த பெயர்தான், 'மிஸ்டர் பீன்.' 1990 முதல் 1995 வரை தொலைக்காட்சியில் 18 கதைகளில்



மிஸ்டர் பீனாக நடித்தார். பிறகு, அனிமேட்டட் தொடராகவும், திரைப்படங்களாகவும் வந்தது. ரோவன் அட்கின்சன், பீனைப் போன்று முகங்களில் சேட்டை இல்லாமல், மிகவும் அழகாக, சொதப்பலான உளவாளியாக 'ஜானி இங்லீஷ்' (Johnny English) என்ற கதாபாத்திரத்தில் இரண்டு திரைப்படங்கள் நடித்திருக்கிறார். இந்தப் படங்கள் ஜேம்ஸ் பாண்டை கேலி செய்பவை.

இங்கிலாந்து நாட்டின் 50 வேடிக்கையான மனிதர்களின் பட்டியலில், மிஸ்டர் பீன் என்கிற ரோவன் அட்கின்சன் இருக்கிறார்.

## மிக்கி மவுஸ்



அறிமுகமான காலத்தில், 'இது குழந்தைகளைப் பயமுறுத்தும்' என்று ரோமானிய அரசால் தடை செய்யப்பட்டவன், இன்று வரை உலகம் முழுவதும் சுட்டிகளின் சூப்பர் ஸ்டாராக இருப்பவன், மிக்கி மவுஸ் (Mickey Mouse). நவம்பர் 18ல், 86வது வயதைக் கொண்டாடுகிறான்.

"உனக்கு, கார்ட்டூன் வரையும் அளவுக்குத் திறமை இல்லை' எனக் கேலி செய்தவர்களுக்கு டிஸ்னி தந்த பதிலடிதான், மிக்கி மவுஸ். முதல் உலகப் போரின்போது, கட்டாய ராணுவச் சேவையில், ஆம்புலன்ஸ் ஓட்டும் பணியில் இருந்தார் டிஸ்னி. அந்த அம்புலன்ஸில், விலங்குகளின் படங்கள் வரையப்பட்டிருந்தன. அதைப் பார்த்து, ஓவியம் வரையத் தொடங்கினார். இவர் சாப்பிட்டு மீதம் போடும் உணவை உண்பதற்காக, சில எலிகள் இவரது வீட்டில் சுற்றிக்கொண்டிருந்தன. அதில் ஒரு எலி, டிஸ்னியின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அதுவே, சாகச எலியாக மாறியது.

நண்பர், அப் ஐவொர்க்ஸ் (Ub Iwerks) என்பவருடன் இணைந்து உருவாக்கிய அந்த எலிக்கு, 'மார்டமர் மவுஸ்' (Mortimer Mouse) என்று பெயர் வைத்தார். டிஸ்னியின் மனைவிக்கு அந்தப் பெயர் பிடிக்கவில்லை. அவர் மாற்றிவைத்த பெயர்தான், மிக்கி மவுஸ். சில படங்களில், மிக்கி மவுஸின் எதிரி கதாபாத்திரத்துக்கு மார்டமர் மவுஸ் என்று பெயர்.


1940ம் ஆண்டு, முழு நீளத் திரைப்படங்களில் தோன்ற ஆரம்பித்த மிக்கி மவுஸ், 9 முறை ஆஸ்கர் விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்டு, ஒரு முறை ஒஸ்கர் விருதையும் வென்றான்.

## ஹைடி

கார்ட்டூன் ரசிகர்களுக்கு நன்கு தெரிந்த ஹைடிக்கு, இப்போது 100 வயதுக்கு மேல் ஆகிறது. ஹைடி கதாபாத்திரத்தைவைத்து சுவிட்சர்லாந்தைச் சேர்ந்த ஜோஹன்னா ஸ்பைரி (Johanna Spyri) எழுதிய புத்தகத்தின் தலைப்பில், 'குழந்தைகளுக்காக வும் குழந்தைகளை நேசிப்பவர்களுக்கும்' என்று குறிப்பிட்டிருந்தார். அன்றிலிருந்து இன்று வரை, குழந்தைகளின் நெருங்கிய தோழியாக ஹைடி விளங்குகிறாள். பின்னர், ஹைடி கதாபாத்திரத்தை வைத்து பல திரைப்படங்கள் வெளிவந்தன. சுவிட்சர்லாந்தில் உள்ள ஒரு முக்கியமான சுற்றுலா இடத்துக்கு, 'ஹைடிலாண்ட்' என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.







## ரொம் அண்ட் ஜெர்ரி

அந்த எலி, பூனைக்குப் பயந்து, ஒரு காருக்குள் ஒளிந்திருக்கும். 'எங்கள் காரில் சுலபமாக ஒளிந்துகொள்ளலாம்' என ஒரு குரல் பேசும், ஒரு கார் விளம்பரம். இதில்தான் முதன்முதலாக ரொம் அண்ட் ஜெர்ரி (Tom and Jerry) அறிமுகமானார்கள். பிறகு, 1940ம் ஆண்டு, இந்த இரு கதாபாத்திரங்களையும் வைத்து, எம்.ஜி.எம் (Metro-Goldwyn-Mayer) நிறுவனம் சார்பாக, வில்லியம் ஹன்னா (William Hanna) மற்றும் ஜோசப் பார்பெரா (Joseph Barbera) 114 தொலைக்காட்சித் தொடர்களை உருவாக்கினார்கள்.

ரொமும் ஜெர்ரியும் முதன்முதலில் Puss Gets the Boot என்ற குறும்படத்தில் அறிமுகமானார்கள். அதில், ரொமின் பெயர் ஜாஸ்பர் (Jasper). ஜெர்ரியின் பெயர், படத்தில் எங்கும் வராது. பின்னர்தான், இருவருக்கும் பெயர் சூட்டப்பட்டது. பழைய ரொமும் ஜெர்ரியும் பேசிக்கொள்ளவே மாட்டார்கள். 2005ம் ஆண்டுக்குப் பிறகு, அவர்களுக்கு குரல் வழங்கப்பட்டது.

ரொமும் ஜெர்ரியும் சேர்ந்து, சண்டையும் துரத்தலுமாக இருந்தாலும் ஒருவர் இல்லாமல் இன்னொருவரால் வாழ முடியாது என்ற அளவுக்கு நண்பர்கள். சில சமயம், ஜெர்ரியை ஆபத்திலிருந்து ரொம் காப்பாற்றி இருக்கிறது.

சிங்கம் மூன்று முறை கர்ஜித்தால் என்ன ஆகும்? ரொமும் ஜெர்ரியும் சண்டை போட ஆரம்பிப்பார்கள் என்று சொல்லும் அளவுக்கு, 'ஹிட்" அடித்த இரட்டை ஹீரோக்கள், ரொம் அண்ட் ஜெர்ரி.




இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்றட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 04.03.2018 அன்று வெளியிடப்பட்டது.